


Follow us:

# தமிழன்
THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 277 பிலவ வருடம், ஆனி மாதம் 31ஆம் திகதி வியாழக்கிழமை (15.07.2021) ஹிஜ்ரி - 1442, துல்ஹஜ் பிறை - 04, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30

## சந்தேகத்துக்குரிய 96 மாதிரிகள்!

### பரிசோதனைகள் ஆரம்பம்

கொழும்பு உள்ளிட்ட பல்வேறு இடங்களில் அடையாளம் காணப்பட்ட 96 சந்தேகத்துக்குரிய கொரோனா மாதிரிகள் தொடர்பான பரிசோதனை நேற்று ஆரம்பமாகியுள்ளது.

திரிபடைந்த கொரோனா வைரஸ் என சந்தேகிக்கப்படும் 96 மாதிரிகள் குறித்து, ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, எதிர்ப்புச் சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞானவியல் நிறுவகம் பரிசோதனைகளை ஆரம்பித்துள்ளது.

02»

## சிற்றாலயங்கள் மீது மன்னாரில் தாக்குதல்

### மூன்று நாட்களில் ஆறு இடங்களில் விஷமிகள் கைவரிசை





•மன்னார் நகர் நிருபர்

மன்னார் பொலிஸ் பிரிவிலுள்ள மூன்று இடங்களில் அமைந்துள்ள கத்தோலிக்க சிற்றாலய சொரூபங்கள் மீது அடையாளந்தெரியாத நபர்களால் நேற்று புதன்கிழமை அதிகாலை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மன்னார் வயல் வீதி பகுதியில் காணப்படுகின்ற இரு சொரூபங்களும் மன்னார் பள்ளிமுனை...

02»

## ஆசிரியர் சங்கத் தலைவர்களை விடுவிக்கக்கோரி வாகனப் பேரணி



படப்பிடிப்பு : பிரதீப் தம்பரகே

### கொழும்பில் போக்குவரத்து ஸ்தம்பிதம்; போராட்டம் தொடருமென தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை!

•நா. தினுஷா

தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள தொழிற்சங்கத் தலைவர்களை உடனடியாக விடுவிக்குமாறு கோரி ஆசிரியர் சங்கம் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் நேற்று கொழும்பில் வாகன எதிர்ப்புப் பேரணியை நடத்தின. இதனால் கொழும்பின் பல இடங்களில் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்தது.

கொழும்பு – தாமரைத் தடாகத்திற்கு அருகிலிருந்து எதிர்ப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், அரச தாதியர் சங்கம், இலங்கை வங்கி ஊழியர் சங்கம் உள்ளிட்ட தொழிற்சங்கத்தினர் இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

தாமரைத் தடாகத்திற்கு அருகிலிருந்து வாகனங்களில் பதாகைகளை காட்சிப்படுத்தி எதிர்ப்பு வாகனப் பேரணியை முன்னெடுத்தனர்.

ஆசிரியர் தொழிற்சங்கங்களின் முக்கியஸ்தர்களை உடனடியாக தனிமைப்படுத்தலிலிருந்து விடுவித்து, அவர்களின் கோரிக்கைகளை செவிமடுக்காத பட்சத்தில் தமது போராட்டத்தை மேலும் விஸ்தரிக்கப்போவதாக ஆசிரியர் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன. அதேசமயம் இதர தொழிற்சங்கங்களையும் ஒன்றிணைத்து பெரும்...

02»

## முல்லையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள தொழிற்சங்க உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம்



•நா. தினுஷா

கொத்தலாவல பல்கலைக்கழக சட்டமூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் தங்களை உடனடியாக விடுதலைசெய்யுமாறு கோரியும் முல்லைத்தீவு விமானப்படை முகாமில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள ஆசிரியர் சங்கம்...

02»

## 10 வீதமானோருக்கு டெல்ட்டா தொற்று

### மருத்துவ அதிகாரிகள் சங்கம் தகவல்

•யோ.தர்மராஜ்

நாட்டிலிருந்து கொரோனா துரத்தியடிக்கப்பட்டுள்ளதென நினைத்து, புத்தாண்டு காலப்பகுதியில் சகல கட்டுப்பாடுகளையும் மறந்து செயற்பட்டதால் அல்பா அலை உருவானது. அந்த அலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், மீண்டும் சகல கட்டுப்பாடுகளையும் மறந்து செயற்பட ஆரம்பிப்பதால் நான்காவது அலையாக டெல்ட்டா உருவாகும் ஆபத்து அதிகரித்துள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

02»

## நாட்டில் பெரும் பொருளாதார நெருக்கடி; அடுத்த ஆண்டில் பட்டினி நிலைமை

### ரணில் எச்சரிக்கை - சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடல் அவசியம் எனவும் தெரிவிப்பு



•நா. தினுஷா

நாடு பெரும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துள்ளது. இந்த நிலை நீடிக்குமாக இருந்தால் அடுத்த வருடம் அரையாண்டாகும்போது பசி, பட்டினி நிலைமைகள் அதிகரிக்கும். ஆகவே, இதுதொடர்பில் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாட வேண்டும் என்றும் நாடாளுமன்றில் விசேட விவாதமொன்று...

02»

## மற்றுமொரு அலை உருவாகும் வாய்ப்பு

சுகாதார பரிசோதகர்கள் தெரிவிப்பு 02»

## விசேட அறிவிப்பு!

வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க 'தமிழன்' தினசரி பத்திரிகை இனி பிரதி சனிக்கிழமைகளிலும் வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். (ஆ–ர்)

## இந்திய நிதியமைச்சர் பெசிலுக்கு வாழ்த்து



நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷவை இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பக்லே நேற்று சந்தித்து அந்நாட்டு நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனின் வாழ்த்துக் கடிதத்தை கையளித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குப் பின்னர் உலகளாவிய பொருளாதார மீட்சி என்ற பின்னணியில் பொருளாதாரத்துறையில் பரஸ்பர நலன்களுடன் தொடர்புடைய பல்வேறு விடயங்கள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

## அறிவியல்நகர் யாழ். பல்கலைக்கு புலிக்குளத்திலிருந்து தண்ணீர்

### அமைச்சர் டக்ளஸ் உறுதியளிப்பு



கிளிநொச்சி மாவட்டம் அறிவியல்நகர் யாழ். பல்கலைக்கழக வளாகத்துக்கு புலிக்குளத்திலிருந்து தண்ணீரை வாய்க்கால் மூலம் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவரும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா உறுதிசெய்தார். 02»

## ஹேமந்த ஹேரத் தனிமைப்படுத்தலில்!

•ம. சசிதரன்

சுகாதார அமைச்சின் பிரதி சுகாதாரப் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

அவரது அலுவலகத்தில் கடமையாற்றும் ஊழியர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியானதைத் தொடர்ந்து அவர் இவ்வாறு தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

பிரதி சுகாதாரப் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் கொவிட் தடுப்பூசிகள் இரண்டையும் பெற்றுக்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 7 நாடுகளின் தூதுவர்களுடன் நிதியமைச்சர் முக்கிய பேச்சு



இலங்கைக்கான வெளிநாட்டுத் தூதுவர்கள் 7 பேருடன் நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ நேற்று விசேட பேச்சு நடத்தினார். இந்தச் சந்திப்பு நிதியமைச்சில் நடைபெற்றது.

சீனத் தூதுவர் கீ சென்ஹோங், ஜேர்மனி தூதுவர் ஹோல்கர் லோதர், ரஷ்யத் தூதுவர் யூரி மேட்டரி, இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, அமெரிக்கத் தூதுவர் அலெய்ன்னா ரெப்லிட்ஸ், ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் டெனிஸ், பிரித்தானிய தூதுவர் சாரா ஹுல்ட்டன் ஆகியோர் இந்தப் பேச்சுகளில் கலந்துகொண்டனர்.

02»



# சுகாதார தரப்பினரின் கோரிக்கைக்கமையவே போராட்டக்காரர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்

## பொலிஸார் மீது பலிசுமத்த வேண்டாம் என்கிறார் அமைச்சர் சரத்

*யோ.தர்மராஜ்*

கொழும்பில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுகாதார தரப்பினரது கோரிக்கைகளுக்கமையவே கைதுசெய்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளதால் பொலிஸார் மீது பழி சுமத்துவது பொருத்தமற்றது - என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அத்தோடு, தனிமைப்படுத்தல் சட்டம் தொடர்ச்சியாக செயற்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல கோரிக்கைகளையும் பல்வேறு காரணங்களையும் முன்வைத்து ஒருசில தரப்பினர் தற்போது போராட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்துள்ளார்கள். போராட்டங்கள் அலைபோல் திரண்டுள்ளதென்றே கூறவேண்டும். எனினும், மக்களின் பேச்சு சுதந்திரம், ஒன்றுகூடல் என்பன ஜனநாயக உரிமையாக காணப்படுகிறது. இதனை அவர்கள் தவறான முறையில் பயன் படுத்துகின்றனர்.

கொரோனா தொற்றானது முழு உலகத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதன் தாக்கத்தை நாங்களும் தற்போது எதிர் கொண்டுள்ளோம். இவ்வாறான சவால்களுக்கு மத்தியில் நாட்டுமக்களின் சுகாதார பாதுகாப்பை கருத்திற்கொண்டு தனிமைப்படுத்தல் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக ஒன்றுகூடல் மற்றும் போராட்டங்களில் ஈடுபடுவதற்கு மறு அறிவித்தல் விடுக்கும் வரையில் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் ஒரு தரப்பினர் கடந்த வாரம் நாடாளுமன்ற சுற்றுவட்டத்தில் தனிமைப்படுத்தல் சட்டத்திற்கு முரணான வகையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள்



கைதுசெய்யப்பட்டனர். எனினும், பொது சுகாதார சேவை அதிகாரிகளின் பரிந்துரை களுக்கமையவே அவர்கள் தற்போது தனிமைப் படுத்தப்பட்டுள்ளார்கள். இதனை தவறென எவராலும் கூறமுடியாது.

கொரோனா தாக்கத்தினால் முக்கிய பண்டிகைகளையும் கொண்டாடாமல் தியாகம் செய்துள்ளார்கள். பண்டிகைகளுக்கு தடை விதிக்கப்பட்டதால் எவரும் வீதிக்கிறங்கி போராடவில்லை. தற்போதைய போராட்டங்கள் குறுகிய நோகக்ங்களை அடிப்படையாகக்கொண்டு காணப்படுகிறது.

போராட்டக்காரர்கள் எல்லை மீறி செயற்பட்டதன் காரணமாகவே பொலிஸார் அவர்களை கைது செய்தார்கள். நல்லாட்சி அரசாங்கம் போராட்டத்தை அடக்கிய வகையில் நாம் செயற்படவில்லை. போராட்டக்காரர்கள் கைதுசெய்யப்பட்டமை மற்றும் தனிமைப்படுத்தப்பட்டமை சுகாதார தாரப்பினரது பரிந்துரைகளுக்கமையவே இடம் பெற்றது. ஆகவே, பொலிஸார் மீது பழி சுமத்துவது பொருத்தமற்றது – என்றார்.







**ஆசிரியர் தொழிற்சங்கத் தலைவர்களை தனிமைப்படுத்தியமை, மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்த எதிர்ப்புப் போராட்டத்தின்போது தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டதன் பின்னர் அவர்களை தனிமைப்படுத்தியமை உள்ளிட்ட காரணங்களுக்காக ஏற்பாடுசெய்யப்பட்ட ஆசிரியர் தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட மேலும் சில தொழிற்சங்கங்களால் ஏற்பாடுசெய்யப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்று கொழும்பில் இடம்பெற்ற போது.. (படப்பிடிப்பு – பிரதீப் தம்பரகே)**

# ‘ஹரீன் கைதாகார்’

## சட்ட மா அதிபர் நீதிமன்றுக்கு அறிவிப்பு

***•யோ.தர்மராஜ்***

**ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ எதிர்வரும் செப்டெம்பர் முதலாம் திகதிவரை கைதுசெய்யப் படமாட்டார் என சட்ட மா அதிபர் நேற்று உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.**

**உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பில் தம்மை கைதுசெய்வதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவ்வாறு கைதுசெய்வதை தடுக்குமாறு உத்தரவிடக் கோரி ஹரின் பெர்னாண்டோ வினால் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.**

**குறித்த மனு மீதான விசாரணையின்போதே சட்ட மா அதிபரினால் நீதிமன்றத்திற்கு இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.**

## மற்றுமொரு அலை...

நாட்டில் தற்போதைய சூழ்நிலையில் மற்றொரு கொரோனா அலை உருவாகக்கூடிய வாய்ப்புள்ளது என பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது.

வைரஸை ஒழிக்க முடியாது என்பதையும் நாங்கள் கொரோனா தொற்றிலிருந்து மீளவில்லை என்பதையும் பொதுமக்கள் புரிந்துகொள்ள வேண்டும். அத்துடன், நாங்கள் கொரோனா தொற்றுடன்தான் வாழும் சகாப்தத்தில் இருக்கிறோம் என அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு கொரோனா தொற்று ஏற்படக் கூடிய வாய்ப்புள்ளது. எனவே, பொதுமக்கள் சுகாதார வழிகாட்டுதல்களை சரியாகப் பின்பற்ற வேண்டும்.

இலங்கையில் மாகாணங்களுக்கு இடையே யான பயணத்தடை ஓரளவு தளர்த்தப்படுவதால் கொரோனா தொற்று மேலும் பரவும் அபாயம் உள்ளது என்று பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது.

பயணத்தடைகளைத் தளர்த்துவதற்கான முடிவின் தாக்கத்தை எதிர்காலத்தில் அறிய முடியும் என சங்கத்தின் செயலாளர் எம்.பாலசூரிய தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய சேவைகளின் ஊழியர்களுக்கு மாத்திரம் மாகாணங்களுக்கிடையே பயணிக்க அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி, மாகாண எல்லைவரை குறிப்பிட்ட பஸ்ஸில் பொதுமக்கள் பயணம் செய்வதாகவும், பயணத்தைத் தொடர மற்றொரு பஸ்ஸுக்கு பயணிகள் மாற்றப்படுவதாகவும் பாலசூரிய தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் , மக்கள் பஸ்ஸிருந்து மற்றொரு பஸ்ஸுக்கு ஏறுவதால் கொரோனா தொற்று ஒருவரிடமிருந்து மற்றொரு நபருக்கு பரவும் சாத்தியக்கூறுகள் தென்படுவதால் புதிய கொத்தணி உருவாகும் அபாயம் உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் இலகுவான முறையில் ஏனைய பிரதேசங்களுக்குப் பரவும் அபாயம் உள்ளது எனவும் சில கட்டுப்பாடுகளை விதிப்பதன்மூலம் கொரோனா தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## 7 நாடுகளின்...

நாட்டின் தற்போதைய நிலைவரம், கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது உட்பட்ட பல விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பின்போது விரிவாக பேசப்பட்டுள்ளது.

## ஆசிரியர் சங்கத்...

போராட்டமொன்றை நடத்தப்போவதாகவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

ஆசிரியர்களின் போராட்டம் காரணமாக மாணவர்களின் இணையவழி கல்வி பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலைமை தொடர்ந்தால் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஏற்கனவே முடங்கியுள்ள மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் மேலும் பாதிக்கப்படுமெ‌ன பெற்றோர் கவலை வெளியிட்டுள்ளனர்.

## சந்தேகத்துக்குரிய ...

இதற்கமைய, எதிர்வரும் சில நாட்களுக்குள் அதன் அறிக்கை வெளியிடப்படவுள்ளது.

கொழும்பு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளி லிருந்து, இந்த திரிபடைந்த கொரோனா வைரஸ் மாதிரிகள், ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத் திற்கு கிடைத்துள்ளன. இந்த கொரோனா வைரஸ், டெல்டா திரிபா அல்லது வேறு திரிபா என்பது குறித்து உறுதியான தீர்மானம் எதிர்வரும் சில நாட்களுக்குள் அறிவிக்கப்படவுள்ளது. டெல்ட்டா தொற்று உறுதியான மேலும் ஆறு பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதையடுத்து இலங்கையில் இதுவரை 24 டெல்ட்டா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள் ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முல்லையில்...

உள்ளிட்ட சிவில் அமைப்புகள் ஆர்ப்பாட்ட மொன்றை நேற்று முன்னெடுத்திருந்தன.

தங்களை உடனடியாக விடுவிக்காவிட்டால் அடுத்தகட்ட எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு செல்லவேண்டி ஏற்படும் என்றும் சுகாதார வழிமுறைகளை பயன்படுத்தி மக்களின் உரிமை போராட்டத்தை அடக்க அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளை கண்டிப்ப தாகவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் ஆர்ப்பாட்டத்தின் போது தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகை யில்,

எங்களை உடனடியாக விடுவிக்காவிட்டால், அடுத்தகட்ட எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு செல்லவேண்டி ஏற்படும். சுகாதார வழிமுறை களை பயன்படுத்தி மக்களின் உரிமைப் போராட் டங்களை அடக்கும் செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

அரசாங்கத்தின் இந்த செயற்பாடுகள் உடனடி யாக நிறுத்தப்பட வேண்டும். எங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் எங்களுக்கு கொரோனா தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, அரசாங்கத்தின் அடுத்தகட்ட நடவடிக்கைகளை அவதானித்தன் பின்னர், நாங்களொரு தீர்மானத் துக்கு வர எதிர்பார்த்துள்ளோம்.

மக்கள் எங்களுக்காக போராடுகிறார்கள். ஆகவே மக்களுக்காக ஒன்றிணைந்து நாட்டில் சுதந்திரம் ஜனநாயகத்தை வென்றெடுப்பதற்காக செயற்படுவோம் என்று சுட்டிக்காட்டினார்.

## சிற்றாலயங்கள்...

பிரதான வீதியில் அமைக்கப்பட்ட சொரூபம் ஒன்றும் உள்ளடங்கலாக மூன்று சொரூபங்கள் மீது கற்கள் வீசி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த சொரூபங்கள் வைக்கப்பட்டுள்ள கண்ணாடிக்கூடுகள் உடைந்து சேதமாகியுள்ளன.

குறித்த விடயம் தொடர்பாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்ட நிலையில் மன்னார் பொலிஸார் மற்றும் குற்றத்தடுப்பு விசேட பிரிவினர் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதேநேரம் கடந்த திங்கள் மற்றும் செவ்வாய்க் கிழமை அதிகாலை மேலும் மூன்று சிற்றாலயங்கள் மீது இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் கடந்த மூன்று தினங்களில் 6 கத்தோலிக்க சிற்றாலயங்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அறிவியல்நகர்...

முன்னதாக 2013ஆம் ஆண்டு, யாழ். பல்கலைக்கழகத்துக்கென அறிவியல்நகர் பகுதியில் 568 ஏக்கர் காணியை அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேசி பெற்றுக்கொடுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தற்போது பல்கலைக்கழகத்துக்கான நீர் விநியோகத்துக்கான ஏற்பாடுகளையும் செய்துகொடுத்துள்ளார்.

புலிக்குளத்திலிருந்து அறிவியல்நகர் வளாகத்துக்கு வாய்க்கால் மூலம் தண்ணீர் பெற்றுக்கொள்ளும் திட்டத்துக்கான அறிவியல்நகர் பல்கலைக்கழக வளாகத்தின் கோரிக்கையை நீர்ப்பாசன அமைச்சர் சமல் ராஜபக்ஷவிடம் கடந்த ஏப்ரல் மாதம் சமர்ப்பித்து அதற்கான அனுமதியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பெற்றிருந்தார்.

இந்தத் திட்டம் பின்னர் கிராமிய வயல்நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிடம் அமைச்சர் சமல் ராஜபக்ஷவால் ஒப்படைக்கப்பட்டு, குறித்த அமைச்சின் செயலாளர் அண்மையில் புலிக்குளம் பகுதிக்கு நேரில் சென்று குளத்தைப் புனரமைப்பதற்கான திட்டம் குறித்து ஆராய்ந்திருந்தார்.

எண்பது மில்லியன் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டிருந்த இந்தத் திட்டத்தை உடனடியாக கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்தும் வகையில், முதற்கட்டமாக குளத்திலிருந்து அறிவியல்நகர் பல்கலைக்கழக வளாகம் வரையிலான வாய்க்காலை புனரமைப்பதென தீர்மானிக்கப்பட்டு, இதற்கென 15 மில்லியன் ரூபா இராஜாங்க அமைச்சினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சுமார் இரண்டு கிலோமீற்றர் நீளத்துக்கு இவ்வாறு வாய்க்கால் மூலம் நீர் அறிவியல்நகர் பல்கலைக்கழக வளாகத்துக்கு எடுத்துவரப்படும்போது, இடையிலுள்ள மலையாளபுரம், பொன்னகர் ஆகிய கிராமங்களின் நிலத்தடி நீர்வளமும் அதிகரித்து கிணறுகளில் நீர்க் கொள்ளளவும் கூடும்.

இந்தத் திட்டத்தின் முன்னேற்ற நிலை குறித்து, மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவரும், கடற்றொழில் அமைச்சரு மான டக்ளஸ் தேவானந்தா, கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருந்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன், யாழ். பல்கலைக்கழகத்தின் பொறியியல், விவசாய, தொழில்நுட்பப் பீடங்களின் பீடாதிபதிகள், முன்னாள் பீடாதிபதிகள், தோட்ட முகாமையாளர் உள்ளிட்டவர்களுடன் மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர், கமநலசேவைத் திணைக்கள உதவி ஆணையாளர், பிராந்திய விவசாய ஆராய்ச்சி மையப் பிரதிப் பணிப்பாளர், துணுக்காய் பிரதேச செயலாளர் உள்ளிட்டோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு முன்னேற்ற நிலை குறித்த விளக்கங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு வழங்கினர்.

## 10 வீதமானோருக்கு...

நாட்டில் 81 வீதமானோர் அல்பா திரிபினாலேயே பாதிக்கப்பட்டுள்ளனர். 10 வீதமானோர் டெல்ட்டா திரிபால் பாதிக்கப்பட் டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடளாவிய ரீதியில் ஸ்தம்பிதமடைந்திருந்த தடுப்பூசி வழங்கும் திட்டம் வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பங்குபற்றலுடன் தற்போது வினைத்திறனாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கடந்த காலத்தில் ஒரேநாளில் ஒரு இலட்சத்து 79 ஆயிரத்துக்கும் அதிகமான தடுப்பூசிகளை வழங்கியிருந்த நிலையில், நேற்று (நேற்றுமுன்தினம்) ஒரே நாளில் 3 இலட்சத்து 37 ஆயிரத்து 445 தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன.

இனிவரும் காலங்களில் எங்களின் உச்சபட்ச வினைத்திறனால் இதனைவிட அதிக எண்ணிக்கையிலான தடுப்பூசிகளை வழங்க முடியும் என எதிர்பார்க்கின்றோம்.

இதேவேளை, தற்போது கொரோனா தொற்று கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டதாகவும் கொரோனா நாட்டிலிருந்து இல்லாதொழிக் கப்பட்டுள்ளதாகவும் நினைத்து மக்களும் துறை சார்ந்தவர்களும் செயற்படுகின்றனர். ஆனால், கொரோனா தொற்றின் ஆபத்து இன்னும் குறையவில்லை. நாளுக்கு நாள் புதிய திரிபுகள் அடையாளம் காணப்படுவதுபோன்று, இலங்கையிலும் புதிய திரிபுகள் அடையாளம் காணப்படுகின்றன.

இரண்டாவது அலையின்போது, நாங்கள் உரிய சுகாதார விதிமுறைகள், சுகாதார முறையினரின் கடின உழைப்பு மற்றும் பொது மக்களின் ஒத்துழைப்புடன் அந்த அலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தோம். எனினும், சகல கட்டுப்பாடுகளையும் மறந்து, கொரோனா நாட்டில் இல்லை என் நினைத்து புத்தாண்டு காலப்பகுதியில் பொதுமக்கள் பொறுப்பற்று செயற்பட்டமையினால் மூன்றவது அலைக்கு முகங்கொடுத்தோம். இந்த மூன்றாவது அலையில் அல்பா திரிபே முக்கிய திரிபாக காணப்பட்டது.

ஆகவே, தற்போது திரிபுகள் தொடர்பாக உரிய ஆய்வுகளை கண்டறியவேண்டியிருந்தது. எனினும், இது குறித்து சுகாதார அமைச்சு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. தற்போதும் டெல்ட்டா திரிபுடன் அதிக நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்தத் திரிபுடன் மேலும் பல நோயாளிகள் சமூகத்திற்குள் இருக்கக்கூடும். ஆகவே, இது குறித்து உரிய ஆய்வுகளை முன்னெடுக்க வேண்டும். இல்லையேல் நான்காவது அலையாக டெல்ட்டா அலை உருவாகும் ஆபத்துள்ளது.

நாடுபூராகவுமிருந்து திரிபுகள் தொடர்பான ஆய்வை முன்னெடுக்க வேண்டும். வாரத்திற்கு ஒரு முறையேனும் திரிபுகள் தொடர்பாக ஆய்வுகளை முன்னெடுக்க வேண்டும்.

நாட்டில் 81 வீதமானோர் அல்பா திரிபினாலேயே பாதிக்கப்பட்டுள்ளனர். 10 வீதமானோர் டெல்ட்டா திரிபினால் பாதிக்கப்பட்டுள்ளனர். டெல்ட்டாவின் தாக்கம் உலகளவில் அதிகரித்துள்ளதால் எதிர்வரும் காலங்களில் டெல்ட்டா அலை உருவாகும் அறிகுறி அதிகமாகவே காணப்படுகின்றது. கடந்த காலங்களில் அனைத்து கட்டுப்பாடுகளையும் மறந்து செயற்பட்டமையினாலேயே அடுத்தடுத்த அலைகள் உருவாக காரணமாக இருந்தது – என்றார்.

## நாட்டில் பெரும்...

நடத்தப்பட வேண்டும் என்றும் முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்ரமசிங்க நேற்று தெரிவித்தார்.

நாட்டில் தற்போதுள்ள நிலைமைகள் தொடர்பில் விளக்கமளித்து வெளியிட்டுள்ள காணொளியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எமது வெளிநாட்டு நாணய இருப்பு 400 கோடி டொலர்களாகும். வருடத்தின் இடைப்பகுதியில் பிணைமுறி கடனை நீக்கினால் 100 கோடி டொலர்கள் குறைவடையும். அவ்வாறாயின் தற்போது எமக்கு 300 கோடி டொலர் மீதமுள்ளது. அதற்கு மேலதிகமாக, எரிபொருள் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படாத 130 கோடி டொலர் நிலுவையிலுள்ளது. தற்போது வணிக வங்கிகளில் டொலர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எமது வங்கிகள் கடனை சந்தித்துள்ளன.

ஆனால், அதுதொடர்பான கணக்கறிக்கைகள் வெளியிடப்படவில்லை. எங்களுக்குக் கிடைக்கும் தகவலுக்கமைய 300 கோடி டொலர் கடன் உள்ளது. அவ்வாறாயின், 430 கோடி டொலர் கடனை செலுத்தவேண்டியுள்ளது.

எம்மிடம் 300 கோடி டொலரே இருக்கிறது. அந்த 300 கோடி டொலரில் இவ்வருட இறுதிக்குள் 100 கோடி டொலருக்கு அதிகமான தொகை திறைசேரி முறிகள் செலுத்தவேண்டியுள்ளது. அவ்வாறாயின் எமக்கு எதுவும் எஞ்சப்போவதில்லை.

இறக்குமதி செய்வதற்கான நிதி எம்மிடம் இல்லை. அதனால் இறக்குமதிகள் மட்டுப்படுத்தப் பட்டுள்ளன. உரம் கொள்வனவு செய்வதற்கான நிதியும் இல்லை. சகலருக்கும் தேவையான அளவு கொரோனா தடுப்பூசிகளைக் கொள்வனவுசெய்வதற்கான நிதி இல்லாமையின் காரணமாகவே, 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத் தடுப்பூசி வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறானவொரு சூழ்நிலையிலேயே நாடு இருக்கிறது.

எங்கும் நிதி கிடைக்கவில்லை. குறுகிய கால கடனே எமக்குக் கிடைத்துள்ளது. அவற்றை மீண்டும் செலுத்தவேண்டியுள்ளது.

அண்மையில், 6 ஆயிரத்து 500 கோடி ரூபாவை தமது 194 அங்கத்துவ நாடுகளுடன் பகிர்ந்துகொள்ள சர்வதேச நாணய நிதியம் தீர்மானித்திருந்தது. அதனால், எமக்கும் 80 கோடி டொலர் உதவித் தொகையாகக் கிடைக்கும். இவ்வருடத்துக்கு அந்த நிதியும் எமக்கு போதாது. மேலும் பணம் எமக்குத் தேவைப்படுகின்றது.

அரசாங்கம் வேறு பிரிவுகள் அல்லது விசேடமாக சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி அடுத்த இரண்டு, மூன்று வருடங்களுக்குத் தேவையான நிதித் தொகையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே எனது யோசனை.

சர்வதேச நாணய நிதியத்தின் சான்றிதழ் கிடைத்ததும் இந்தியா, ஜப்பான், சீனா போன்ற நாடுகளிடமிருந்தும் எமது நிதி பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இல்லாவிட்டால், அடுத்த வருட மத்திய பகுதியில் தொழிலற்ற நிலை, பசிக் கொடுமை என்பன அதிகரிக்கும். அதனால், இதுதொடர்பில் நாடாளுமன்றத்தில் விசேட விவாதமொன்றை நடத்துமாறு யோசனையொன்றை முன்வைக்கவுள்ளேன். நாட்டின் நிதி நடவடிக்கைகளின் முகாமைத்துவம் நாடாளுமன்றத்திலேயே இருக்கிறது. நாடாளுமன்ற யோசனைகளுக்கமையவே மத்திய வங்கி மற்றும் திறைசேரிக்கும் செயற்பட முடியும். அதற்கு மேல் சென்று செயற்பட முடியாது. அந்தச் சலுகைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டிய பொறுப்பு நாடாளுமன்றத்துக்கு இருக்கிறது.

# அரசாங்கத்தின் இரட்டை முகம் வெளிச்சம்; யாருடைய தேவைக்கு உரம் இறக்குமதியானது?

## ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி

நாட்டுக்கு 10 ஆயிரம் மெற்றிக் தொன் உரம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. அது எப்படி நடக்கும்? இரட்டை முகங்களை அரசாங்கம் வெளிப்படுத்துகிறது. யாருடைய தேவைக்காக இது இறக்குமதி செய்யப்பட்டுள்ளது? - என ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி எழுப்பியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில்,

வாகனங்களை இறக்குமதிசெய்ய தடைவிதிக்கப்பட்டுள்ளது. ஆனால், இரகசியமாக இறக்குமதிசெய்யப் படுகிறது. உரங்கள் தடைசெய்யப் பட்டுள்ளதாக கூறி உரங்களை இறக்குமதி செய்துள்ளனர்.



உரமின்மையால் தெற்கிலுள்ள விவசாயிகள் ஆதரவற்றவர்களாக மாறியுள்ளனர் மற்றும் தேயிலைத் தோட்டங்கள் அழிக்கப்படுகின்றன. தேங்காய் பயிருக்கு உரங்கள் கிடைக்க வில்லை. அப்படியானால், இந்த உரங் களை விவசாய அமைச்சர் யாருடைய தேவைக்கு கொண்டுவந்தார்? பருவ போகத்திற்கே வழங்காதவர்கள் இன்று சில நபர்களின் தேவைக்காக இறக்குமதி செய்துள்ளனர்.

இன்று விவசாயிகளும் நுகர்வோரும் உதவியற்றவர்களாக உள்ளனர். இன்று உர கேள்விக்கு யார் பதிலளிப்பது?

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக பேராயர் ஒரு சிறப்பு அறிக்கையை வெளியிட்டார், இது குறித்து நாங்கள் நீண்டகாலமாக அரசாங்கத்திடம் கூறி வருகிறோம். தாக்குதலில் ஈடுபட்டவர்கள் இன்னும் கைதுசெய்யப்படவில்லை. உண்மையான சூத்திரதாரிகளை கண்டுபிடிக்கும் நோக்கம் இந்த ஆட்சி யாளர்களுக்கு இல்லை. அவ்வாறு உன்மைகளைத் தேடினால் இந்த ஆட்சியாளர்களே மாட்டிக்கொள்வர். கர்தினல் மற்றும் கிறிஸ்தவ சமூகத்தி லிருந்து தப்பிக்கவே ரிஷாட்டை பலிக் கடாவாக்கியுள்ளனர் - என்றார்.




### ஹெரோயினுடன் ஒருவர் கைது – மீகொடை

மீகொடை பொலிஸ் பிரிவில் சிறிமெதுர தோட்டத்தில் நேற்று முன்தினம் நுகெகொடை குற்றத்தடுப்பு பிரிவினரால் பிற்பகல் 12.40 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 5 கிராம் 530 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மீகொடை பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### ஹெரோயினுடன் ஒருவர் கைது – எகொட உயன

எகொட உயன பொலிஸ் பிரிவில் சாமவத்தையில் நேற்று முன்தினம் எகொட உயன பொலிஸாரினால் மாலை 5.15 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 5 கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மொரட்டுவை பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அதேபோன்று, மாலை 5.25 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 4 கிராம் 80 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மொரட்டுவை பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### துப்பாக்கியுடன் ஒருவர் கைது – மல்லாவி

மல்லாவி பொலிஸ் பிரிவில் நட்டகண்டால் பிரதேசத்தில் நேற்று முன்தினம் மல்லாவி பொலிஸாரினால் மாலை 5.50 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட துப்பாக்கியுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நட்டன்டால் பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### துப்பாக்கியுடன் ஒருவர் கைது – கித்துல்கல

கித்துல்கல பொலிஸ் பிரிவில் கிரிகொஹுதென்ன பிரதேசத்தில் நேற்று முன்தினம் கித்துல்கல பொலிஸாரி னால் காலை 8.30 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது உள்நாட்டில் உற்பத்தி செய்யப் பட்ட துப்பாக்கியுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கித்துல்கல பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### கோடாவுடன் ஒருவர் கைது – கந்தான

கந்தான பொலிஸ் பிரிவில் கல எலிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் பேலியகொடை குற்றத்தடுப்பு பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது, ஆயிரத்து 215 லீற்றர் கோடாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஜா – எல பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### மனித கொலை –வண்ணாத்திவில்லு

வண்ணாத்திவில்லு பொலிஸ் பிரிவில் மங்கலபுர பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு 8.15 மணியளவில் கூரிய ஆயுதத்தினால் தாக்கி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

வண்ணாத்திவில்லு பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

### வாகன விபத்து – நிக்கவரெட்டிய

நிக்கவரெட்டிய பொலிஸ் பிரிவில் கட்டுகஸ்தோட்டை – புத்தளம் வீதியில் நேற்று முன்தினம் புத்தளம் நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸொன்று காலை 9.30 மணியளவில் எதிரில் சென்ற மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் விபத்தொன்று ஏற்பட்டுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் நிக்கவரெட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

நிக்கவரெட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

### வாகன விபத்து – கொஸ்கம

கொஸ்கம பொலிஸ் பிரிவில் கொழும்பு – அவி சாவளை வீதியில் நேற்று முன்தினம் அவிசாவளை நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்றிலிருந்து இறங்கிய பயணி பாதையில் முன்னோக்கி பயணித்தபோது பஸ்ஸுடன் மோதியில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த பயணி வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவிசாவளையைச் சேர்ந்த 74 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

### வாகன விபத்து – நாவலப்பிட்டி

நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவில் நாவலப்பிட்டி -வெவோகம பாதையில் நாவலப்பிட்டி நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸொன்று எதிரில் சென்ற லொறியை முந்திச் செல்ல முற்பட்டபோது, எதிரே வந்த மோட்டார் சைக்கிளை கட்டுப்படுத்த முடியாதமையினால் விபத்தொன்று ஏற்பட்டுள்ளது.

இதன்போத படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் நாவலப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

நாவலப்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

### வாகன விபத்து – எப்பாவல

எப்பாவல பொலிஸ் பிரிவில் எப்பாவல - கட்டியாவ வீதியில் நேற்று முன்தினம் கம்மானய பகுதியை நோக்கிப் பயணித்த சைக்கிளொன்று தன் கட்டுப்பாட்டை இழந்து கால்வாய் ஒன்றில் வீழ்ந்ததில் விபத்தொன்று ஏற்பட்டுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த சைக்கிள் ஓட்டுநர் எப்பாவல வைத்தியசாலையில் அனுமிதிக்கப்பட்டபோது உயிரிழந்துள்ளார்.

எப்பாவல பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

### வாகன விபத்து – கொஸ்கொடை

கொஸ்கொடை பொலிஸ் பிரிவில் வத்துரவெல – கொஸ்கொடை வீதியில் நேற்று முன்தினம் வத்துரவெல பகுதியை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளொன்று எதிரே வந்த மற்றொரு மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் விபத்தொன்று ஏற்பட்டுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் இருவரும் பலபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொஸ்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

### ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது – மன்னார்

மோட்டார் சைக்கிளில் போதைப்பொருள் கொண்டு செல்லப்படுவதாக நேற்று முன்தினம் மன்னார் போதைப்பொருள் தடுப்புப்பிரிவு அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய முருங்கன் நகரில் நண்பகல் 12.15 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 420 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

30 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப் பட்டுள்ளார்.

### ஹெரோயின் மற்றும் ஐஸுடன் ஒருவர் கைது – பொலன்னறுவை

காரொன்றில் போதைப்பொருள் கொண்டுசெல்லப் படுவதாக நேற்று முன்தினம் பொலன்னறுவை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய, காலை 6.30 மணியளவில் மன்னம்பிட்டிய பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 57 கிராம் 8 மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் 14 கிராம் 654 மில்லிகிராம் ஐஸுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

உனுப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### ஹெரோயினுடன் ஒருவர் கைது – மிஹிஜய செவன

மிஹிஜய செவன பொலிஸ் பிரிவில் ரன்திய உயன பிரதேசத்தில் நேற்று முன்தினம் மிஹிஜய செவன பொலிஸாரினால் மாலை 5.20 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 6 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மோதரை பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### ஹெரோயினுடன் ஒருவர் கைது – பொரளை

பொரளை பொலிஸ் பிரிவில் காதர் நானாவத்தையில் நேற்று முன்தினம் பொரளை பொலிஸாரினால் பிற்பகல் 12.30 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 5 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொரளையைச் சேர்ந்த 50 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

**தொகுப்பு யோ. தர்மராஜ்**

# இன்றைய ராசி பலன்

**நாள்: 15.07.2021 வியாழக்கிழமை**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

**மேடம்** – பணவரவு உண்டாகும். வணிகம் நல்ல முறையில் இருக்கும். உங்கள் உரிமையானவர்களுடன் நேரத்தை செலவிடுவீர்கள்.

**ரிஷபம்** – உங்கள் விருப்பமான பணிகளில்/பொறுப்புகளில் கடின உழைப்புகளால்வெற்றிகள் சாத்தியப்படலாம். பிறரின் மீது ஆதிக்கம் செய்வதும், பிரச்சினையை ஏற்படுத்தும் உங்கள் கோபத்தை தவிர்ப்பதும் நல்லது.

**மிதுனம்** – கூடுதலான வேலைகளால், பணியிடங்களில் சிறிய பிரச்சினைகளில்உடல், மனம் சோர்வடையலாம். தம்பதியருக்குள் உறவும், நண்பர்களின் உதவிகளும் விரிவடையலாம்

**கடகம்** – திருமண விடயங்களில் நிலைமை சீராகும்.ஊடக நடவடிக்கையில்உள்ளோர் சிறப்புகளைபெறலாம். வியாபாரத்தில் புதிய அணுகுமுறை ஏற்படலாம்.

**சிம்மம்** – கல்வியில் சிறப்பு உண்டாகும்.சிறிய பிரச்சினைகள் தோன்றி மறையும்.இறைவணக்கம் நன்மை.

**கன்னி** – வேலைத் தளங்களில் திறமைக்கு அங்கீகாரம் பெறலாம்.இறையருளால் இனியநாளாக அமையலாம்.

**துலாம்** – உடல்நலத்தில் கவனம் தேவைப்படலாம். புதிய தொழிலுக்கான நிதி ஒதுக்கீடுகளில், செலவினங்களில் நன்கு ஆராய்ந்து செய்வது நன்மை.

**விருச்சிகம்** – வணிகர்களுக்கு நல்ல நாளாக அமையலாம். எண்ணங்கள் ஆக்கம்பெறலாம். வீடு/காணிசம்பந்தப் பட்ட விடயங்களில் நல்ல நிலை உருவாகலாம்.

**தனுசு** – வணிகர்கள் புதிய எண்ணங்களைநிறைவேற்றலாம். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை உண்டாகும். வருவாய் விடயங்களில் மேன்மை உண்டாகும்.

**மகரம்** – பணியிடங்களில் உயர்நிலைகளில் இருப்பவர்களின் கருத்துகளையும் தவிர்த்து, நிர்வாகத்தில் இருப்போரால் மதிப்பு/உயர்வு உண்டாகலாம்.

**கும்பம்** – இறை வணக்கத்துக்கு முதன்மை தந்து பிரச்சினைகளின்தாக்கங்களை குறைத்து கொள்ளலாம். வழக்குகள் மற்றும்வேலைத் தளங்களில்கவனம் தேவைப்படலாம்.

**மீனம்** – பங்குச்சந்தை மற்றும் சிறுதொழில்கள்நன்மை உண்டாகும். பணிகள் தேடுவோர் நல்ல செய்தி கிடைக்க பெறுவார்கள்.

# மேலதிக சொலிசிட்டர் ஜெனரல்கள் 07 பேர் ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நியமனம்

சட்டமா அதிபர் திணைக்களத்தின் 07 மேலதிக சொலிசிட்டர் ஜெனரல்கள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால், ஜனாதிபதி சட்டத் தரணிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரசியலமைப்பின் 33 (ஈ) பிரிவின்கீழ் சட்டத் தரணி தொழில்வாண்மையில் விசேட தரநிலைக்கு உயர்ந்துள்ள, தொழில் நடவடிக்கைகளில் நேர்மை யானவர்களும், சிறப்பு வாய்ந்தவர்களுமான சட்டத்தரணிகளை ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நியமிப்பதற்கு, ஜனாதிபதிக்கு அதிகாரமளிக்கப் பட்டுள்ளது.

அந்த வகையில், மேலதிக சொலிசிட்டர் ஜெனரல்களான மிலிந்த குணதிலக்க, ஹரிப்பிரியா ஜயசுந்தர, விக்கும் ஆப்ரூ, சானக்க விஜேசிங்க, ரவிந்திர பத்திரனகே, நெரின் புள்ளே மற்றும் சேத்திய குணசேகர ஆகியோர் ஜனாதிபதி சட்டத் தரணிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிய ஜனாதிபதி சட்டத்தரணிகள் விரைவில் சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளவுள்ளதுடன், இந்த நியமனங்கள் உயர் நீதிமன்றத்தின் பதிவாளரிடம் நேற்று கையளிக்கப்பட்டுள்ளன.

# சட்டவிரோதமாக மது உற்பத்திசெய்த இடம் பொலிஸ் அதிரடிப்படையினரால் சுற்றிவளைப்பு

## முத்துராஜவெலவில் 26 பெரல்களும் மீட்பு





பொலிஸ் துறையில் ஸ்தாபிக்கப்பட்ட படகில் சென்று சுற்றிவளைப்புகளை முன்னெடுக்கும் பொலிஸ் அதிரடிப்படையினரால் முதன்முதலாக முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்பின் போது முத்துராஜவெல பகுதியில் சட்ட விரோதமாக உற்பத்தி செய்யப்பட்ட மதுபானம் மற்றும் கோடா அடங்கிய 26 பெரல்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்தப் படகில் சென்று சுற்றிவளைப்பை முன்னெடுக்கும் பிரிவினரால் இனிவரும் காலங்களில் குளம், ஆறு போன்றவற்றில் முன்னெடுக்கப்படும் சட்டவிரோத செயற்பாடுகள் சுற்றிவளைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2021, ஜூலை 15ஆம் திகதி, வியாழக்கிழமை

# பதிலளிக்க வேண்டும் அரசு!

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளமை குறித்து பேராயர் மெல்கம் ரஞ்சித் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதிக்கு எழுதியுள்ள 20 பக்கக் கடிதத்தில் உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுக்குக் காரணமானவர்கள் - அதனை திட்டமிட்டவர்களுக்கு முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் உரிய நடவடிக்கைகளை எடுத்து அதனை தடுத்துநிறுத்தாமல் தங்கள் கடமைகளை வேண்டுமென்றே புறக்கணித்தவர்களை நீதியின்முன் நிறுத்தும் விடயத்தில் அரச இயந்திரம் மிகவும் மெதுவாக செயற்படுவது குறித்து உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதிக்கான கத்தோலிக்க குழு ஏமாற்றமடைந்துள்ளதென அவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதை அதிகாரத்திலுள்ளவர்கள் ஏன் தாமதப்படுத்துகின்றனர் அல்லது அலட்சியம் செய்கின்றனர் என பேராயர் மெல்கம் ரஞ்சித் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

தனது பொறுப்பை நிறைவேற்றத் தவறினார் என்பதற்காகவும், அவரது அரசாங்கம் தனது கடமைகளை நிறைவேற்றத் தவறியது என்பதற்காகவும் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவிற்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ள பேராயர் மெல்கம் ரஞ்சித், அரசாங்கம் இந்த விடயத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த பரிந்துரைகள் தொடர்பில் நடவடிக்கைகளை எடுப்பதற்கு கடந்த ஐந்துமாதங்கள் போதுமானவையாக இருந்திருக்கும் என குறிப்பிட்டுள்ளார். அத்துடன், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் குறித்து ஏன் நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை என பேராயர் கேள்வி எழுப்பியுள்ளார்.

பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் அடிக்கடி வெளிவரும் அறிவிப்புகள் குறித்து ஊடகங்களில் முக்கியத்துவம் வழங்கப்பட்டாலும் அவற்றை அரசு கணக்கிலெடுக்கிறதா என்பது தெரியவில்லை. ஆனால், தற்போதைய ஆட்சியாளர்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்க முன்னர் விட்ட வாய்ச்சவடால்கள் அவர்களை இப்போது கேள்விக்குள்ளாக்கிவருகிறது என்பது திண்ணம். உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலின் சூத்திரதாரிகளை கூண்டோடு கைதுசெய்வோம், ஒருவரையும் விட்டுவைக்கமாட்டோமென்று கூறியதால்தான் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வர பேராயர் ஆண்டகை தன் பங்குக்கு செய்யவேண்டியதையெல்லாம் செய்தார். இப்போது 'வளர்த்த கடா மார்பில் பாய்கிறதே' என்று பேராயரை நோக்கி ஆட்சியாளர்களும் ஆட்சியாளர்களை நோக்கி பேராயரும் நோக்கிக்கொள்கின்றனர்.

மதத் தலைவர்கள் ஒரு கட்டத்துக்கு மேல் தங்களை அரசியலுக்குள் ஈடுபடுத்திக்கொள்ளக்கூடாதென்பதற்கு இதனைவிட வேறு எதனையும் உதாரணமாக கூறிவிட முடியாது. அதேசமயம், மதத்தலைவர்களை அரசியலுக்குள் உள்வாங்கிக்கொண்டால் இப்படியான பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டிவரும் என்பதற்கு இதுவொரு நல்ல உதாரணமும் கூட. நடந்தது நடந்துவிட்டது. இனியென்ன மக்கள் மறந்துவிடுவார்களென்று தட்டிக்கழிக்காமல் அரசு ஏற்கனவே அளித்த வாக்குறுதிகளின்படி செயற்படவேண்டும். முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால ஆட்சியின் பங்காளராக இருப்பதால் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமலோ ,அல்லது ரணில் அரசுடன் நெருக்கமாக இருக்கிறாரே என்று அவரை விசாரணைக் குட்படுத்தாமல் அரசு இருக்குமானால் அது அரசின் இரட்டை வேடத்தையே காட்டுகின்றது. அதனையே வேண்டாம் என்கிறார் பேராயர். பேராயர் அரசியல் பேசினாலும் அது இப்போதைய ஆட்சியாளர்களை கேள்விக்குட்படுத்துவதால் நியாயம் கேட்பதால் அவற்றுக்கு அரசு பதிலளித்தாக வேண்டும்.

# விண்வெளி யுகத்தின் மைல்கற்கள்



பணக்காரர்களில் ஒருவரும் பிரிட்டனைச் சேர்ந்தவருமான ரிச்சர்ட் பிரான்ஸன் கடந்த ஞாயிறன்று தனது சகாக்களுடன் புவியின் சுற்றுப்பாதைவரை சென்றுவிட்டுத் திரும்பியிருக்கிறார்.

சுமார் ஒரு மணிநேரம் நீடித்தது இந்தப் பயணம். ரிச்சர்ட் பிரான்ஸனின் யூனிட்டி ரொக்கெட் விமானம், புவியிலிருந்து 86 கி.மீ. உயரம்வரை பறந்து சென்றது. அங்கே விமானக் குழுவினர் 4 நிமிட நேரம் புவியீர்ப்பு விசை இல்லாத நிலையை அனுபவித்துவிட்டுத் திரும்பியிருக்கிறார்கள். இதுவரை விண்வெளிக்கு நூற்றுக்கணக்கான விண்வெளி வீரர்கள் பயணித்திருக்கிறார்கள். விண்வெளி வீரர் அல்லாதவர்களும் பயணித்திருக்கிறார்கள்.

அமெரிக்கச் செல்வந்தரான டெனிஸ் டிட்டோ 2001இல் சர்வதேச விண்வெளி மையத்துக்குச் சென்றபோது, அவர்தான் பணம் கொடுத்து விண்வெளிக்குச் சென்ற முதல் நபர் என்ற பெருமையை அடைந்தார். இதற்காக அவர் செலவிட்ட தொகை இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட ரூ. 400 கோடி. தற்போது பிரான்ஸனின் விண்வெளிப் பயணம் விண்வெளிச் சுற்றுலா என்ற புதுச் சந்தையின் கதவுகளைத் திறந்துவிட்டிருக்கிறது. 2022இல் விண்வெளிச் சுற்றுலா செல்வதற்காக பிரான்ஸனின் நிறுவனத்திடம் 500இற்கும் மேற்பட்டோர் இலங்கை மதிப்பில் தலா ரூ. 2,86,20,750 தொகையைக் கொடுத்து முன்பதிவு செய்திருக்கிறார்கள். இந்தச் சமயத்தில், மனிதர்களின் விண்வெளித் தேடலின் முக்கியமான தருணங்களுள் சிலவற்றை நினைவுகூரலாம்.

### முதல் செயற்கைக்கோள்:

முதல் செயற்கைக்கோளான ஸ்புட்னிக் 1-ஐ சோவியத் ரஷ்யா ஒக்டோபர் 4, 1957 அன்று பறக்கவிட்டது. விண்வெளி யுகத்துக்கும், அந்நாட்டுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான விண்வெளிப் பந்தயத்துக்கும் வித்திட்டது. மனிதர்களால் உருவாக்கப்பட்ட பொருள் ஒன்று விண்வெளிக்குச் சென்றது அதுவே முதன்முறை. ஸ்புட்னிக் என்றால் ரஷ்ய மொழியில் 'சக பயணி' என்று பொருள். கொரோனா தடுப்பு மருந்துக்கும் தங்கள் பெருமைக்குரிய பெயரான 'ஸ்புட்னிக்'கையே ரஷ்யா சூட்டிக்கொண்டதில் வியப்பில்லை.

### நிலவில் முதல் கலம்:

விண்வெளியில் புவியைத் தவிர்ந்த ஒரு விண்பொருளில் தரையிறங்கிய முதல் விண்கலம் என்ற பெயரை சோவியத் ரஷ்யாவின் லூனா 2 பெற்றது. இது ஆளற்ற விண்கலம். செப்டெம்பர் 14, 1959 அன்று இந்தச் சாதனையை லூனா 2 புரிந்தது. மனித அறிவின் கரங்கள் எவ்வளவு தூரம் நீளும் என்பதை உலகுக்கு உணர்த்திய நிகழ்வு இது.

### விண்வெளி நாயகன் யூரி ககாரின்:

நவம்பர் 3, 1957இல் ஸ்புட்னிக் 2 விண்கலத்தில் லாய்க்கா என்ற நாயை சோவியத் ரஷ்யா அனுப்பியது. விண்கலம் திரும்பிவந்தபோது, அந்த நாய் இறந்திருந்தது. இதற்குப் பிறகு விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் முயற்சியில் 4 ஆண்டுகள் கழித்து சோவியத் ரஷ்யா வெற்றிபெற்றது. ஏப்ரல் 12, 1961இல் அனுப்பப்பட்ட வோஸ்டோக் 1 விண்கலத்தில் சென்ற யூரி ககாரின்தான் விண்வெளியில் பறந்த முதல் மனிதர் என்ற சாதனையைப் புரிந்தார். புவியின் சுற்றுப்பாதையில் யூரி ககாரினைச் சுமந்துகொண்டு அந்த விண்கலம் 108 நிமிடங்கள் சுற்றியது. ஒரேநாளில் யூரி காகரின் சோவியத் நாயகனாகவும் உலக நாயகனாகவும் ஆனார்.

### முதல் விண்வெளிப் பெண்:

ஜூன் 16, 1963 அன்று வோஸ்டோக் 6 விண்கலத்தில் சென்றதன் மூலம் 'விண்வெளிப் பயணம் மேற்கொண்ட முதல் பெண்' என்ற பெயரைப் பெற்றார் சோவியத் ரஷ்யாவின் வெலன்டினா டெரெஷ்கோவா. ஏனைய துறைகளைப் போல விண்வெளித்துறையிலும் ஆண்களின் ஆதிக்கமே நிலவிவருகிறது. இதுவரை சுமார் 570 பேர் விண்வெளிக்குச் சென்றிருக்கிறார்கள், இவர்களில் 67 பேர்தான் பெண்கள்.

### பெரும் பாய்ச்சல்:

அதுவரையிலான விண்வெளிப் பந்தயத்தில் சோவியத் ரஷ்யாவே முன்னணியில் இருந்தாலும், நிலவுக்கு மனிதனை அனுப்பி அமெரிக்கா முந்திக்கொண்டது. ஜூலை 20, 1969 அன்று எப்பொலோ 11 விண்கலத்தில் சென்ற நீல் ஆம்ஸ்ட்ராங் நிலவில் காலடி வைத்த முதல் மனிதர் என்ற பெயரைப் பெற்றார். அப்போது, “இது ஒரு மனிதன் எடுத்துவைத்த சிறிய காலடி. ஆனால், மனித குலத்தின் பெரும் பாய்ச்சல்” என்று அவர் அங்கிருந்து பேசியதை உலகம் முழுவதுமுள்ள மக்கள் பெருவியப்புடன் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

### நீண்ட தொலைவு மனிதப் பயணம்:

மிக அதிகத் தொலைவு பயணித்தவர்கள் என்ற சாதனையை நாஸாவின் அப்போலோ 13 திட்டக் குழுவினர், ஏப்ரல் 1970 அன்று புரிந்தனர். நிலவின் மறுபக்கத்துக்கு அவர்கள் சென்றபோது, புவியிலிருந்து 4,00,171 கி.மீ. தொலைவில் இருந்தார்கள். மனிதர்கள் அனுப்பிய செயற்கைக் கோள்கள் இதைவிடப் பல மடங்கு தூரம் பயணித்திருந்தாலும் மனிதர்கள் பயணித்த அதிகபட்ச தொலைவு இதுதான். 51 ஆண்டுகளாகியும் இந்தச் சாதனை முறியடிக்கப்படவில்லை.

### வாயேஜர்களின் அண்டப் பயணம்:

நாற்பத்துநான்கு ஆண்டுகளுக்கு முன்பு சூரியக் குடும்பத்தின் புறப் பகுதியிலுள்ள கோள்களைத் துழாவுவதற்கு மணிக்கு சுமார் 38 ஆயிரம் மைல் வேகத்தில் வொயேஜர்-2, வொயேஜர்-1 என்ற இரண்டு துழாவிகளை (probes) நாஸா அனுப்பியது. எழுபதுகளின் இறுதியில் வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் ஆகிய கோள்கள் குறிப்பிட்ட அமைவில் இருக்கும் என்று கணிக்கப்பட்டது. அருகருகே அப்படி 175 ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் இந்தக் கோள்கள் அமையும் என்பதால், அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, அந்தக் கோள்களை ஆராய்ச்சிசெய்வதற்காக அனுப்பப்பட்டவை அந்தத் துழாவிகள். இந்தத் துழாவிகளுள் இரண்டாவதாக அனுப்பப்பட்ட வொயேஜர்-1 தன் அக்காவையும் முந்திக்கொண்டு முன்னே சென்றுகொண்டிருக்கிறது. 14,19,53,30,000 மைல் தொலைவைக் கடந்து இன்னமும் பயணித்துக்கொண்டிருக்கிறது. மனிதர்கள் உருவாக்கிய பொருட்களில், சூரிய குடும்பத்தைத் தாண்டிச் சென்ற முதலாவது பொருள், விண்மீன்களுக்கு இடைப்பட்ட வெளியில் பயணிக்கும் முதலாவது பொருள் என்ற புகழை 2012 ஒகஸ்ட் 25 அன்று வொயேஜர்-1 பெற்றது.

### பேரண்டத்தைப் பார்க்கும் கண்கள்:

ஏப்ரல் 25, 1990இல் விண்வெளியில் அமைக்கப்பட்ட ஹப்பிள் விண்வெளித் தொலைநோக்கி, மனிதகுலத்தின் விண்வெளித் துழாவலில் பெரும் பாய்ச்சலை நிகழ்த்திக்கொண்டிருக்கிறது. அதுவரை நாம் அறிந்திருந்த பிரபஞ்சத்தின் எல்லையை அது மேலும் நகர்த்தியது. பிரபஞ்சம் விரிந்துகொண்டிருப்பது, பிரபஞ்சத்தின் வயது, கருந்துளைகள் போன்றவை குறித்து மகத்தான கண்டுபிடிப்புகளை நிகழ்த்திக்கொண்டிருக்கும் தொலைநோக்கி அது.

### சர்வதேச விண்வெளி நிலையம்:

2000இல் கட்ட ஆரம்பித்து, 2011இல் முடிக்கப்பட்ட சர்வதேச விண்வெளி நிலையம்தான் விண்வெளியில் மனிதர்கள் உருவாக்கிய மிகப்பெரிய கட்டுமானம். சர்வதேச விண்வெளி நிலையம் புவியை ஒரு நாளைக்கு 16 முறை சுற்றிவருகிறது.

**நன்றி - ஹிந்து**

(இலக்கியத் தந்தை எம்.எச்.எம்.ஷம்ஸின் 19ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது)

# நினைவில் வாழும் ஷம்ஸ்



**தாஸிம் அகமது**



எந்த நாட்டை - எந்த சமூகத்தை - எந்த இனத்தை - எந்த மொழியை எந்தெந்தத் துறையைச் சேர்ந்தவராயிருந்தாலும் அவர் உலகத்துக்காக - சமூகத்துக்காக - இனத்துக்காக - மொழிக்காக - துறைக்காக சிந்தித்து செயற்பட்டவர்களாயிருந்தால் அவர்கள் மறைந்த பின்னரும் அவர்கள் செய்தவை நினைவுகூரப்படும் தருணங்கள் எங்கேயாவது எப்போதாவது வருவது தவிர்க்க முடியாததாகும்.

இலக்கியத்தந்தை எம்.எச்.எம்.ஷம்ஸின் நினைவுகூரலும் அவ்வாறே காலந்தோறும் மீட்டிப்பார்க்கக் கூடிய ஒன்றாகும். எம்.எச்.எம்.ஷம்ஸுடனான அறிமுகம் உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டின் பின்னர் ஏற்பட்ட தாகும். 1979ஆம் ஆண்டு இலங்கையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற 4ஆவது மாநாட்டில் நானும் ஒரு பேராளராக கலந்துகொண்டதனால் அம்மாநாட்டில் வெளியிடப்பட்ட நூல்களும் எனக்கு கிடைத்தது. ஷம்ஸ் அவர்கள் அதில் கலந்துகொண்டதுபற்றி எனக்கு தெரியவில்லை. மாநாடு முடிந்து சிலகாலம் சென்ற பின்னர் அம்மாநாட்டில் வெளியிடப்பட்ட நூல்களுள் பிறைக்கொழுந்து எனும் இஸ்லாமிய சிறுகதைகளின் தொகுப்பு நூல் தேவையென்று ஷம்ஸ், வகவம் ஸ்தாபகச் செயலாளர் கவின் கமலுடன் எனது வீடு தேடி வந்து அறிமுகமானார். ஷம்ஸ் மாஸ்டர் என்று அவரை கவின் கமல் அறிமுகப்படுத்தி வைத்தார். அவருக்கு என்னிடமிருந்த அந்நூலை மகிழ்ச்சியுடன் கொடுத்தேன். அன்றிலிருந்து தொடங்கியதுதான் எமது தொடர்பு.

பின்னர் கவின் கமலும் என்னுடன் தொடர்பிலிருந்த ஏனைய கலை இலக்கிய கர்த்தாக்களும் அவரை ஷம்ஸ் மாஸ்டர் என்றே அழைக்கலாயினர். இலக்கியத் தந்தை ஷம்ஸ் பற்றிய தேடலின்போதும்... அவருடன் உறவாடக் கிடைத்தபோதும் நான் பெற்றுக்கொண்ட இலக்கியத்தகவல்கள் பயன்மிக்கவையாக அமைந்தன. ஒரு சில குறிப்பிட்ட இலங்கை இலக்கிய ஆளுமைகளுள் அவருக்கென தனிச்சிறப்புகள் பல உண்டு. அதில் முக்கியமானது மும்மொழிப்புலமை தமிழ் சிங்களம் ஆகிய மொழிகளில் அவரிடமிருந்த ஆற்றல் காரணமாக இலக்கியம் (பொதுப் பார்வையில்) செழிப்புப் பெற்றது என்று சொன்னால் அது மிகையாகாது. இம்மூன்று மொழி இலக்கியத்துக்கான இணைப்புப்பாலமாக அவர் இயங்கி வந்திருக்கிறார் என்றே சொல்லவேண்டும் இத்தகு ஆளுமை விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரிடமே இருந்தது. இலங்கையில் வந்தது வருகிறது.

தென்னிலங்கை மாத்தறை மாவட்டத்திலுள்ள திக்குவல்லை எனும் கிராமத்தில் முஹம்மது ஹாமீம் - பத்திமா ரஸீனா தம்பதிகளுக்கு புதல்வராக மார்ச் 17, 1940 இல் பிறந்தவர் ஷம்ஸ். இலங்கையின் சிறந்த ஊடகவியலாளரும், கவிஞரும், சிறுகதை மற்றும் நாவலாசிரியருமாவார். அத்துடன், இவர் பல்வேறு மேடை நாடகங்
களையும் இயற்றி அவற்றை நெறிப்படுத்தியுமுள்ளார்.

இலங்கை ஆசிரிய சேவையில் சேர்ந்த இவர், பல உயர் நிலைப் பாடசாலைகளிலும் தமிழாசிரியராகப் பணியாற்றி இறுதியாக மதுராபுரி அஸ்ஸபா முஸ்லிம் பாடசாலையில் தமிழாசிரியராக இருந்து 1992ஆம் ஆண்டின் இறுதியில் ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார். அதன்பின்னர் இலங்கையின் நாளேடான தினகரன் ஆசிரிய பீடத்தில் சில ஆண்டுகள் பணியாற்றினார். இவர் ஒரு கலைப்பட்டதாரி என்பதுடன், திறந்த பல்கலைக்கழகத்தில் ஆங்கில பாடநெறியும் பயின்றவராகும்

1958 - 1959களில் எழுதத் தொடங் கிய எம்.எச்.எம்.ஷம்ஸே கொங்கிரிட் கவிதைகள் எனும் படக் கவிதைகளை அறிமுகம் செய்தவர். இவரது கொங்கிரிட் கவிதைகள் பல பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. அதாவது ஒரு கவிதையை எழுதி அதன் உருவத்தைப்போன்றே அக்கவிதையை சட்டம் கட்டி அச்சட்டத்துக்குள் அகவிதைக்கான வரிகளை அமைப்பது; இது புதுமையாகப் பார்க்கப்பட்டது.

1960களில் வெளியான இன்ஸான் பத்திரிகையே எம்.எச்.எம்.ஷம்ஸிற்கு முகவரியை பெரிதாகப் பெற்றுக் கொடுத்தது. இன்ஸான் பத்திரிகையில் இவருடன் சமகாலத்தில் எழுதியோரில் கலைவாதி கலீல், பண்ணாமத்துக் கவிராயர் ஆகியோர் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவர்களாவர்.

1970 - 80களில் ஆசிரியர் குரல் என்ற தொழிற்சங்கப் பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றிய இவர், சாளரம் என்ற பெயரில் இலங்கை வானொலியில், அவர் நடத்திய இன நல்லுறவுக்கான நிகழ்ச்சித் தொடருக்காக உண்டா விருதினையும், அறிவுத் தாரகை, பல்கலை வித்தகர் போன்ற விருதுகளையும், சமாதான விருதுகள், இலக்கிய விருதுகள் பலவும் பெற்றுள்ளார்.

நீள்கரை வெய்யோன், ஸ்திராக்கி, வல்லையூர்ச் செல்வன், பாஹிரா, அபூ பாஹிம், அஷ்ஷம்ஸ், ஷானாஸ் என்ற புனைப் பெயர்களிலேயே இவர் பத்திரிகைகளிலும், சிற்றேடுகளிலும் எழுதி வந்தார்.

அழகியல் சார்ந்த கவிதைகள், சிறுகதைகள், சிறுவர் கவிதைகள், வாழ்த்துக் கவிதைகள் எழுதி வந்தாலும், இன்ஸானின் பின்னரே ஷம்ஸ், சமூக நோக்குள்ள கவிதைகளையும், கதைகளையும் படைத்திருக்கின்றார்.

முஸ்லிம் முற்போக்கு சிந்தனைகளை விதைப்பதிலும் மூடநம்பிக்கைகளை முறியடிப்பதிலும் முனைப்புடன் அச்சமின்றிச் செயலாற்றிய செயல் வீரர். பெண்களிடமிருக்கும் தங்கநகை பேராசை பற்றி இவர் கிண்டல் பண்ணி எழுதிய கவிதை சுவாரஸ்யமானது. இவரது சமூக செயற்பாடுகளை கொச்சைப்படுத்த முனைந்தவர்களுக்கு பதிலடி கொடுப்பதிலும் சமர்த்தராயிருந்தார்.

இவர் ஒரு கொம்யூனிசக் கொள்கைவாதி என்றவர்களுக்கும்

தொடர்ச்சி 8ஆம் பக்கம்

ப்ரியா ராமநாதன்

நம்மைச் சுற்றியிருப்பவர்களுக்கும், உதவி தேவைப்படுபவர்களுக்கும் உதவவேண்டிய பொறுப்பு நம் ஒவ்வொருவருக்குமே இருக்கின்றது . பிறருக்காக இரக்கப்படும் சுபாவம், மற்றவர்களுக்கு உதவும் மனப்பான்மை ஒருவருக்கமைவதென்பது மாபெரும் வரம்.

பிறருடைய கனவுகளை அடைய நாம் உதவினால் நம் இலக்கை நாம் எளிதாக அடைந்துவிடமுடியும் என்பதுதான் இயற்கையின் நியதி. ஏதொவொருவகையில் அதற்கான பலன் நமக்குக் கிடைத்தே தீரும்.



# தர்மம் லைக்ஸ் வாங்கும்!

“ஒரேயொரு பிஸ்கட் பக்கற்றை கொடுப்பதாக இருந்தாலும்கூட முகக்கவசம் போட்டுக்கொண்டு பொருளைக் கையளிப்பது போன்ற ஒரு புகைப்படம், முகக்கவசத்தை கழற்றி விட்டுக்கொண்டு பொருளைக் கையளிப்பதுபோன்ற ஒரு புகைப்படம், பின்பகுதி தெரிய ஒன்று, சைடுவாக்கில் திரும்பி நின்று ஒன்று, பிஸ்கட் பெட்டியை பலகோணங்களில் zoom செய்தும் செய்யாமலும் என புகைப்படம் எடுத்து அப்டேட் செய்து கடுப்பேற்றும் இவர்கள், தான் செய்யும் உதவியை யார் பெற்றுக்கொள்கிறார்கள் என்பதை காட்டிக்கொள்ளாமல் அவர்களை கௌரவமாக நடத்துகிறார்களாம் எனக் கூறிக்கொண்டு உதவிபெறுவோரின் புகைப்படத்தில் அவர்களது முகத்தில் பலூன் அல்லது பூ ஸ்ரிக்கரை வைத்து மறைத்து இவர்கள் செய்யும் அழிச்சாட்டியம் இருக்கிறதே...”

நம்மால் பிறருக்கு வாழ்க்கையில் நல்ல மாற்றங்கள் ஏற்படலாம், செல்வம் சேரலாம், தைரியம் கூடலாம், நம்பிக்கை ஏற்படலாம், பிரச்சினைகள் தீரலாம். இவையெல்லாமும் அடுத்தவர்மீது ஏற்படும் இரக்கத்தினால் மட்டுமே சாத்தியமாகும். இப்படி பிரதிபலன் பாராது உதவி செய்யும் மரியாதைக்குரிய பலர் நம்மை சுற்றியிருக்கத்தான் செய்கிறார்கள். இன்னும் பலர் மதநம்பிக்கைகளின் அடிப்படையில் பல தர்மகாரியங்களை செய்துகொண்டிருப்பர். அநேகமாக தம்மை யாரென்று காட்டிகொள்ளாதவாறு மேற்கொண்ட உதவிகள் இருக்கும்.

எனினும், இவ்வாறு உதவி செய்யும் மனோநிலையில் இன்று பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதெனலாம். சமூக சேவைகள், நன்கொடை வழங்கல் போன்ற விடயங்களெல்லாம் ஒருகட்டம்வரை “மட்டுப்படுத்தப்பட்ட சிலரால் சில அமைப்புகளால்” செய்யப்பட்டுவந்தவை என்றுகூட கூறலாம். எனினும், சமூகவலைத்தளங்கள் வந்தபின் அது இன்னும் பரவலாக விரிவடைந்திருக்கிறதென்றால் மிகையில்லை. ஒரு சின்ன உளவியலும் இதற்கு காரணம் “maslow’s” தேவை கோட்பாட்டின் அடிப்படையில் ஒரு மனிதனின் எல்லாத்தேவையும் பூர்த்தியானபின் ‘self actualization’ என்கிற ஒரு விடயம் மனதுக்குள் எட்டிப்பார்க்குமாம். அது தனக்கான ஓர் அந்தஸ்தினை தேடிக்கொள்ள, புகழைத் தேடிக்கொள்ள அல்லது தன்னைப்பற்றி நான்குபேர் வியப்பாக பேசுவதை பார்த்து சந்தோஷப்பட்டுக்கொள்கிற மனநிலை !

இந்தவொரு மனோநிலையினை அடைவதற்கான முயற்சியாக பலரும் இந்த சமூகசேவைகள் என்றவொன்றை இன்று கையிலெடுத்துள்ளனர் என்றால் மிகையில்லை. இதில் ஒருசிலருக்கு அதற்கான பயனை ஏதொவொரு வகையில் அறுவடைசெய்துகொள்ள முடிகிறது . அரசியலுக்குள் இறங்கினால் அதுவொரு வாக்காகவோ அல்லது சரியானவோர் இடத்தில் பயன்படுத்திக்கொள்ளும் துருப்புச் சீட்டாகவோ இருக்கும். சிலருக்கு வெளிநாடுகளிலிருந்து பணத்தை வசூல்செய்யும் காரணியாக இருக்கிறது. சிலருக்கு நான் ஆரம்பத்திலேயே கூறியதுபோன்ற இரக்ககுணத்தால் வரும் சேவை மனோபாவத்தை வெளிக்காட்டும் வகையில் அமையலாம். இன்னும் சிலருக்கோ இந்த எந்த நோக்கமும் இல்லை. தான் ஒரு வள்ளல், பெரிய கொடையாளி, இரக்ககுணமுடைய நல்லவர் போன்ற பேரும், புகழும் கிடைத்தால் போதும் என இந்த சமூக சேவையில் இறங்கியிருக்கும் ஒரு கும்பல். இதற்கு இவர்கள் சமூகவலைத்தளங்களை தமக்கு சாதகமான ஓர் ஊடகமாக மாற்றிக்கொண்டுள்ளனர்.

பிச்சைக்காரனுக்கு உணவுப்பொதி கொடுப்பது முதல் தெருவில் நிற்கும் நாயைக் குளிப்பாட்டுவது வரை எல்லாவற்றையும் புகைப்படமாக எடுத்து அதற்குக்கீழ் தனக்குத்தானே புகழ்மாலை சூட்டிக்கொள்ளும் வகையில் எதையாவது எழுதி அப்டேட் செய்துகொள்ளும் பலரை நாம் அனுதினம் கடந்துகொண்டுதான் இருக்கிறோம் இல்லையா?

சேவைச்சாயம் பூசிக்கொண்டாலும் தம்முடைய புகழாரத்தை காட்டிக்கொள்வதுதான் அவர்களது உண்மையான நோக்கம் என்பது அதைப் பார்க்கும் எல்லோருக்கும் புரியும் என்றாலும், யாரோ ஒரு தேவையுள்ளவருக்கு அந்த உதவி கிடைக்கிறதுதானே என்கிறவொன்றை மனதிற்கொள்வதால் அந்த அளப்பறைகளை கண்டும் காணாமல் கடக்கப்பழகியுள்ளனர் பலர். கொரோனாக் காலத்தில்கூட இவ்வாறான பல சம்பவங்களை முகநூல் பக்கத்தில் நாம் கண்டிருக்கக்கூடும். ஒரேயொரு பிஸ்கட் பக்கட்டைக் கொடுப்பதாக இருந்தாலும்கூட முகக்கவசம் போட்டுக்கொண்டு பொருளை கையளிப்பது போன்ற ஒரு புகைப்படம், முகக்கவசத்தைக் கழற்றி விட்டுக்கொண்டு பொருளை கையளிப்பதுபோன்ற ஒரு புகைப்படம், பின்பகுதி தெரியவொன்று, சைடுவாக்கில் திரும்பி நின்று ஒன்று, பிஸ்கட் பெட்டியை பலகோணங்களில் zoom செய்தும் செய்யாமலும், என புகைப்படம் எடுத்து அப்டேட் செய்து கடுப்பேற்றும் இவர்கள், தான் செய்யும் உதவியை யார் பெற்றுக்கொள்கிறார்கள் என்பதை காட்டிக்கொள்ளாமல் அவர்களை கௌரவமாக நடத்துகிறார்களாம் எனக்கூறிக்கொண்டு உதவிபெறுவோரின் புகைப்படத்தில் அவர்களது முகத்தில் பலூன் அல்லது பூ ஸ்டிக்கரை வைத்து மறைத்து இவர்கள் செய்யும் அழிச்சாட்டியம் இருக்கிறதே... அப்பப்பா கரடியே காறித்துப்பும் மொமெண்ட் அது !



இதில் வேடிக்கை என்னவென்றால் அந்த பிஸ்கட் பெட்டியை வாங்கக்கூட வெளிநாட்டிலிருந்து யாரேனும் பணம் அனுப்பியிருப்பார்கள். தசாவதாரம் கமலஹாசனைபோல் எல்லா அவதாரங்களையும் புகைப்படவடிவில் தானே எடுத்துபோட்டுக்கொண்டு, தனக்கான புகழ்மாலையின் இறுதிப்பகுதியில் சின்னதாக உண்மையாகவே பணம் கொடுத்தவரின் பெயரை செருகியிருப்பார்கள் (ஒருவேளை காசுகொடுத்தவனும் facebook இல் இருந்துவிட்டால் , கோபித்துக்கொள்ளக்கூடும் என்ற “நல்” எண்ணம்தான் போலும்.)

இப்படியான சமூக ஆர்வலர்களின்(?!) செயல்களை சகிக்கவியலாமல் யாரேனும் “ஏன் இப்படி பொதுவெளியில் சிறுபிள்ளைத்தனமாக நடந்துகொள்கிறீர்கள்? எனக் கேள்வி கேட்டால், நிச்சயம் அதற்கும் நான்குபேர் “நீங்களும் செய்ய மாட்டீர்கள், செய்பவர்களையும் குறை சொல்லுவீர்கள்'' என பதில் சொல்ல தயாராக இருப்பார்கள். எனவே, “யார் குத்தினாலும், நெல் அரிசியானால் சரி'' என்பதுபோல், கண்டும் காணாமல் சென்றுவிடும் பலருக்கும்கூட நிச்சயம் இதில் உடன்பாடிருப்பதில்லை. ஒருவருக்கு ஒன்றைக்கொடுத்துவிட்டு அதைப் புகைப்படமாக சமூகவலைத்தளத்தில் போட்டுக்கொள்வதென்பதே கஷ்டப்படும் ஒருவனை அசிங்கப்படுத்துவது போன்ற செயற்பாடுதான். நோயுற்றிருக்கும் இளம்வயது நபரொருவருக்கு, அவருக்கு தேவையான சின்னஞ்சிறு உதவியை செய்துவிட்டு, அவரோடு சேர்ந்து நின்று பலகோணங்களில் புகைப்படங்களை எடுத்துக்கொள்ளும் மனநிலையை என்னவென்பது? அப்போது அந்த உதவியை பெற்றுக்கொள்ளும் நபரது எண்ணவோட்டம் என்னவாக இருக்கும் என்பதை சற்றேனும் சிந்தித்துபார்த்திருப்போமா? ஒருவரது தன்மானத்தை நாம் இப்படிக்கொடுத்துக் கெடுப்பதைவிட பேசாமல் இருப்பதே மேல் அல்லவா? வலிந்து திணித்து “நாங்கள் செய்கின்றோம், நாங்கள் செய்கின்றோம்'' என பொய்யான வாக்குறுதிகளுடன் ஒருபக்கத்தில் அரசியல்வாதிகள், இன்னொரு பக்கத்தில் அரசியலுக்கு வரப்போகிறவர்கள், பேரும் புகழும் மிகமிக அவசரமாக கிடைக்கவேண்டும் என பதறிக்கொண்டிருப்பவர்கள் என இதில் பல கும்பல்கள் ஈடுபட்டிருக்கின்றன. இதை நிறுத்துவதற்கு வழியில்லை. ஆனால், நிச்சயம் மாற்றலாம். ஏனெனில், அநேகரது எதிர்ப்புகளின் பின்பே உதவிபெறுவோரின் முகங்கள் புகைப்படங்களில் மறைக்கப்படும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. ஒட்டுமொத்தமாக மாற்றவியலாதுபோனாலும் படிப்படியாகக் குறையலாம்.

வெறும் லைக்குக்காகவும், கமெண்டுக்காகவும் தான் ஒரு சமூகப்போராளி எனக்காட்டிக்கொள்ள அடுத்தவருக்கு உதவிசெய்வது போன்ற புகைப்படங்களை பதிவேற்றும் ஒவ்வொருவரும் “அடுத்தவன் தன்னைப்பார்த்து மனதுக்குள் சிரிப்பானே” என்கிற நெருடலில் தொடர்ந்தும் சுயவிளம்பரம் செய்துகொள்ள தயங்குவான். அண்மையில்கூட யாரோவொரு அரசியல் கட்சியின் ஆதரவாளராக செயற்படுபவர் தன்னுடைய காரிலிருந்து இறங்கி தானமாக பொருட்களைக் கையளிக்க செல்பவர்போல் புகைப்படங்களை எடுத்துக்கொண்டு மீண்டும் அதே பொருட்களை தன்னுடைய காரில் ஏற்றிக்கொண்டு புறப்பட்டுச் சென்ற காட்சியொன்று பதிவாகி சமூக வலைத்தளமெங்கும் வைரலாகியிருந்தமை என்ன மாதிரியான சமூகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம் என்கிற கேள்வியை அநேகரது மனதில் விதைத்திருக்கக்கூடும்.

இதில் மற்றுமொரு வகையினர் பற்றியும் குறிப்பிட்டேயாகவேண்டும். உதவி செய்துவிட்டு அந்த உதவியை பெற்றுக்கொள்பவர் காலம் முழுக்க தமக்கு கட்டுப்பட்டவராகவே இருக்கவேண்டும் என்கிற எதிர்பார்ப்புடையவராக இருக்கும் பலர் அந்த எதிர்பார்ப்பு ஏதேனுமொரு தருணத்தில் பொய்க்கும்போது “என்னால்தான் நீ முன்னுக்கு வந்தாய்! நான் உதவவில்லையென்றால் உன் நிலை என்ன?'' என்பதுபோன்ற வார்த்தைகளை சம்பந்தப்பட்டவரிடமோ, பிறரிடமோ கூறி மனம்நோக செய்துவிடுவர்.

அதுமட்டுமன்றி ஒருவர் மற்றவருக்கு உதவுவதை தடுப்பதற்கென்றே நம்மில் பலர் உள்ளனர். தானும் கொடாது பிறரையும் கொடுக்கவிடாமல் தடுப்பது என்பது மிகப்பெரிய பாவம். இறுதியாக, யாருக்கு உதவுகின்றோம் என்பதைப்பொறுத்தே உதவியானது மதிப்புப்பெறுகிறது. எல்லாம் இருக்கும் ஒருவருக்கு நாம் ஒன்றைக்கொடுப்பது உதவியல்ல. அதற்குபேர் அன்பளிப்பு. உண்மையாகவே ஒருவருக்கு உதவி தேவைப்படுகின்றதா? நாம் செய்யும் உதவியால் சம்பந்தப்பட்டவரது பிரச்சினை தீருமா என்பதையும் ஒருகணம் சிந்தித்துவிட்டு நம் உதவும்பணியை தொடர்வோமாக...

# தலவாக்கலையில் தொழிலாளர்கள் 3ஆவது நாளாகவும் வேலைநிறுத்தம்

## தீர்வு கிடைக்கும்வரை போராட்டம் தொடருமெனவும் தெரிவிப்பு

(தலவாக்கலை நிருபர்)

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ட்றூப், கொரின் தோட்டத் தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்துக்கு எதிராக 3 ஆவது நாளாகவும் நேற்று புதன்கிழமை வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 450இற்கும்மேற்பட்ட தொழிலாளர்கள் வேலைநிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இத்தோட்டத்தில் தொழிலாளர்களுக்கு வழமையாக அறவிட்டுவந்த மரண செலவுக்கான பணம் தற்போது அறவிடுவதில்லை. தொழிலாளர்கள் 100 வீதம் வேலை செய்தால் மட்டுமே அவர்களுக்கு வழங்கப்படும் தேயிலைத் தூள் வழங்கப்படுகிறது. அதில் 2 நாட்கள் குறைந்தாலும் தேயிலைத்தூள் வழங்கப்படுவதில்லை.

ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு உரிய நேரத்தில் பணம் வழங்கப்படுவதில்லை. தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் கூட்டுறவு சங்கப் பணம் கம்பனி வழங்கினால் மாத்திரமே வழங்கப்படும் என்கின்றனர். அண்மையில் ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு தோட்ட நிர்வாகத்தால் வழங்கப்படும் 14 நாட்கள் பணம் இதுவரை வழங்கப்படவில்லை.

போனஸ் விடுமுறையில் இருக்கும் தொழிலாளர்களுக்கு தேயிலைத்தூள் வழங்கப்படுவதில்லை. கோயில் பணம் முறையாக அறவிட்டு வங்கிக்கு அனுப்பப்படுவதில்லை. ஒருநாள் பேருக்கு 20 கிலோ தேயிலை கொழுந்து பறித்தால் மட்டுமே பேர் வழங்குகின்றார்கள். அதில் 2 கிலோ குறைந்தாலும் 900 ரூபா அல்லது 850 ரூபா சம்பளமே கொடுக்கின்றார்கள். தேயிலை மலைகளில் புல் வெட்டுவதில்லை இதனால் தேயிலை மலைகள் காடுகளாக காட்சியளிக்கின்றது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு நிர்வாகத்திற்கும் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் உடனடியாக தோட்ட அதிகாரி பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்கின்றார். நோயாளர்களை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல வாகனம் இல்லை. தோட்டத் தொழிலாளர்களை தோட்ட அதிகாரி சர்வாதிகாரமாக நடத்துகின்றார் என பல்வேறு குற்றச்சாட்டுகளை தோட்ட நிர்வாகத்தின் மீது அத்தோட்டத் தொழிலாளர்கள் முன்வைக்கின்றார்கள். எனவே, அத்தோட்ட அதிகாரியையும் அத்தோட்ட தலைமை குமாஸ்தாவையும் உடனடியாக இடமாற்றம் செய்யக்கோரி இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# மலையக செய்திகள்

thamilanmalayagam@gmail.com

# நக்கில்ஸ் மலைச் சாரலில் சுற்றுலா தகவல் மையம்



(கண்டி)

உலக மரபுரிமைகளில் ஒன்றாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள கண்டி - மாத்தளை மாவட்ட எல்லைகளில் அமைந்துள்ள நக்கில்ஸ் மலைத்தொடரில் சுற்றுலா தகவல் மையமொன்றை அமைக்க மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே நடவடிக்கை எடுத்துள்ளார்.

மேற்படி பிரதேசத்தில் அமைந்துள்ள லக்கலை, இலுக்கும்புற பிரதேசத்தில் அமைந்துள்ள வன பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணியில் சுற்றுலா தகவல் நிலையம் ஒன்றை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

இவ்வைபவத்தில் வனஜீவராசிகள் வனபாதுகாப்பு அமைச்சர் சீ.பீ. ரத்நாயக்கா, மாத்தளை மாவட்ட பாராளுமன்ற அங்கத்தவர்களான பிரமித்த பண்டார தென்னகோன், நாலக்க பண்டார கோட்டேகொட, உற்பட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

அங்கு ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்ததாவது,

சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக சமநிலைத்தன்மை கொண்ட திட்டங்கள் தேவைப்படுகின்றன. அதனை அரசு நன்கு திட்டமிட்டு செயற்படுத்துகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் அறிவுறுத்தலுக்கேற்ப சுற்றாடல் அமைச்சில் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

அந்த அடிப்படையில் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் சுற்றாடல் அமைச்சின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

நக்கில்ஸ் பாதுகாப்பு வனப் பகுதியில் கடந்த காலங்களில் கடுமையான சுற்றுச்சூழல் சேதம் ஏற்படுத்தப்பட்டது - என்றார்.

# இரத்தினபுரியில் செஞ்சிலுவை சங்கத்தினால் பாதுகாப்பு அங்கிகள் வழங்கிவைப்பு




(சிவா ஸ்ரீதரராவ்)

செஞ்சிலுவை சங்கத்தினால் இரத்தினபுரி மாவட்ட கிளையினூடாக பெருந்தொகையான உயிர் பாதுகாப்பு அங்கிகள் நேற்று முன்தினம் சப்ரகமுவ மாகாணஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவிடம் கையளிக்கப்பட்டன.

இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்படும் பிரதேசங்களிலுள்ள மக்களை பாதுகாப்பது குறித்து மேற்படி செஞ்சிலுவை சங்கத்தின் இரத்தினபுரி மாவட்ட கிளையின் ஊடாக பெருந்தொகையான உயிர் பாதுகாப்பு அங்கிகள் மாகாண ஆளுநரிடம் வழங்கப்பட்டன.

அத்தோடு மேற்படி செஞ்சிலுவை சங்கத்தினால் பெருந்தொகையான முதலுதவிப் பெட்டிகளும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது சப்ரகமுவ மாகாண ஆளுநரின் செயலாளர் மஞ்சுலா இதிகாவெல, இரத்தினபுரி மாவட்ட செஞ்சிலுவை சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி சனத் அபேரத்ன உட்பட அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## விலங்குகளை வேட்டையாடியவர் அக்கரப்பத்தனையில் கைதானார்



அக்கரபத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்கரபத்தனை போபத்தலாவை காட்டுப் பகுதியில் விலங்குகளை வேட்டையாடி இறைச்சி விற்பனையில் ஈடுபட்ட நபர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவரிடமிருந்து சுமார் 08 கிலோகிராம் இறைச்சி மற்றும் துப்பாக்கி ஒன்றும் மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கரபத்தனை போபத்தலா மெனிக்பாலம் கால்நடை தேசிய பண்ணையிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



**கண்டி - குருநாகல் பிரதான வீதியில் யட்டிவாவெல பிரதேசத்தில் மாடிக்கட்டடமொன்று சரிந்து விழுந்த இடத்திற்கு விஜயம்செய்த மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே, அதனைப் பார்வையிட்ட பின்னர் உள்ளூராட்சி அமைப்புகளிடமிருந்து முறையாக அனுமதிகள் பெறப்படாது கட்டிடங்கள் அமைப்பதாலேயே இப்படியான அனர்த்தங்கள் நடப்பதாகவும் அதனைத் தடுப்பதற்கு உள்ளூராட்சி அமைப்புகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.**

# அம்பகமுவவில் இன்று தடுப்பூசி ஏற்றப்படும் இடங்களின் விபரம்

(கினிகத்தேனை நிருபர்)

அம்பகமுவ சுகாதார வைத்திய நிலையத்தின் அதிகாரத்திற்குட்பட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை கல்விசாரா ஊழியர்கள் உள்ளடங்கலாக கல்விப் பணிமனை ஊழியர் குழாத்திற்கு முதற்கட்ட கொவிட் தடுப்பூசி 15ஆம் திகதி ஏற்றுவது தொடர்பான பெயர் பட்டியலை சகல பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஹட்டன் கல்வி வலயப்பணிப்பாளர் பி.ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.


முதலாம் கட்ட கொவிட் தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டமானது 15ஆம் திகதி அம்பகமுவ சுகாதார பரிசோதகர் காரியாலயம் மூலமாக கினிகத்தேனை மத்திய மகா வித்தியாலயத்திலும், ஹட்டன் ஸ்ரீபாத மத்திய மகா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்திலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி கினிகத்தேனை மத்திய மகா வித்தியாலயத்தின் கொவிட் தடுப்பூசி ஏற்றும் நிலையத்தில் அம்பகமுவ மத்திய மகா வித்தியாலயம், அம்பகமுவ ஆரம்ப மாதிரி, பிளக்வோட்டர், கூல்போன், தம்மலோகா வித்தியாலயம், தகிகஸ்தென்ன வித்தியாலயம், கினிகத்தேனை மத்திய மகா வித்தியாலயம், கினிகத்தேனை ஆரம்பப் பிரிவு, கினிகத்தேனை பிரிவினா, கொன்வில்ல,எப்பகெந்த, ஹொமாகம, கலவல் தெனிய, கலுகெல்ல,கெல்வராவ, கெலனிகம,கெனிவத் இல 1 மற்றும் 2, கொல்கெனாகம, மாடெனியா, மினுவாந்தெனியா, மொரகெனாகம, மொரட்டுவட்ட , ஸ்ரீநிசங்கமாலா மற்றும் மாதிரி, வெல்கெனா பொல்பெட்டிய, கிரிவெல்தெனிய ஆகிய பாடசாலை ஆசிரியர்களுக்கு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

அதேவேளை, ஹட்டன் ஸ்ரீபாத மத்திய மகா வித்தியாலயத்தின் கேட்போர் கூட கொவிட் தடுப்பூசி ஏற்றும் நிலையத்தில் கல்விப் பணிமனை ஊழியர்கள், எபோஸ்ரிலி, ஆக்ரஓயா,பின்னோயா இல 2, காப்பேஸ், கரோலினா,கிலவெட்டன், புருட்கீல், கணேசா, ஹைலன்ஸ் மத்திய வித்தியாலயம், கடவளை, குடோஓயா மகாவெலி, குயில்வத்த, லோனக், மலைமகள், மௌன்ஜீன், ஒஸ்போன் பாடசாலை, பன்மூர், பிட்டவீன், செனன், ஸ்ரீபாத, ஸ்ரீவாணி, சென் கெப்ரியர், சென். ஜோன் பொஸ்கோ, வெலிஓயா இல 1 மற்றும் 2, வட்டவளை சிங்கள வித்தியாலயம் மற்றும் வட்டவளை தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலை ஆசிரியர்களுக்கு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# நுவரெலியா மாவட்ட ஆசிரியர்களுக்கு தடுப்பூசியேற்றும் பணி நேற்று ஆரம்பம்





(க.கிஷாந்தன்)

நுவரெலியா மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் பணியாற்றும் அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு கொவிட் - 19 தடுப்புக்கான தடுப்பூசி ஏற்றும் பணி நேற்று ஆரம்பமானது. தோட்ட மற்றும் நகர்ப்புற பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கும், கல்விசாரா ஊழியர்களுக்கும் தடுப்பூசி செலுத்தப்படவுள்ளது.

சீன தயாரிப்பான சினோபார்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸே நேற்றுமுதல் ஆசிரியர்களுக்கு ஏற்றப்படுகின்றது.

பாடசாலைகளிலும், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களிலும் ஏனைய சில நிலையங்களிலும் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

41 பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 980 ஆசிரியர்களுக்கு சினோபார்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தும் பணிகள் கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தில் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

அதேவேளை, நாட்டிலுள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் இன்னும் 10 நாட்களுக்குள் தடுப்பூசி செலுத்தி முடிக்கப்படும் என கல்வி அமைச்சர் நேற்று அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.





**கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் கடமைபுரியும் அதிபர்கள், ஆசிரியர்கள், பத்தனை ஸ்ரீபாத தேசிய கல்லூரியின் உத்தியோகத்தர்கள், கொட்டகலை ஆசிரியர் பயிற்சி கலாசாலையின் உத்தியோகத்தர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கு சினோபார்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் கொட்டகலை தேசிய பாடசாலையில் நேற்று செலுத்தப்பட்டது.அதேவேளை, லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் கடமை புரியும் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கு சினோபார்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் லிந்துலை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் செலுத்தப்பட்டது. (பி.கேதீஸ்)**

## தனிமைப்படுத்தலிலிருந்து கடவளை விடுவிக்கப்பட்டது

(கினிகத்தேனை நிருபர்)

தனிமைப்படுத்தப்பட்டிருந்த கினிகத்தேனை கடவளை தோட்டம் விடுவிக்கப்பட்டுள்ளதாக கொவிட் - 19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையத்தின் பிரதானி இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திரா சில்வா அறிவித்துள்ளார்.

குறித்த தோட்டத்தில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் கடந்த மாதம் 21ஆம் திகதிமுதல் தனிமைப்படுத்தப்பட்டிருந்தது. இதேவேளை, தற்போது இத்தோட்டத்தில் கொரோனா அச்சுறுத்தல் வெகுவாக குறைந்துவருவதன் காரணத்தினால் மூன்று வாரங்களுக்குப் பின் குறித்த தோட்டமானது தனிமைப்படுத்தலிருந்து தற்போது விடுவிக்கப்பட்டுள்ளது.




# சிலோன் டீக்கான நியாயமான ஒப்பந்தத்தை மேற்கொள்ள இலங்கை தோட்டத்துரைமார் சம்மேளனம் அனைத்துத் தரப்பினரையும் கேட்டுக்கொண்டுள்ளது

தேயிலைத் தொழிலில் நிலையான எதிர்காலத்தை உறுதிப்படுத்தும் முகமாக முழுமையான மற்றும் நடைமுறையான அணுகுமுறையை பெற்றுக் கொடுப்பதற்கு இடையில் சுத்தமான சிலோன் டீ தயாரிப்புகள் குறித்து நியாயமான உடன்பாட்டுக்கு வருமாறு இலங்கை தோட்டத் துரைமார் சம்மேளனம் அனைத்து கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் பங்குதாரர்களின் வேண்டுகோளுக்கமைய சர்வதேச தேயிலைத் தினம் கொண்டாடப்பட்டது.

'தேயிலை மற்றும் நியாயமான வர்த்தகம்' எனும் இந்த வருடத்தின் சர்வதேச தேயிலைத் தினத்தின் தொனிப்பொருளுக்கமைய அனைத்து பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்கள் (RPCs) போன்றே அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனங்கள், சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் துறை மற்றும் தொழிற்சாலை உரிமையாளர்கள், விற்பனையாளர்கள், ஏற்றுமதியாளர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரிடமும் இலங்கை பெருந்தோட்ட துரைமார் சம்மேளனம், இந்தத் துறையின் எதிர்கால மேம்பாட்டிற்காக விநியோக சங்கிலியை மேம்படுத்துவதற்கு கவனம் செலுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் வணிக வேளாண்மை வர்த்தகத் துறையின் மற்ற அனைத்து துறைகளையும் போலவே, இலங்கை தேயிலைத் துறையும் 2021இல் கடுமையான சவால்களை எதிர்கொள்கிறது. அதன்படி, தேயிலைத் தொழிலின் ஒவ்வொரு அம்சமும் எதிர்காலத்தில் மறு மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என்பதும், தேவையான மற்றும் நடைமுறையான புதிய திட்டங்கள் மற்றும் உத்திகள் ஒரு விஞ்ஞான கட்டமைப்பிற்கேற்ப செயல்படுத்தப்பட வேண்டும் என்பதும் தெளிவாக உள்ளது.

அத்துடன், பயிர் மற்றும் மண் மேலாண்மை முதல் காலநிலை மாற்றம், தொடர்புடைய சமூக, பொருளாதார மாதிரிகள், தொழில்மயமாக்கல், தரக் கட்டுப்பாடு, மதிப்பு கூட்டல் மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல், தொழில் வளர்ச்சியில் வளர்ந்துவரும் தொழில்நுட்பத்தின் பங்கு ஆகியவற்றை இது உள்ளடக்கியது.

இலங்கையிலுள்ள பிராந்திய தோட்ட நிறுவனங்கள் இந்த ஒவ்வொரு துறைக்கும் சர்வதேச தரங்களை நிறுவியுள்ளன, மேலும் முன்னேற்றத்திற்காக தொடர்ந்து ஆராய்ந்து வருகின்றன.

இருப்பினும், விமர்சன ரீதியாக, பிராந்திய தோட்ட நிறுவனங்கள் மொத்த தேயிலை உற்பத்தியில் 30 வீதம் மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்துகின்றன, பெரும்பான்மையானவை சிறு தொழில்துறை பங்களிப்புச் செய்கின்றன. சில முக்கியமான நடவடிக்கைகளை எடுப்பதில், இது பிராந்திய தோட்ட நிறுவனங்களை மட்டுமல்ல, ஒட்டுமொத்த தொழில்துறையையும் இலக்காகக்கொள்ள வேண்டியுள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக, செயல்படும் என்று எதிர்பார்க்கப்படும் இந்த புதிய மாதிரிகள் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றதாக இருக்க வேண்டும். பின்னர் இயக்கத் திட்டங்களுடன் ஒரு நியாயமான காலப்பகுதியில் தொடர்ந்து மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

இலங்கையின் தேயிலைத் தொழில் கிராமப்புற பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பாக அமைகிறது, இதில் 5,00,000இற்கும் மேற்பட்ட சிறுதொழில் தேயிலை உற்பத்தியாளர்கள் மற்றும் 1,50,000 பேர் கொண்ட வலுவான RPC தொழில் படை உள்ளது. அவர்களில் பலர் தோட்ட நிறுவனங்களுக்கு ஒரு நிலையான தினசரி ஊதியத்திற்கும், சிறிய தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கும் உற்பத்தித்திறன் இணைக்கப்பட்ட ஊதியத்திற்காக வேலை செய்கிறார்கள். இலங்கையில் தற்போது சுமார் 600 தேயிலை தொழிற்சாலைகள் உள்ளன, இது சுமார் மூன்று மில்லியன் இலங்கையர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்குகிறது.

கடந்த ஆண்டு, தேயிலைத் தொழில் மூலம் அந்நிய செலாவணி வருவாயாக 1.2 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டியது, இது 2019இல் 1.3 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. மார்ச் 2021ஆம் ஆண்டின் இறுதியில் சிறந்த காலநிலை, சரியான நேரத்தில் உர பயன்பாடு மற்றும் வரிசைப்படுத்தல் காரணமாக 2020ஆம் ஆண்டை விட 20 மில்லியன் கிலோகிராம் உற்பத்தி அதிகமாக இருந்தது. முன்னோடியில்லாத தடைகளையும் சவால்களையும் எதிர்கொண்டு கடந்த ஆண்டில் இத்தகைய நிலையான செயல்திறனை அடைவது உண்மையிலேயே தனித்துவமானது.

உற்பத்தித்திறன் குறைந்துவருவதோடு அதிகரித்துவரும் உற்பத்திச் செலவு இலங்கையிலுள்ள அனைத்து தேயிலைச்செய்கையாளர்களும் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவாலாக சுட்டிக்காட்டப்படுகிறது. கொவிட்-19 தொற்று நோய்களின்போது செயற்பாட்டு மற்றும் வாகனத் திறன் குறித்த குறிப்பிடத்தக்க கட்டுப்பாடுகள் காரணமாக இந்த சவால்கள் அதிகரித்தன.

இது தொடர்பாக எதிர்வரும் ஆண்டில் ஒட்டுமொத்த தொழில்துறையின் கவனம் தொற்றுநோயை எதிர்கொண்டு செயற்பாடுகளை பராமரிக்கும்போது செயல்பாட்டுத் திறனை கடுமையாக அதிகரிப்பதில் கவனம் செலுத்தவேண்டும். இந்த நோக்கத்திற்காக, தேயிலைத் தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் அவசர விடயமாக கொவிட்-19 தொற்று தடுப்பூசி மூலம் தடுப்பூசி போடுவது முக்கியம்.

எதிர்காலத்தைப் பார்க்கும்போது, தோட்டத் தொழிலில் ஒரு நியாயமான மற்றும் நிலையான எதிர்காலத்திற்கான ஒரு நடைமுறைத் திட்டத்தை உருவாக்க ஒரு குழுவாக நாம் ஒன்றிணைந்து செயற்படவேண்டிய நேரம் இது. இந்த நோக்கத்திற்காக, பிராந்திய தோட்ட நிறுவனங்களுக்கு சொந்தமான பல தோட்ட நிறுவனங்கள் இப்போது சர்வதேச வர்த்தக அங்கீகாரம் பெற்ற பெயார்டிரேட் இன்டர்நேஷனல் போன்ற நிறுவனங்களுடன் கூட்டு சேர்ந்துள்ளன. அவை பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேம்பாட்டுக்குத் தேவையான மூன்று முக்கிய துறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தரங்களை கடைப்பிடிப்பதை உறுதிசெய்கின்றன.

சான்றளிக்கப்பட்ட நிறுவனங்கள் முதலாளி களால் பாகுபாடு இல்லாத செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் சூழலில் சான்றிதழ் அளிக்கப் படுகின்றன, சட்டபூர்வமான குறைந்தபட்ச ஊதியத்திற்கு சமமான அல்லது அதற்கு மேற்பட்ட ஊதியத்தில் அவர்களின் தயாரிப்புகளை உருவாக்குங்கள். நிறுவனங்கள் தங்கள் தோட்ட நிறுவனங்களிலுள்ள தொழிலாளர்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பிற்காக உழைப்பதை உறுதிசெய்கின்றன, மேலும் அவை எந்த வகையிலும் குழந்தை தொழிலாளர்களின் வேலைவாய்ப்பை பாதிக்கவோ ஊக்குவிக்கவோ இல்லை. பல ஆண்டுகளாக இந்த ஒவ்வொரு தரத்தையும் நிலைநிறுத்துவதில் இலங்கை ஒரு பிராந்திய மைல்கல்லாக இப்போது காணப்படுகிறது, இந்த நிலையை நாம் தொடர்ந்து பராமரிக்க வேண்டும்.



# சேவையாற்றுவதற்கான சிறந்த இடம் என்ற நாமத்தை வென்றுள்ள ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ்




தேசத்தின் காப்புறுதியாளரான ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் Great Place to work என்ற நிறுவகத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் 'சேவையாற்றுவதற்கான சிறந்த இடம்' என்கின்ற நாமத்தை வென்றுள்ளது. இதன்மூலம் நிறுவனத்தினுள் சேவையாற்றும் பணியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக சிறந்த சேவைக் கலாசாரத்தை கட்டியெழுப்பியுள்ளமையை உறுதிசெய்துள்ளது.

நம்பிக்கை, கௌரவம், நடுநிலைத்தன்மை, அபிமானம் மற்றும் நட்புறவு போன்ற தத்துவங்களை அடிப்படையாகக்கொண்ட செயற்படும் பணியாளர் குழாமின் காரணத்தாலேயே Great Place to work என்ற நிறுவகத்தால் ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

1962ஆம் ஆண்டு அரச காப்புறுதி நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் இலங்கையில் விசாலமான மற்றும் உறுதியான காப்புறுதி நிறுவனமாவதோடு 158 கிளை வலையமைப்புகளால் நாடு முழுவதும் பரவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வெவ்வேறு சமூக மற்றும் கலாசார பின்னணிகளை பிரதிநிதித்துவம் செய்யும் பணியாளர் குழாமினரைக்கொண்டுள்ள ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் நாட்டில் தற்போதுள்ள சவால்களை எதிர்கொள்ளும் விதத்திலான புதிய எண்ணக்கருக்களை நிறுவனத்தினுள் உருவாக்கியுள்ளதோடு ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸின் கொள்கைகள், பெறுமதிகள் மற்றும் நெறிமுறைகள், கடமைகள் மற்றும் தனிமனித வாழ்க்கையில் பாரிய மாற்றங்களை கட்டியெழுப்புகின்றது.

இவ்வெற்றியை பற்றிய தமது கருத்தை வெளியிட்ட ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸின் தலைவர் ஜகத் வெல்லவத்த,

''இலங்கையினுள் சேவையாற்றுவதற்கு சிறந்த இடமாக எமது நிறுவனம் தெரிவுசெய்யப்பட்டமை குறித்து மகிழ்ச்சியடைவதோடு நாம் கடந்து வந்த பாதையில் ஒரு மைல்கல்லாகவே இதனைக் கருதுகின்றோம். காப்புறுதி நிறுவனம் எனும் வகையில் வாடிக்கையாளர்கள் எமது இதயமாக இருப்பதோடு மனித வள திட்டங்களுடன் வியாபார உத்திகளை ஒன்றிணைத்து நிறுவனம் முன்னேற்றப் பாதையில் சென்றிட வழிவகுக்கின்றது. எமது பணியாளர் குழாமினரை கௌரவிப்பதோடு, சமத்துவத்தை மேம்படுத்தி, நிறுவனத்தின் தேவைகள் மற்றும் பணியாளர்களது தேவைகளுக்கு இடையில் சமத்தன்மையை ஏற்படுத்தி அவர்களது அபிவிருத்திக்காக நாம் முயன்றிடுவோம்" - என்றார்.

இது தொடர்பில் சந்தன எல் அலுத்கம கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையில் சேவையாற்றுவதற்கான சிறந்த இடமாக நமது நிறுவனம் தெரிவாகியுள்ளமை மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். எமது பணியாளர்களை தனித்தனியாக கருதாது சகலருக்கும் சமமான வாய்ப்புகளை வழங்கி அவர்களை ஊக்குவிப்பதோடு சிறந்த பணியாளர் கலாசாரத்தையும் கட்டியெழுப்பி எமது ஒத்துழைப்பை வெளிக்காட்டியுள்ளோம். பணியாளர் குழாமினரை அடிப்படையாகக்கொண்ட சிறந்த கலாசாரம் மற்றும் சிறந்த படிமுறைகளுடனான நட்புறவுடனான சூழலொன்றை உருவாக்குவதற்கு முயற்சிப்பதுடன் பணியாளர்களை ஊக்குவிப்பதற்கான செயன்முறைகளையும் செயற்படுத்த திட்டமிட்டுள்ளோம்'' - என்றார்.

பிரதி பிரதம அதிகாரி - மனித வளங்கள் மற்றும் பணியாளர் தொடர்புகள் ரோஹித்த அமரபால இது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்,

5 தசாப்தங்களுக்கும் மேலாக ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் பணியாளர்களை முதன்மைப்படுத்தி செயற்பட்டு வருவதோடு காப்புறுதி பற்றிய எண்ணக்கருவையும் தகவலையும் நாடுமுழுவதும் பரப்பும் அவர்கள் எமது நிறுவனத்தின் சொத்துகள். பணியாளர்களின் வெவ்வேறு தன்மையை அறிந்து அதற்கு முக்கியத்துவமளிப்பதோடு சிறந்த பணியாளர் குழாமைக்கொண்ட வேலைச்சூழலை உருவாக்குவதற்கு முன்னோக்கிச் சென்றிடுவோம்" - என்றார்.

Great Place to work நிறுவகம் வருடாந்தம் 10,000இற்கும் அதிகமான நிறுவனங்களுடன் பணியாற்றுவதோடு உலகளவில் 12.5 மில்லியனுக்கும் அதிகமான பணியாளர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. இதன்பொழுது உலக நாடுகள் 69இற்கும் அதிகமான இடங்களில் க்ரேட் ப்ளேஸ் டு வர்க் நிறுவனமானது 2012ஆம் ஆண்டு இலங்கையில் 'சேவையாற்றுவதற்கான சிறந்த இடம்' என்ற எண்ணக்கருவை ஆரம்பித்தது. பணியாளர் குழாமினரை மேம்படுத்துவதற்காக உயர்ந்த நம்பிக்கையுடனான பணியாளர் கலாசாரத்தை கட்டியெழுப்புவதற்கும் கொண்டு நடத்துவதற்கும் ஆலோசகராக பணியாற்றி வருகின்றது.


## தன நிதானய

உத்தியோகபூர்வ முடிவுகள் — NLB

ஆங்கில எழுத்து: K

வெற்றி இலக்கங்கள்: 46 51 53 58

திகதி: 14.07.2021

சீட்டிழுப்பு இலக்கம்: 0535

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100,000.00 | 3 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 3,000.00 | 56 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000.00 | 167 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100.00 | 4294 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா 60.00 | 2922 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா 20.00 | 71438 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா 20.00 | 13564 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 2,939,760.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 92,444

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத் தொகை
ரூ. 98,981,078.00

- ரூபா. 5 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-324324, 0114 607000 Web: www.nlb.lk

## கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள் — NLB

சீட்டிழுப்பு இலக்கம்: 2800 சீட்டிழுப்பு திகதி: 14.07.2021

ஆங்கில எழுத்து: J

வெற்றி இலக்கங்கள்: 35 38 58 64

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 1 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 6 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 2,000.00 | 147 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 1,000.00 | 322 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 8551 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 5543 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 139882 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 25679 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 180,131

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை
ரூ. 6,604,040.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 78,522,798.80

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-324324, 0114 607000 Fax: 0114 663416 Web: www.nlb.lk

## மஹஜன சம்பத

சீட்டிழுப்பு இலக்கம்: 4505 உத்தியோகபூர்வ முடிவுகள் — NLB

திகதி: 14.07.2021

வெற்றி எழுத்து: N வெற்றி இலக்கங்கள்: 4 6 8 0 8 5

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | இலக்கங்கள் | தொகை | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 4 6 8 0 8 5 | ரூபா 2,000,000/- | 1 |
| 2ஆம் பரிசு | 6 8 0 8 5 | ரூபா 100,000/- | 10 |
| 3ஆம் பரிசு | 8 0 8 5 | ரூபா 10,000/- | 97 |
| 4ஆம் பரிசு | 0 8 5 | ரூபா 1,000/- | 954 |
| 5ஆம் பரிசு | 8 5 | ரூபா 100/- | 9630 |
| 6ஆம் பரிசு | 5 | ரூபா 20/- | 65366 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | இலக்கங்கள் | தொகை | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 4 6 8 0 8 | ரூபா 10,000/- | 11 |
| 8ஆம் பரிசு | 4 6 8 0 | ரூபா 1,000/- | 98 |
| 9ஆம் பரிசு | 4 6 8 | ரூபா 100/- | 961 |
| 10ஆம் பரிசு | 4 6 | ரூபா 50/- | 9530 |
| 11ஆம் பரிசு | N | ரூபா 20/- | 37977 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 9,334,460.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 17,666,459.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை
32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01. தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.
www.nlb.lk

## Mega Power — மெகா பவர்

சீட்டிழுப்பு இலக்கம்: 0853

உத்தியோகபூர்வ முடிவுகள் — NLB

திகதி: 14.07.2021

ஆங்கில எழுத்து: M சுப்பர் இலக்கம்: 22 வெற்றி இலக்கங்கள்: 19 34 48 57

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 2 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 67 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 187 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 4372 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 2948 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 74012 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 13315 |

இலங்கையின் அதிகூடிய சுப்பர் பரிசு

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 136,580,799.60

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 2,662,160.00

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
www.nlb.lk

# மருந்தகங்களுக்கு திடீர் பரிசோதனை மேற்கொள்ள தீர்மானம்; குறைபாடுகள் இருந்தால் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை

## கல்முனை பிராந்திய சுகாதார பணிப்பாளர் சுகுணன் எச்சரிக்கை

(சாய்ந்தமருது நிருபர்)

கல்முனைப் பிராந்தியத்திலுள்ள தனியார் மருந்தகங்களில் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டால், அவற்றின் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பிரிவில் 64 தனியார் மருந்தகங்கள் இயங்கிவருகின்றன. இவற்றுள் சில மருந்தகங்களில் பாரிய குறைபாடுகள் நிலவி வருவதாக எமது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையைப் பயன்படுத்தி சில மருந்தகங்களில் கூடுதலான விலைக்கு மருந்துகள் விற்பனை செய்யப்படுவதாகவும் காலாவதியான மருந்துகள் விற்பனைசெய்யப்படுவதாகவும் முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன.



இவற்றைக் கருத்திற்கொண்டு பெரியநீலாவணை தொடக்கம் பொத்துவில்வரையான கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பிரிவில் இயங்கிவருகின்ற அனைத்து மருந்து விற்பனை நிலையங்களிலும் திடீர் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

ஆகையினால், குறித்த மருந்தகங்களில் நிலவும் குறைபாடுகள் அனைத்தையும் உடனடியாக நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்வதுடன், எமது சோதனையின்போது குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்றார்.

# சம்மாந்துறை வீதிகளில் உலாவித் திரிந்தோர் 60 பேருக்கு எழுமாறாக பி.சி.ஆர். பரிசோதனை





(ஐ.எல்.எம் நாஸிம்)

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை எல்லைக்குட்பட்ட சம்மாந்துறை பிரதேசத்தில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாமல் வீதிகளில் உலாவித்திரிந்தோர் 60 பேருக்கு எழுமாறாக நேற்று பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணனின் ஆலோசனையில் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.ஐ.எம்.கபீரின் வழிகாட்டுதலில் மேற்பார்வை பரிசோதகர் ஐ.எல்.றாஸிக் தலைமையில் சுகாதார பரிசோதகர்களான சி.பி.எம் ஹனீபா, எம்.இலங்கோவன், பி.இலங்கோ, எம்.ராஜ்குமார், டி.டினேஷ், எம்.ஐ.எம் ஹனிபா மற்றும் பொலிஸாரின் பங்களிப்புடன் இடம்பெற்றது.

மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை மாதிரிகள் பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.ஐ.எம் கபீர் தெரிவித்தார்.

சம்மாந்துறை பிரதேசத்தில் மூன்றாம் அலையின் தாக்கம் அதிகரித்து நேற்றுவரை 32 கிராமசேவையாளர் பிரிவுகளில் மொத்தமாக 215 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவர்களில் சிலர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இதுவரையில் 08 மரணங்கள் சம்பவித்துள்ளதாகவும் தினசரி பி.சி.ஆர், அன்ரிஜன் பரிசோதனைகளை சுகாதாரத்துறையினர் மேற்கொண்டு வருவதாகவும் எதிர்வரும் காலங்களில் கொரோனா நோயாளர்கள் எமது பிராந்தியத்தில் அதிகரிக்கும் வாய்ப்புள்ளதாகவும் பொதுமக்கள் மிகவும் அவதானத்துடன் சுகாதார நடைமுறைகளையும் பின்பற்றி செயற்படுமாறும் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.ஐ.எம் கபீர் கேட்டுக்கொண்டார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மட்டக்களப்பு மாவட்டத்தில் 3 கோடி ரூபா நிதியில் புனரமைக்கப்படும் 87 குளங்கள் – அணைக்கட்டுகள்

(ந.குகதர்சன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புனரமைக்கப்படும் குளங்களை இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனும் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சந்திரகாந்தனும் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.



இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் – நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தன் நேரில் சென்று பார்வையிட்டனர்

மட்டக்களப்பில் 3 கோடி ரூபா செலவில் 87 நீர்ப்பாசனக் குளங்கள் மற்றும் அணைக்கட்டுகள் அபிவிருத்திசெய்யப்பட்டுவரும் நிலையில், அவை தொடர்பான முன்னேற்றங்களை இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் உள்ளிட்டோர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கு அமைவாக விவசாயிகளுக்கு சிறந்த நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் பொருட்டு நாடெங்கிலும் ஐந்தாயிரம் குளங்களை புனரமைக்கும் வாரி சௌபாக்கியா செலுமை அபிவிருத்தித் திட்டப் பணிகள் மட்டக்களப்பு மாவட்டத்திலும் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன.

இத்திட்டத்தின் ஊடாக புனரமைக்கப்பட்டுவரும், மீகாகண்டி குள அணைக்கட்டு புனரமைக்கப்படுவதன் மூலம் இப்பகுதியில் 40 ஏக்கர் நெற்செய்கையினை மேற்கொள்ள முடிவதுடன், வாரியடிச்சேனை அணைக்கட்டு புனரமைப்பின் மூலம் 50 ஏக்கர் செய்கை பண்ணப்பட்டு வருவதற்கு மேலதிகமாக 25 ஏக்கர் நெற்செய்கை மேற்கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கவுள்ளது.

அத்துடன், கொக்குவான் அணைக்கட்டும் புனரமைக்கப்படவுள்ளதுடன், இத்திட்டங்கள் தொடர்பாக இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சந்திரகாந்தன் ஆகியோர் களவிஜயம் மேற்கொண்டு இதன் முன்னேற்றங்கள் தொடர்பில் கண்காணித்துள்ளனர்.

இதன்போது மத்திய அரசின் நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி நாகரெட்ணம் உள்ளிட்ட அரச அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர். இத்திட்டத்திற்கு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 11 பிரதேச செயலாளர்கள் பிரிவுகளைச் சேர்ந்த 70 குளங்களும் 18 அணைக்கட்டுக்களும் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றன.

இத்திட்டங்கள் பூர்த்திசெய்யப்படும் பட்சத்தில் மட்டக்களப்பு மாவட்டம் நிச்சயமாக சுபீட்சத்தை நோக்கி நகரும் என்பது குறிப்பிடத்தக்கது

# காத்தான்குடியில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மூன்று கிராமசேவகர் பிரிவுகள் விடுவிப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவில தனிமைப்படுத்தப்பட்டிருந்த மூன்று



கிராமசேவகர் பிரிவுகள் நேற்று புதன்கிழமை காலை 6 மணியுடன் விடுவிக்கப்பட்டன.

புதிய காத்தான்குடி வடக்கு 167ஏ, புதிய காத்தான்குடி தெற்கு 167சி, புதிய காத்தான்குடி கிழக்கு 167பி ஆகிய கிராமசேவகர் பிரிவுகளே விடுவிக்கப்பட்டுள்ளன.

காத்தான்குடியில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் பொருட்டு கடந்த மாதம் 23ஆம் திகதி எட்டு கிராமசேவகர் பிரிவுகள் முடக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டன.

இதில் ஐந்து கிராமசேவகர் பிரிவுகள் கடந்த 8ஆம் திகதி விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கோமரங்கடவெலயில் 298 குடும்பங்களுக்கு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கிவைப்பு





(கந்தளாய் நிருபர்)

ஜனாதிபதியின் விசேட வேலைத்திட்டத்தின் அடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தின் கோமரங்கடவெல பிரதேசத்தில் காணிகள் இல்லாதவர்களுக்கு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

இதன்போது 298 குடும்பங்களுக்கு காணி உறுதிப்பத்திரங்கள் நேற்று கோமரங்கடவெல பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் வழங்கப்பட்டன.

ஜனாதிபதி கிராமத்துடனான உரையாடல் நிகழ்சித்திட்டத்தின்கீழ் இக்காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில அத்துக்கோரல, மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிக்கோரள மற்றும் காணி உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# நாவிதன்வெளியில் கலைஞர்களுக்கு உதவித்தொகை வழங்கிவைப்பு

(மாளிகைக்காடு நிருபர்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டின்கீழ், நாவிதன்வெளி பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட பல்துறை கலைஞர்களுக்கான உதவித்தொகை வழங்கி வைக்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் அம்பாறை மாவட்ட மேலதிக மாவட்ட செயலாளர் ஏ.எம்.அப்துல் லத்தீப் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன் உதவிப் பிரதேச செயலாளர் என்.நவநீதராஜா, மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம்.ரின்ஸான் உட்பட கலைஞர்களும் கலந்துகொண்டனர்.



எம்.எஸ்.ராங்கநாதன் தலைமையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.எம்.ஷினாஸின் ஒருங்கிணைப்பில் ஏற்பாடுசெய்யப்பட்ட இந்நிகழ்விற்கு

இதன்போது நாவிதன்வெளி பிரதேசத்தில் தெரிசெய்யப்பட்ட பல்துறை சார்ந்த 04 கலைஞர்களுக்கு தலா ரூபா 10 ஆயிரம் பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டன.

# நினைவில் வாழும்...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தக்க பதிலடி கொடுத்து நிரூபித்துக்காட்டினார்.

இலங்கையில் மகாகவி உருத்திரமூர்த்தியின் பின்னர் அதிகமான வெம்பாக்களைப் படைத்தவர் எம்.எச்.எம்.ஷம்ஸ். வெம்பா என இங்கு குறிப்பிடுவது தமிழில் குறும்பாக்களாகும். இது ஆங்கிலத்திலுள்ள லிமெரிக்ஸ் என்ற கவிதை வடிவம் போன்றது வலம்புரி கவிதா வட்டம் இவரது 14ஆவது நினைவேந்தல் நிகழ்வை 15.10.2016 அன்று நினைவுகூர்ந்தது.

மூத்த இலக்கிய ஆளுமை ஜவாத் மரைக்கார் நினைவுரையாற்றினார். 15.07.2002இல் தனது 62ஆவது வயதில் எமைப் பிரிந்த ஷம்ஸின் இறுதி யாத்திரையில் கண்ணீர் மல்க நாம் கலந்துகொண்டோம்.

(பாத்திமா பாஹிறாவின் அன்புக் கணவரான மர்ஹூம் ஷம்ஸுக்கு மூன்று ஆண் மக்களும் இரண்டு பெண்மக்களும் உள்ளனர்.

எம்.எச்.எம்.ஷம்ஸ் மன்றம் ஏற்பாட்டில், நினைவில் வாழும் ஷம்ஸ் நினைவேந்தலாவது நிகழ்வு இன்று இரவு 8.00 மணிக்கு பேராசிரியர் எம்.எஸ். எம்.அனஸ் தலைமையில் சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் எம்.ஏ.எம். நிலாமின் வரவேற்புரைடன் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில், தெனகம ஸ்ரீவர்தன, என்.எம்.அமீன் , திக்குவல்லை கமால், எம்.ஏ.எம்.மஸாஹிர், அன்பு ஜவஹர்ஷா, பஸ்மினா அன்சார் (கவி வாழ்த்து), ஜவாத் மரைக்கார், லரீனா ஏ.ஹக்,




மேமன்கவி, ஒலுவில் ஜே.வஹாப்தீன், முருக பூபதி (அவுஸ்ரேலியா), மும்தாஸ் ஹபீல், தாஸிம் அஹமது, ரத்னசிரி ,விஜேயசிங்க ஆகியோர் உரைநிகழ்த்தவுள்ளனர். எழுத்தாளர் நாச்சியாதீவு பர்வீன் ஒருங்கிணைப்பில் இடம்பெறவுள்ள நிகழ்வு, சிரேஷ்ட ஊடகவியலாளர் ஷம்ஸ் பாஹிமின் நன்றியுரையுடன் நிறைவுபெறும். இலக்கிய ஆர்வலர்கள் Meeting ID: 814 0005 9380, Passcode: 123456 எனும் இந்த எனும் இணைப்பில் இணைந்துகொள்ள முடியும்.)

# நீதிமன்றத்தில் கடமையாற்றுவோருக்கு கொரோனா தடுப்பூசி வழங்கவேண்டும்

## இம்ரான் மஹ்ரூப் எம்.பி. கோரிக்கை

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை நீதிமன்ற நீதிபதிகள், சட்டத்தரணிகள் மற்றும் ஊழியர்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்குமாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே இக்கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தற்போது நாடுமுழுதும் வேகமாக பரவிவரும் கொவிட் - 19 ஆனது எமது திருகோணமலை மாவட்டத்திலும் வேகமாக பரவி வருவதை அறிவீர்கள். அதனை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன, அதில் கொரோனா தடுப்பூசி ஏற்றப்படுவது மிக முக்கியமானதொன்றாக காணப்படுகின்றது.

இத்தடுப்பூசியானது தெரிவுசெய்யப்பட்ட பிரிவினருக்கு முன்னுரிமை அடிப்படையில் ஏற்றப்படுகின்றது. அதில் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்ட திணைக்கள



ஊழியர்கள், பொதுமக்களுடன் நெருக்கமாக உறவைப் பேணும் அலுவலகங்கள் என்பனவும் உள்ளடங்கும். நீதிமன்றங்களும் அவ்வாறான பொதுமக்களுடன் நெருக்கமான உறவை பேணும் பிரிவு என்பதனை நாம் அறிவோம்,

இக்கொரோனா நெருக்கடியான காலப் பகுதியிலும் திருகோணமலை நீதிமன்ற கட்டிடத் தொகுதியில் அமைந்துள்ள நீதிமன்றங்கள் இயங்குவதனை அவதானிக்க கூடியதாகவுள்ளது. நீதிமன்றங்களுக்கு தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் சென்றுவருகின்றனர். அதில் பல்வேறு வகையான நபர்கள் உள்ளடங்குகின்றனர். முக்கியமாக போதை பழக்கத்திற்கு அடிமையானவர்கள், திட்டமிட்ட குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் இவ்வாறானவர்களுடன் தொடர்புபடுவதினால் அங்கு கடமையாற்றும் நீதிபதிகள், சட்டத்தரணிகள், ஊழியர்கள் உள்ளடங்கிய சுமார் 150 பேர் கொரோனா அச்சுறுத்தலுக்கு உள்ளாகுவதாகவும் அதனால் தமக்கும் கொரோனா தடுப்பூசியை ஏற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சட்டத்தரணிகள் என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறான இக்கட்டான நிலையில் நீதிமன்றங்களில் கடமையாற்றுபவர்களின் பாதுகாப்பு கருத்திற்கொள்ளப்படவேண்டும். அந்தவகையில் அவர்களின் நியாயமான கோரிக்கையினை ஏற்று அங்கு கடமையாற்றும் 150 பேருக்கு முன்னுரிமை அடிப்படையில் கொரோனா தடுப்பூசியினை ஏற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

# தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தனிமைப்படுத்தப்பட்டமை சிறுபான்மையினத்தவருக்கு விடுக்கப்பட்ட பலத்த அடியே

## இந்து குருமார் ஒன்றியத் தலைவர் கணேச லோகநாதன்

**(வீரமுனை நிருபர்)**

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உட்பட 31 தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் தனிமைப்படுத்தலில் தடுத்து வைத்திருப்பதென்பது, ஒடுக்கப்பட்ட சிறுபான்மைச் சமூகத்தின் மீது விடுக்கப்பட்ட பலத்த அடியாகவே பார்க்கப்படவேண்டுமென, கிழக்கிலங்கை இந்து குருமார் ஒன்றியத் தலைவர் கணேச லோகநாதன் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் அண்மைய நடவடிக்கைகள் தொடர்பாக வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது எமது நாட்டில் எந்தவித சுதந்திரத்தையும் பின்பற்ற முடியாத நிலைமை காணப்படுகிறது. ஆர்ப்பாட்டங்களில் பொதுமக்கள் சுதந்திரமாக தமது உரிமைக் கருத்துக்களை வெளியிடும்போது அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளதுடன், தொழிற்சங்கத்தினரின் சுதந்திரம், ஊடக சுதந்திரம் என்பன அடக்கி ஒடுக்கப்படுவதை ஒன்றியத்தின் சார்பாக மிக வன்மையாக கண்டிக்கிறோம்.

ஜனநாயக நாட்டில் ஜனநாயக உரிமைகளை பெற்றுக்கொள்வதற்குப் போராட்டங்களை செய்யவும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளவும் முடியாத நிலையில், எவ்வாறு தேவைகளை பெற்றுக்கொள்வது என்பதையிட்டு அரசாங்கம் சிந்திக்கவேண்டும். அவ்வாறு போராட்டங்களை மேற்கொண்டாலும் உரிமையும், சுதந்திரமும் கிடைப்பதாக இல்லை.

தான் ஒருவனுக்காக மட்டுமல்லாது, ஆசிரியர் சங்கத்தின் உரிமைகளை பெற்றுக்கொடுக்க முன்னிற்கும் பன்மைத்துவ சமூகத்தின் தேவை நலன்களுக்காகவே இலங்கை ஆசிரியர் தொழிற்சங்கத்தின் பொதுச் செயலாளராக செயற்படுகிறார்.

இலங்கை அரசாங்கம் இந்துமதக் குருமார்களை கண்ணியமாக மதிக்கின்ற தன்மை கோட்டாபய ஆட்சியில் மிக மிகக் குறைவாகவே காணப்படுகிறது. தற்போதைய அரசாட்சி பொதுமக்கள் மீது நட்புறவுடன் இருப்பதாகத் தெரியவில்லை. எப்போது கைதுசெய்யப்படுவோம் என்ற அச்ச சூழலில், அச்சவுணர்வுடனேயே பொதுமக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இந்நிலை எதிர்வரும் காலங்களிலும் நிலவுமானால் அரசின் மீது விருப்பமற்ற நிலையே காணப்படும்.

பல்வேறுபட்ட துன்ப துயரங்களுக்கு மத்தியில் சிறுபான்மைத் தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் தற்போதைய சூழ்நிலையில் இலங்கை அரசாங்கம் இராணுவ மயத் தோற்றத்தையே எங்களுக்கு அளிக்கிறது.

ஆகவே, பன்மைத்துவ நாட்டில் ஒற்றுமை, நீதி, அமைதி, பாதுகாப்பு, மனிதம் போன்ற தேவைகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்குமாக இருந்தால் சுபீட்சம் நிறைந்த நாடாக இலங்கை திகழும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை என்றார்.

# கல்முனையில் டெங்கு தடுப்பு ஊழியர்கள் நிரந்தர நியமனம் கோரி கவனயீர்ப்புப் போராட்டம்






**(ஏ.எல்.எம்.ஷினாஸ், பாறுக் ஷிஹான்)**

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குட்பட்ட பகுதிகளில் டெங்குத் தடுப்பு சுகாதாரப் பணியாளர்கள் தமக்கு நிரந்தர நியமனம் கோரி நேற்று (14) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு எதிரில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த நான்கு ஆண்டுகளாக பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் சுகாதார அமைச்சின் கீழ் நாளாந்த கொடுப்பனவு அடிப்படையில் டெங்கு தடுப்புப் பணியாளர்களாக நாம் கடமையாற்றி கொண்டிருக்கின்றோம்.

தற்போது அரசாங்கத்தின் ஒரு இலட்சம் தொழில் வாய்ப்புகளை வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் தம்மையும் இணைத்துக்கொள்ளவுள்ளதாக தகவல்கள் மூலம் அறியக் கிடைத்தது. இதனை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். அவர்களுடைய சேவையோடு எம்மை இணைத்துப் பார்க்கவேண்டாம். நாம் கடந்த நான்கு ஆண்டுகளாக அர்ப்பணிப்போடு சுகாதாரத்துறையில் பணியாற்றி வருகின்றோம்.

எனவே, எமக்கான நியமனத்தை சுகாதார அமைச்சின் ஊடாக சுகாதாரத்துறையில் வழங்கவேண்டும். தற்போது நாட்டில் கொரோனா அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இந்த இக்கட்டான அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் எவ்வித தங்கு தடைகளுமின்றி டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை நாம் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றோம். தற்போது கூட எமது பகல் நேர உணவு நேரத்தை தவிர்த்து இந்த கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.

எனவே, எமது நிரந்தர நியமனத்தை உடனடியாக வழங்கவேண்டும். என்று கோரிக்கை விடுக்கின்றோம். இதுதொடர்பாக பல தடவைகள் அரசாங்கத்திற்கு எமது நாடளாவிய ரீதியில் டெங்கு தடுப்பு சுகாதார ஊழியர்கள் ஊடாக முறைப்பாடுகளை முன்வைத்துள்ளோம்.



காலங்காலமாக பொய் வாக்குறுதிகளை வழங்கி நாம் ஏமாற்றப்பட்டு வருகின்றோம். இந்நிலை தொடருமாக இருந்தால் நாடளாவிய ரீதியில் எமது ஊழியர்களை ஒன்றிணைத்து போராட்டங்களை நடத்துவதற்கும் தயாராக உள்ளோம் எனவும் இவர்கள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தின்போது இவர்கள் சுலோகங்களை ஏந்தி எதிர்ப்பு கோஷங்களை வெளியிட்டவாறு தமது கோரிக்கைகளை முன்வைத்தனர்.

# தனிமைப்படுத்தப்பட்டிருந்த பகுதி 23 நாட்களின் பின்னர் விடுவிப்பு

**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டிருந்த கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகள் நேற்று (14) விடுவிக்கப்பட்டுள்ளன.

கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக கடந்த ஜூன் மாதம் 22 ஆம் திகதி பிறைந்துறைச்சேனை 206-சி கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட பரகத் வீதி, 2ஆம் குறுக்கு வீதி, அப்துல்லாஹ் வீதி ஆகிய பகுதிகள் முடக்கப்பட்டிருந்தன.

குறித்த பகுதிகள் 23 நாட்களின் பின்னர் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளன.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# திருக்கோவிலில் தெரிவுசெய்யப்பட்ட 594 மாணவர்களுக்கு கல்வியமைச்சினால் டெப் கணினிகள் வழங்கிவைப்பு






**(அட்டாளைச்சேனை நிருபர்)**

கல்வி அமைச்சினால் திருக்கோவில் கல்வி வலயப்பிரிவுக்குட்பட்ட 594 மாணவர்களுக்கு இணையவழி மூலம் கல்வியைத் தொடர்வதற்காக டெப் கணினிகள் வழங்கப்பட்டன.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் யோகேந்திரா ஜெயச்சந்திரன் தலைமையில், திருக்கோவில் வலயக் கல்வி அலுவலகத்தில் நேற்று முன்தினம் (13) நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான டபிள்யூ.டி.வீரசிங்க பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு உத்தியோகபூர்வமாக டெப் கணினிகளை வழங்கிவைத்தார்.


கொரோனா தொற்று காரணமாக பாடசாலைகளில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்த நிலையில், கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இணையவழி மூலம் நடைபெற்று வருகின்றன.


அந்தவகையில் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் நலன்கருதி, இணையவழி மூலமாக நடைபெறும் வகுப்புக்களுக்காக அரசாங்கத்தால் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு டெப் கணினிகள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவருமான டபிள்யூ.டி.வீரசிங்கவின் இணைப்பாளர்களான ஆசிரியர் எஸ்.எம்.ஜெசீல், விக்னேஸ்வரன் உட்பட அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மற்றும் மாணவர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.


# ஒலுவிலில் சேதனப் பசளையை பயன்படுத்தி செய்கை பண்ணப்பட்ட சோளம் அறுவடை











**(அட்டாளைச்சேனை)**

ஜனாதிபதியின் எண்ணக்கருவில் உருவான சுபீட்சத்தின் நோக்கு சௌபாக்யா அபிவிருத்தி வேலைத்திட்டம் தற்போது நாடளாவிய ரீதியில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சேதனப் பசளையினை மாத்திரம் பயன்படுத்தி ஒலுவில் பிரதேசத்தில் செய்கை பண்ணப்பட்ட உப உணவுப் பயிர்ச்செய்கையான சோளம் அறுவடை செய்யப்பட்டதோடு, இதன்மூலம் இயற்கையான உப உணவுகளை அறுவடைசெய்ய முடிந்ததோடு, போதிய இலாபம் ஈட்டப்பட்டுள்ளதாகவும் இப்பிரதேச மேட்டு நிலப் பயிர்ச்செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கற்றாளை, மரவள்ளி, மரக்கறிப் பயிர்கள், மஞ்சள், இஞ்சி போன்ற பயிர்ச்செய்கைகளையும் ஒலுவில் பிரதேச விவசாயிகள் மிகுந்த ஆர்வத்துடன் செய்கை பண்ணி வருகின்றனர். இப்பயிர்ச்செய்கை பராமரிப்புக்கு குறைந்த செலவு ஏற்படுவதோடு, மிகுந்த இலாபம் ஈட்டப்பட்டு வருவதாகவும் இங்குள்ள விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இரசாயன உர வகைகள், கிருமி நாசினி போன்றவற்றைப் பயன்படுத்தி பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்றபோது பல்வேறான பக்க விளைவுகள் ஏற்படுவதோடு, மக்களுக்கு பாரிய செலவுகளும் ஏற்பட்டு வருகின்றன. ஆனால், இப்பயிர்ச் செய்கைகளுக்காக சேதனப் பசளையினைப் பயன்படுத்துவதால் நோயற்ற வளமான எதிர்கால சந்ததியினை உருவாக்க முடிவதோடு, நிறைவான வருமானத்தினையும் பூரண பயன்பாட்டினையும் பெற்றுக்கொள்ள முடியும் எனக் குறிப்பிடும் விவசாயிகள், ஜனாதிபதியின் இயற்கை உரத்தினைப் பயன்படுத்தி பயிர்ச்செய்கையினைத் தூண்டும் இவ்வேலைத் திட்டத்தினை தாம் ஆதரிப்பதாகவும் இப்பிரதேச விவசாயிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு அமைச்சினூடாக விவசாயத்தில் ஈடுபடுவோரை ஊக்குவிக்கும் வேலைத்திட்டம்

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தலைமையில் முன்னெடுப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பிலான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நேற்று (14) அம்மாவட்ட செயலகத்தில் பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தலைமையில், அமைச்சின் செயலாளர் வைத்தியர் அமல் ஹரிசத டி சில்வா மற்றும் மட்டு. மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் ஆகியோரின் பங்குபற்றுதலில், 14 பிரதேச செயலாளர் பிரிவுகளின் செயலாளர்களுடனான சந்திப்பாக இடம்பெற்றது. பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு அமைச்சினூடாக மட்டு. மாவட்டத்தில் 3 விதமான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதில் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு அமைச்சினூடாக பயறு, உளுந்து, இஞ்சி போன்ற பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டுவரும் பயனாளிகளை ஊக்குவித்தல் மற்றும் வீட்டு விலங்கின வளர்ப்பு வேலைத்திட்டத்தில் ஆடு மற்றும் கோழிகளை பயனாளிகளுக்கு பெற்றுக்கொடுத்தல், அமைச்சினூடாக சேதனப் பசளை உற்பத்திக்கு இயந்திரங்கள் மற்றும் பயிற்சி பெற்றுக்கொடுத்தல் போன்ற வேலைத்திட்டங்கள் பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு அமைச்சின் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றன.

# சௌபாக்கியா உற்பத்திக் கிராம அபிவிருத்தி வேலைத்திட்டம் ஆலையடிவேம்பு - அலிக்கம்பை கிராமத்தில் ஆரம்பம்

**(வி.சுகிர்தகுமார்)**

ஜனாதிபதியின் எண்ணக்கருவில் உருவான சௌபாக்கியா உற்பத்திக் கிராம அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கு அமைவாக ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட அலிக்கம்பை கிராமத்தின் அபிவிருத்தித் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வு நேற்று (14) இடம்பெற்றது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவருமான டபிள்யூ.டி.வீரசிங்க பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

ஜனாதிபதியின் சிந்தனைக்கமைவாக நாட்டிலுள்ள அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளிலும் ஒரு கிராமத்தைத் தெரிவுசெய்து அக்கிராமத்திற்கு ஒரு கோடி ரூபாவை ஒதுக்கீடுசெய்து, அங்கு காணப்படும் வளங்களைப் பயன்படுத்தி குறித்த ஒரு உற்பத்தியை ஊக்குவித்து அதனூடாக அக்கிராமத்தைத் தேர்ச்சி பெற்றதாக மாற்றும் வேலைத்திட்டத்தின் கீழ் இச்செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது.







இதற்கமைவாக ஆலையடிவேம்பில் தெரிவுசெய்யப்பட்ட அலிக்கம்பை கிராமத்தில் வாழும் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு ஒரு கோடி ரூபா பெறுமதியான ஆடுகளை வழங்கி, அவர்களது பங்களிப்புடனும் இத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவருமான டபிள்யூ.டி.வீரசிங்க உள்ளிட்டவர்கள் பிரதேச செயலாளர் உள்ளிட்ட அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்களால் வரவேற்கப்பட்டனர்.

பின்னர் சௌபாக்கியா உற்பத்திக் கிராம அபிவிருத்தி பெயர்ப்பலகையினையும் பிரதம அதிதி திரைநீக்கம் செய்துவைத்தார். தொடர்ந்து மாணவர்களின் பாண்ட் வாத்தியக் குழுவினரின் இசையோடு வரவேற்கப்பட்ட அதிதிகள் அலிக்கம்பை சென் சவேரியர் தேவாலயத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றிலும் பங்கேற்றனர்.

இறை ஆசியோடு ஆரம்பமான நிகழ்வில் பிரதேச செயலாளர் அதிதிகளை வரவேற்று உரையாற்றியதுடன், திட்டம் தொடர்பிலும் விளக்கினார். இதன் பின்னராக தேவாலயத்தின் அருட்தந்தை சூசைநாயகம் அடிகளார் நாடாளுமன்ற உறுப்பினரின் வருகை தொடர்பில் மகிழ்ச்சி தெரிவித்ததுடன், கிராமத்தின் தேவைப்பாடுகள் தொடர்பிலும் எடுத்துரைத்தார்.

இதன் பின்னராக உரையாற்றிய அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவருமான டபிள்யூ.டி.வீரசிங்க கிராமத்தின் பல்வேறு தேவைப்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும், தன்னால் முடிந்தவற்றை நிறைவேற்றித் தருவதாகவும், முதற்கட்டமாக கிராமத்தை இணைக்கும் வீதியினை இவ்வருடத்தினுள் புனரமைத்துத் தருவதாகவும், கல்வி அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும், அத்தோடு கிராம அபிவிருத்திக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ஒரு கோடி ரூபாவிற்கு மேலதிகமாக தனது சொந்த நிதியிலிருந்தும் ரூ. 10 இலட்சத்தை ஒதுக்கீடு செய்து தருவதாகவும் உறுதியளித்தார்.

இறுதியாக தமது கிராமத்திற்கு வருகை தந்து அபிவிருத்தியில் கைகோர்த்த அனைவருக்கும் பொதுமக்கள் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதேச செயலக கணக்காளர் க.பிரகஸ்பதி உள்ளிட்ட அரச அதிகாரிகள் மற்றும் பிரதேச சபை உப தவிசாளர் விக்டர் ஜெகன், பிரதேச சபை உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினரின் ஆலையடிவேம்பு இணைப்பாளருமான சிந்துஜா உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டனர்.

# கந்தளாயில் சிப்தோரா உதவித்தொகை வழங்கிவைப்பு



(கந்தளாய் நிருபர்)

சமுர்த்தி மேம்பாட்டு வங்கியால் செயற்படுத்தப்பட்ட 'சமுர்த்தி சிப்தோரா' உதவித்தொகை திட்டத்தின் கீழ் க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தியடைந்து க.பொ.த. உயர்தரத்திற்கு செல்லும் மாணவர்களுக்கு தெரிவுசெய்யப்பட்ட சமுர்த்தி பெறுநர்களுக்கு மாதாந்தம் 1,500 ரூபா உதவித்தொகை வழங்கும் திட்டம் கந்தளாய் பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான கபில நுவான் அத்துக்கோரளவினால் வழங்கப்பட்டது.

இதில் 50 மாணவர்களுக்கு அடையாள உதவித்தொகை வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் கந்தளாய் பிரதேச செயலகத்தின் சமுர்த்தி மேலாளர் உள்ளிட்ட பல அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# பயன்படுத்தப்படாத நிலங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொண்டு உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை

## திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோரள தீர்மானம்





(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் பயன்படுத் தப்படாத நிலங்களில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதன்மூலம் உற்பத்தியை அதிகரித்து தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிக்க முடியும் என்று திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோரள தெரிவித்தார்.

மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் பிரதேச செயலாளர்களுடனான கலந்துரை யாடலின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் பயிரிடக்கூடிய அனைத்து நிலங்களும் அடையாளம் காணப்பட்டு, அந்த நிலங்களை படிப்படியாக பயிரிடத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அரசாங்க அதிபர் கூறினார்.

அதன்படி, செய்கைக்குத் தேவையான நிலத்தின் அளவு பிரதேச செயலகமட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் உற்பத்தியை அதிகரிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திருகோணமலை மாவட்டத்தில் நீர்ப்பாசன செழிப்புத் திட்டம், காட்டு யானைகள் மற்றும் மனித மோதல், காடழிப்பு, முந்திரி பயிர் திட்டங்கள், நீண்டகாலமாக வசிக்கும் குடும்பங்களுக்கு உரிமம் வழங்குவது தொடர்பான பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இதில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மேலதிக அரசாங்க அதிபர் கே.ஜெயரத்ன, திருகோணமலை மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர். திருமதி கே.பரமேஸ்வரன், பிரதம கணக்காளர், பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலகத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# கொரோனா தொற்றுப்பரவல் தீவிர நிலையால் ஒன்றுகூடல்களை தவிர்க்குமாறு கோரிக்கை

## நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி பறூசா நக்பர்



(நூருல் ஹுதா உமர்)

தொடரும் கொரோனா தொற்று அபாயம் சம்பந்தமாக நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் பறூசா நக்பர் மக்களுக்கு முக்கிய அறிவுறுத்தலொன்றை வெளி யிட்டுள்ளார்.

அந்த அறிவிப்பில் இதுவரை நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 202 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டதுடன், அதில் 06 பேர் மரணமரணமடைந்துள்ளார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், அதில் கடந்த 10 நாட்களில் 11 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளமை மிகவும் ஆபத்தாகவுள்ளது. கொரோனா தொற்று அபாயம் முற்றுப்பெறாத நிலையில், அன்றாட வாழ்வாதார நிலைமைகளைக் கருத்திற்கொண்டு கொரோனாவுடனான இயல்பு வாழ்க்கைக்கு படிப்படியாக நாங்கள் திரும்பிக்கொண்டிருக்கும் இவ்வேளையில், ஒன்றுகூடல்கள் மிகவும் ஆபத்தானவை என்பதை கருத்திற்கொண்டு மக்கள் தங்களின் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பாக, திருமண நிகழ்வுகள், மரண வீடுகள் சுகாதார விதிமுறைகளுக்கு முரணாக ஒன்றுகூடும் பட்சத்தில் கொரோனா தொற்று அதிகரிக்கும் ஆபத்து நிலைமையை கருத்திற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் இளவயதினர் தங்களுடைய ஒன்றுகூடல்களை இன்னும் சற்றுக்காலத்திற்கு தவிர்த்துக்கொள்வதுடன், அத்தியாவசியமான ஒன்றுகூடல்களை சுகாதார விதிமுறைப்படி மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன் என்று தெரிவித்துள்ளார்.

# திருமலை மாவட்டத்தில் 12 மணிநேர நீர் வெட்டு

(கிண்ணியா நிருபர்)

அவசர பிரதான நீர்க் குழாய் திருத்த வேலை காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் குழாய் நீர்வெட்டு 12 மணிநேரம் துண்டிக்கப்படும் - என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் திருகோணமலை பிராந்திய முகாமையாளர் எஸ்.ஜெயந்தன் தெரிவித்தார்.

குறித்த நீர்வெட்டானது இன்று காலை 8 மணிமுதல் இரவு 8 மணிவரை தடைப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை - கண்டி பிரதான வீதி முள்ளிப்பொத்தானை பகுதியிலுள்ள பிரதான குழாய் பகுதியில் ஏற்பட்ட வெடிப்பு மூலமான நீர்க்கசிவு ஏற்பட்டதையடுத்து திருத்த வேலை காரணமாக இவ்வாறு நீர் துண்டிக்கப்படும் எனவும் இது கிண்ணியா, தம்பலகாமம், திருகோணமலை நகர், நிலாவெளி, ஆண்டாங்குளம், பாலைஊற்று, சீனக்குடா ஆகிய பகுதிகளில் குறித்த குழாய் நீர் துண்டிக்கப்படும் எனவும் இதனால் நீரை சேமித்து வைக்குமாறும் பிராந்திய முகாமையாளர் மேலும் பொதுமக்களை கேட்டுள்ளார்.

# அம்பாறை வைத்தியசாலையின் கொரோனா அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு வெண்டிலேட்டர் வழங்கிவைப்பு



(நூருல் ஹுதா உமர், பாறூக் ஷிஹான்)

அம்பாறை மாவட்ட திறன் வாண்மையாளர் சங்கத்தினால் கொடையாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட நிதியின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 35 இலட்சம் பெறுமதியான வெண்டிலேட்டர் உபகரணம் நேற்று முன்தினம் அம்பாறை பொது வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் உப்புல் விஜயநாயக்கவிடம் கையளிக்கப் பட்டது.

இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் திலக் ராஜபக்ஷ, அம்பாறை மாவட்ட அரச அதிபர் டி.எம்.எல்.பண்டாரநாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.



இந்த வெண்டிலேட்டர் கொள்வனவிற்காக அன்பளிப்புசெய்யப்பட்ட தொகையில் அதிகூடிய தொகையை வழங்கியிருந்த சாய்ந்தமருது - மாளிகைக்காடு வர்த்தக சங்கம் இதன்போது நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்த நினைவுச்சின்னத்தை சாய்ந்தமருது - மாளிகைக்காடு வர்த்தக சங்கத் தலைவர் எம்.எம்.முபாரக், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலக் ராஜபக்ஷவிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

# இரு மாதங்களுக்குப் பிறகு மட்டு. மாவட்டத்திலிருந்து தூர இடங்களுக்கான பஸ் சேவைகள் நேற்று ஆரம்பம்





(ரீ.எல்.ஜவ்பர்கான)

பயணத்தடை மற்றும் மாகாணங் களுக்கிடையிலான பயணத்தடைகள் காரணமாக சுமார் இரு மாதங்களாக தடைப்பட்டிருந்த மட்டக்களப்பிற்கும் கொழும்பு உட்பட தூர இடங்களுக்குமான பஸ் சேவைகள் நேற்று காலை முதல் ஆரம்பமாகின.

இலங்கை போக்குவரத்துச் சபையின் மட்டக்களப்பு டிப்போ ஊடாக குறித்த பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு டிப்போ முகாமையாளர் தெரிவித்தார்.

அத்தியாவசிய மற்றும் காரியாலய சேவைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கொரோனா சுகாதார நடைமுறைகளைப் பேணி பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன.



மட்டக்களப்பிலிருந்து கொழும்பிற்கான முதலாவது பஸ் சேவை நேற்று அதிகாலை 6.30 மணிக்கு ஆரம்பமானது. பதுளை, யாழ்ப்பாணம், மன்னார் போன்ற தூர இடங்களுக்கும் பஸ் சேவைகள் இடம்பெற்றன.

# மட்டக்களப்பில் தெரிவுசெய்யப்பட்ட வைத்தியசாலைகளுக்கு கொரோனா பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கிவைப்பு





(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தெரிவுசெய்யப்பட்ட ஐந்து வைத்தியசாலைகளுக்கு கொரோனா பாதுகாப்பு உபகரணங்களை மட்டக்களப்பு நலிவுற்றோர் அபிவிருத்திச் சங்கம் ஐக்கிய இராச்சியம் மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் புற்றுநோய் உதவி சங்கம் ஆகிய அமைப்புகள் இணைந்து நேற்று முன்தினம் வழங்கியுள்ளன.

கொரோனா தொற்றிலிருந்து மக்களையும் வைத்தியதுறை சார்ந்த சுகாதார சேவையாளர்களை பாதுகாக்கும் நோக்குடன் மேற்படி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன

நாவற்காடு, கரடியனாறு, வாழைச்சேனை, களுவாஞ்சிக்குடி ஆகிய கொரோனா சிகிச்சை நிலையங்களுக்காக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து பணிப்பாளரிடம் வழங்கப்பட்டது.

அத்துடன், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் கொரோனா சிகிச்சை நிலையத்திற்காக ஒரு தொகுதி கொரோனா பாதுகாப்பு உபகரணங்கள் போதனா வைத்தியசாலை பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டன.

இதன்போது மொத்தமாக சுமார் 12 இலட்சத்து எண்பதாயிரம் ரூபா பெறுமதியான கொரோனா பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டதாக வட்ஸ் அமைப்பினர் தெரிவித்தனர்.

இவ்விரு வேறு நிகழ்வுகளில் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன், போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் கலாரஞ்சனி கணேசலிங்கம், வட்ஸ் அமைப்பின் தலைவர் முத்துலிங்கம், பொருளாளர் தணிகாசலம், வைத்தியர் மயூரதன் மற்றும் கணக்காளர்கள் வைத்தியர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# கல்வி மாத்திரமன்றி நாட்டின் அனைத்து நிர்வாகங்களையும் இராணுவமயப்படுத்தும் முயற்சிகள் இடம்பெறுகின்றன

## கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கருணாகரம்

(வீரமுனை நிருபர்)

கோட்டாபய அரசாங்கம் ஒருவருக்கு ஒரு நீதி என்ற அடிப்படையிலேயே செயற்படுகிறது - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

கல்வி நடவடிக்கைகள் இராணுவமயமாவது தொடர்பாக வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

கல்வி மாத்திரமல்லாது நாட்டின் அனைத்து நிர்வாகங்களும் இராணுவமயப்படுத்தும் முயற்சிகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்தவகையில் இலவச கல்வியை இராணுவ மயமாக்கி தாங்கள் விரும்பியபடி செய்வதற்காக கொத்தலாவல இராணுவப் பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்தை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, கல்வி அமைச்சு, உயர்கல்வி அமைச்சுக்கு மேலாக ஒரு முடிவு எடுக்கக்கூடிய நிலையில் இருக்கிறது. எதிர்காலத்தில் புதிய பாடசாலைகளை அமைத்து இராணுவ



அதிகாரிகளை ஆசிரியர்களாக நியமித்து பாடசாலைகள் நடத்தக்கூடியளவிற்கு அந்தச் சட்டமூலம் வழிவகுக்கின்றது. இதனை எந்தவொரு தனி மனிதனாலும் ஏற்றுக்கொள்ளவே முடியாது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உட்பட 31 தொழிற்சங்கப் பிரதிநிதிகளின் கைது, பிணை விடுவிப்பு மற்றும் தனிமைப்படுத்தல் தடுத்து வைப்பு தொடர்பாக சிவில் சமூக அமைப்புகள் மற்றும் எதிர்கட்சிகள் நீதிமன்றத்தை நாடியுள்ளன.

பசில் ராஜபக்ஷ நாடாளுமன்ற உறுப்பினராக, நிதியமைச்சராக பதவியேற்றபோது இலங்கை முழுவதும் ஒன்றுகூடிய மகிழ்ச்சிக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டவர்களை அரசும் பாதுகாப்புப் படையினரும் கண்டும் காணாமல் இருந்தார்கள். அரசுக்கு எதிராக தேவைகளையும் உரிமைகளைப்பெற ஆர்ப்பாட்டங்கள் செய்தவர்கள் கைது செய்யப்பட்டு, பிணை கொடுத்ததன் பிற்பாடு கட்டாயத் தனிமைப்படுத்தலில் இருப்பதென்பதை உண்மையிலேயே ஒரு தலைப்பட்சமாக ஏற்றுக்கொள்ள முடியாத அராஜக செயற்பாடாகவே பார்க்கப்படவேண்டும் - என்றார்.

# ஹஜ் பெருநாளை முன்னிட்டு அக்கரைப்பற்றில் விசேட ஏற்பாடுகள்

## வர்த்தகர்களுடன் நேற்று விசேட கலந்துரையாடல்



(நூருல் ஹுதா உமர் )

அக்கரைப்பற்று மாநகர எல்லைக்குள் ஹஜ் பெருநாள் வியாபாரம் களைகட்டி வருகின்ற நிலையில், ஆடை விற்பனை நிலையங்களில் கடைப்பிடிக்கவேண்டிய சுகாதார பாதுகாப்பு வழிமுறைகள் தொடர்பாக குறித்த ஆடையக உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தும் விசேட கலந்துரையாடல் நேற்று அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி தலைமையில் மாநகர கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின்போது அக்கரைப்பற்று பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எவ்.எம்.ஏ.காதர், பொதுச் சுகாதார பரிசோதகர், பிரதேசத்தின் ஆடையக உரிமையாளர்கள் கலந்துகொண்டனர். எதிர்வரும் 21ஆம் திகதி தியாகத் திருநாள் ஹஜ் பெருநாள் கொண்டாடப்படவிருக்கிறது.

இந்நிலையில் பொதுமக்கள் ஆடை விற்பனை நிலையங்கள் மற்றும் இதர வர்த்தக ஸ்தாபனங்களில் மும்முரமாக கொள்வனவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் .

கொரோனா தொற்று நாட்டுமக்களை ஒரு பக்கம் அச்சுறுத்திக்கொண்டிருக்கும் இவ்வேளையில், எதிர்வரும் ஹஜ் பெருநாள் பண்டிகைக் கால வியாபார நடவடிக்கைகளை ஒழுங் கமைக்கப்பட்ட சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளுடன் எவ்வாறு முன்கொண்டுசெல்வது தொடர்பாக இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

மேலும், அக்கரைப்பற்று மாநகர எல்லைக் குட்பட்ட ஆடையகங்கள் பெருநாளை முன்னிட்டு எதிர்வரும் நாட்களில் நள்ளிரவுவரை திறந்திருக்கும்வண்ணம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே, இப்பிராந்திய வாழ் பொதுமக்கள் முண்டியடித்துக்கொண்டு ஆடைக் கொள்வனவில் ஈடுபடுதலை தவிர்த்து, நிகழும் அசாதாரண சூழலை கருத்திற்கொண்டு பொறுமையாக செயற்படுமாறும் இவ்விடயங்களை மிக நேர்த்தியாக, இறுக்கமாக செயற்படுத்துமாறும் மாநகர பிதா அதாஉல்லா அகமட் ஸகி பிரதேச சுகாதார பணிமனையினருக்கும், வர்த்தகர் களுக்கும் வேண்டுகோள் விடுத்தார்.

# தவறான முடிவுகளால் பொதுமக்கள் வீதிக்கு இறங்கவேண்டியுள்ளது

## சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. குற்றச்சாட்டு

தமது சொந்தநலனுக்காக ஒருசில அதிகாரிகள் எடுக்கும் தவறான முடிவுகளால் மக்கள் வீதியில் இறங்கிப் போராடவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

வவுனியா புதியசின்னப்புதுக்குளம் பகுதியில் செயற்பட்டுவரும் கற்குவாரியால் அந்தப் பகுதி மக்கள் பல்வேறு ஆபத்துகளை எதிர் நோக்கியுள்ளனர். இது தொடர்பாக நேற்று அந்த கிராமத்திற்கு விஜயம்செய்த நாடாளுமன்ற உறுப்பினர் பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடியதன் பின்னர் ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

குறித்த பகுதியிலுள்ள கற்குவாரியால் கிராம மக்கள் பல்வேறு உளவியல் பாதிப்புக் குள்ளாகியுள்ளனர். இந்தப் பகுதி மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர். எனவே, இந்த மக்களின் வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாக்கும் விதத்தில் இந்த கற்குவாரி செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. மக்கள் நலன்சார்ந்து துறைசார்ந்த அதிகாரிகள் செயற்படாமையே இதற்கு முக்கிய காரணம்.

தங்களுடைய சொந்த நலனுக்காக ஒருசில அதிகாரிகள் எடுக்கும் தவறான முடிவுகளால்



மக்கள் வீதியில் இறங்கிப் போராட வேண்டிய சூழல் இருக்கிறது. அப்படியான ஜனநாயக போராட்டங்களைகூட கொவிட் தடுப்புச்சட்டங்களை காட்டி அரசாங்கம் ஒடுக்கி வருகின்றது.

குறித்த காணிக்கான உரிமையாளர் உரிமைப்பத்திரத்தையும் வைத்திருக்கும் நிலையிலும் குறித்த காணி கற்குவாரிக்காக வழங்கப்பட்டுள்ளது. இது மக்களின் வாழ்வையும், வாழ்வாதாரத்தையும் மிகவும் பாதிக்கின்றது. இதனை நிறுத்துவதற்கு அரசும் துறைசார் அதிகாரிகளும் முழுமையாக செயற்படவேண்டும்.

அத்துடன், நிதி அமைச்சராக பதவி ஏற்றுள்ள பெசில் ராஜபக்ஷ கடந்த 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் முதல் தற்போதுவரை அரசாங்கத்தின் முக்கிய பதவிகளில் செயற்பட்டிருந்தார். அவருடைய நிர்வாகத்திலேயே அரசின் சகல செயற்பாடுகளும் இடம்பெற்றிருந்தன. அவர் தற்போது நிதி அமைச்சராக பதவி ஏற்பதால் இலங்கையின் பொருளாதாரத்தை மீட்கமுடியும் என்று நான் நம்பவில்லை.

இலங்கையின் பொருளாதாரத்தை நிமிர்த்த வேண்டுமாக இருந்தால் ஜனாதிபதிமுதல் அரசாங்கத்தை சார்ந்தவர்கள் தமது சுயநல அரசியலை கைவிடவேண்டும். பணம் உழைப்பதைவிடுத்து மக்கள் நலன்சார்ந்து சிந்தித்தால் மாத்திரமே அது சாத்தியமாகும்.

2020ஆம் ஆண்டு ஜூன் மாதம் இறக்குமதி செய்யப்பட்ட சீனியில் மிகப்பெரிய பணத்தைப் பெற்றதாக ஜனாதிபதி மீது குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. அவர் மீதே இப்படி குற்றச்சாட்டுகள் இருக்கும்போது அவரது பிள்ளைகள், மருமக்கள், உறவினர்கள் அமைச்சர்களாக இருக்கும்போது நாட்டை முன்னேற்றமுடியும் என்ற நம்பிக்கை எனக்கில்லை. அரசில் தனிப்பட்டவர்களின் செயற்பாடு காரணமாக தமிழ் மக்கள்மாத்திரமல்ல, சிங்கள மக்களும் பட்டினிச்சாவை எதிர்கொள்ளும் மிகப்பெரிய ஆபத்தினை எதிர்நோக்கியுள்ளனர்- என்றார்.

# பொருளாதாரக் கொள்கைகள் - திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளராக அனுஷ பெல்பிட்ட நியமனம்






பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்ட அனுஷ பெல்பிட்ட விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து நேற்று அலரி மாளிகையில் வைத்து தனது நியமனக்கடிதத்தை பெற்றுக் கொண்டார் .

இணைந்த சேவைகள் உதவிப் பணிப்பாளர், ஜனாதிபதி உதவிச் செயலாளர், ஜனாதிபதி நிதியத்தின் கணக்காளர், அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம், அரசாங்க தகவல் திணைக்களத்தின் முதலாவது பணிப்பாளர் நாயகம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பத்திரிகை நிறுவனத்தின் தலைவர், இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் மற்றும் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் என பல்வேறு துறைகளில் பணியாற்றிய அனுஷ பெல்பிட்ட 34 ஆண்டுகால சேவை அனுபவம் கொண்ட சிரேஷ்ட அதிகாரியாவார்.

கடந்த ஜூன் 22ஆம் திகதி அரச துறையிலிருந்து ஓய்வுபெற்ற அனுஷ பெல்பிட்ட அரசியலமைப்பின் 52 (1) பிரிவிலுள்ள அதிகாரங்களின்படி ஜனாதிபதியினால் உடனடியாக அமுலுக்கும் வரும் வகையில் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்ட அமுலாக்க அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டார் .

இந்தச் சந்திப்பில் பிரதமரின் செயலாளர் காமினி செனரத், பிரதமர் அலுவலக பணிக்குழாம் பிரதானி யோஷித ராஜபக்ஷ உள்ளிட்டோர் கலந்துகொண்டனர் .



பௌத்தாலோக மாவத்தையிலுள்ள சாந்தி அறக்கட்டளை விகாரையில் நேற்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க கொவிட்-19 தடுப்பு தடுப்பூசியை பெற்றுக்கொண்டபோது...



இலங்கைக்கான பங்களாதேஷ் தூதுவர் - பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்றது.

# உக்கக்கூடிய லஞ்ச் சீட் பயன்படுத்த தீர்மானம்


நாட்டில் எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதிமுதல் உக்கக்கூடிய லஞ்ச் சீட் மாத்திரம் பயன்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சுற்றாடல் அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் மஹிந்த அமரவீர இந்த விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தினார்.

பொலித்தீன் உற்பத்திகளின்போது உக்காத லஞ் சீட் தயாரிப்பு மற்றும் விநியோகத்திற்கு எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் தடை விதிக்கப்பட்டுள்ளது. தற்போது சந்தையில் காணப்படும் லஞ்ச் சீட்டை மாத்திரம் விற்பனைசெய்ய ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நாளாந்தம் 12 தொடக்கம் 15 மில்லியன் லஞ்ச் சீட் பயன்படுத்தப் படுவதாக சுற்றாடல் அமைச்சு அறிவித்துள்ளது.

# ஐந்து பிரதான தேசிய விளையாட்டு சங்கங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தம்



நாட்டிலுள்ள பிரதான ஐந்து தேசிய விளையாட்டு சங்கங்கள்/சம்மேளனங்களின் பதிவுகளை தற்காலிகமாக இடைநிறுத்த இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்த இடைநிறுத்தம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைய, இலங்கை வலைப்பந்தாட்டச் சம்மேளனம், இலங்கை ஜூடோ சங்கம், இலங்கை ஸ்கிரப்பல் சம்மேளனம், இலங்கை சர் பிங் சம்மேளனம் மற்றும் இலங்கை ஜூட்ஜிட்சு சம்மேளனம் என்பனவே இவ்வாறு இடைநிறுத்தப்பட்டுள்ளன.

தற்காலிக செயலொழுங்காக இந்த தேசிய விளையாட்டுச் சங்கங்களின் / சம்மேளனங்களின் நிர்வாகம் மற்றும் ஏனைய ஏதேனும் தொடர்புடைய நடவடிக்கைகள் மற்றும் பொறுப்பானவர் தேர்தல் ஆகியவற்றிற்கு அழைப்பு விடுப்பதற்கும் நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதுவரையில் உகந்தவிதமாக நிறைவேற்றுவதன் பொருட்டு கடந்த முதலாம் திகதியிலிருந்து அமுல்படுத்தப்படும் வரையில் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அமல் எதிரிசூரிய பொறுப்பாக இருப்பார் என்றும் அந்த வர்த்தமானி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.







டெங்கு கட்டுப்பாட்டு உதவியாளர்கள் சகலரையும் நிரந்தரமாக்குமாறு கோரி, கொழும்பு பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயத்துக்கு முன்னால் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. (படப்பிடிப்பு – எஷான் தஸநாயக்க)

த

# போராட்டங்கள் ஜனநாயக சமூகத்தில் அவசியமாக இருக்கவேண்டியதொன்றாகும்!



## மக்களின் சுதந்திர உரிமைகளுக்கான சவால்களை முறியடிக்க வேண்டும் என்கிறார் இம்தியாஸ் எம்.பி

எதிர்ப்பை வெளிப்படுத்தல் என்பது ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிய மனித உரிமையாகும். குடிமக்களின் பேச்சுச் சுதந்திரத்தை அனுபவிக்கும் ஒரு வழியாக போராட்டங்களை சுட்டிக்காட்டலாம். போராட்டங்கள் ஒரு உயிர்ப்புள்ள ஜனநாயக சமூகத்தில் அவசியமாக இருக்கவேண்டிய ஒரு விடயமாகும் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் விளக்கமளித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வரலாறு முழுவதும் நேர்மறையான சமூக மாற்றத்திற்காக பேராட்டங்கள் அளித்த ஊக்கத்தின் ஏராளமான எடுத்துக்காட்டுகளை நாம் மேற்கோள் காட்டலாம். சர்வதிகார ஆட்சிகள் மற்றும் முடியாட்சிகள் என்பவற்றின் தோல்விகளின் வரலாற்றைப் பார்க்கும்போது இதை நாம் நன்றாக புரிந்துகொள்ள முடியும். எதிர்ப்பை வெளிப்படுத்தல் எனும் விடயம் ஒரு ஜனநாயக சமூகத்தின் முன்னேற்றத்திற்கு குடிமக்கள் நேரடியாக பங்களிப்பதற்கான ஒரு வாய்ப்பாகும். ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் நேரடி பிரதிநிதித்துவத்தில் ஈடுபட முடியாத குடிமக்கள் குழுவிற்கு ஒரு பிரதிநிதித்துவ ஜனநாயக அமைப்பில் இதற்கான இடம் மிகவும் முக்கியமானதாக அமைகிறது. ஒரு நாட்டின் நடப்பு ஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் உரிமையை, அந்த ஆட்சிக்கு ஒரு சவாலாகவோ அல்லது சங்கடமாகவோ பார்த்தாலும், குடிமக்கள் தங்களின் அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஒரு மதிப்புமிக்க கருவியாகும்.

கொவிட்-19 தொற்றுநோய் உலகம் முழுவதும் பரவத் தொடங்கியதும், குடிமக்கள் ஒன்றுகூடுவதற்கான உரிமையை இயற்கையே தடைசெய்துள்ளது. அரசியலமைப்பின் 14ஆவது பிரிவு, ஒவ்வொரு குடிமகனுக்கும் கருத்துச் சுதந்திரம் உள்ளிட்ட பேச்சு வெளிப்பாட்டு சுதந்திரத்திற்கான உரிமை மற்றும் அமைதியான ஒன்றுகூடல்களுடன் அமைதியான பங்கேற்புகளை உறுதிப்படுத்துகிறது. எமக்குத் தெரிந்தவரை, எந்தவொரு சட்டமும் அரசியலமைப்பிற்கு அப்பாற்பட்டதல்ல. கொவிட் -19 தொற்றுநோய் பரவலுடன், உலகம் முழுவதும் புதிய சட்டங்கள் இயற்றப்பட்டன. மேலும் பல சுகாதார அதிகாரிகள் மற்றும் நிபுணர்களின் ஆலோசனையின்பேரில் வர்த்தமானி விதிமுறைகள் போன்றவற்றுக்குள் கட்டுப்படுத்தப்பட்டன. இந்தச் சூழ்நிலையை உலகம் முழுவதும் நாம் காணலாம்.

இதற்கிடையில், தனிமைப்படுத்தல் ஒரு சுகாதார பாதுகாப்பு நடவடிக்கை என்றும் அது தண்டனையாகவோ அல்லது தடுப்புக்காவலாகவோ பயன்படுத்தப்படக்கூடாது என்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. பிணையில் விடுவிக்கப்பட்ட நபர்களை தடுத்துவைப்பது தனிமைப்படுத்தல் மையங் களில் கட்டாயமாக தடுத்துவைப்பது வலுக்கட்டாய மானதும் சட்டவிரோதமானதுமாகும். இந்த நடவடிக்கை, சந்தேகநபர்களை பிணையில விடுவித்த நீதிமன்றத்திற்கு அவமானம் என்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்தகைய கைதுகள் மற்றும் பலவந்தமான தடுப்புக்காவல்கள் கொவிட்-19 தொற்றை தனிப்பதற்கான சுகாதார அதிகாரிகள், பாதுகாப்புப் படைகள் மற்றும் பொலிஸ் துறையின் உண்மையான முயற்சிகளுக்கு எதிர்பாராத தீங்குகளை விளைவிக்கும். எதிர்ப்புத் தெரிவிக்கும் குடிமக்களின் சுதந்திரத்தை மோசமாக பாதிக்கும் வகையில் சுகாதார வழிகாட்டுதல்களை பயன்படுத்த அனுமதிக்கக்கூடாது. சுகாதார விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் கொவிட் -19 பரவுவதைத் தடுப்பதே அவற்றின் நோக்கம் என்பதை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தியாவில் விவசாய எழுச்சிகள் மற்றும் இனவெறி மற்றும் பொலிஸ் வன்முறைக்கு எதிரான அமெரிக்காவில் நடைபெறும் பேரணிகள் போன்ற போராட்டங்களுக்கு ஜனநாயக சமூகத்திற்குள் இருக்கும் வாய்ப்புகளை காண்கிறோம்.

தனிமைப்படுத்தப்பட்ட சட்டத்தின் போர்வையில், குறிப்பாக அரசியல்வாதிகள், பெருமளவிலான அதிகாரத்தில் இருப்பவர்கள், தங்கள் எதிரிகளை அடக்குவதற்கும் அவர்களின் குரல்களை மௌனமாக்குவதற்கும் இந்த சட்டங்களைப் பயன்படுத்துவதை நாம் தெளிவாகக் காணலாம்.

இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பின்வரும் கருத்துகளை தெரிவித்துள்ளார் கொவிட் அச்சுறுத்தலின்பேரில் சில நாடுகளிலுள்ள பொறுப்புக்கூற வேண்டியவர்கள், மாற்றுக் கருத்தாளர்களை மௌனமாக்குவதற்கும், அடக்குவதற்கும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் அறிக்கையிடல் மற்றும் அவற்றின் அனைத்து நடவடிக்கைகளையும் தடைசெய்வதையும் நாங்கள் காண்கிறோம். இது தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவும் சிறப்பு ஏற்பாடுகளையும் அறிக்கைகளையும் வெளியிட்டுள்ளது.

எதிர்ப்பு ஊர்வலங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங் களைத் தடுப்பதற்கும், நாட்டுமக்கள் மத்தியில் அச்சமான சூழ்நிலைகளை உருவாக்குவதற்கும் ஒரு வழிகாட்டியாக சுகாதார சேவைகளின் பணிப்பாளர் நாயகத்தின் அறிக்கை கடந்த சில நாட்களாக இலங்கை அரசாங்கத்தினால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் என்ன நடக்கிறது என்றால், அரசியல் கட்சித் தலைவர் ஒருவரின் நாடாளுமன்ற பிரவேசத்தின்போது முன்னெடுககப்பட்ட வெற்றிக் கொண்டாட்டங்களில் சட்டம், செயலில் இல்லை. அதேநாளில் நாடாளுமன் றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற மசோதாவை எதிர்க்கும் மக்கள் குழுவுக்கு எதிராக சட்டம் மனிதாபிமானமற்ற முறையில் செயற்படுத்தப்படுகிறது. நாட்டில் நடைமுறையில் ஒரு சட்டமா அல்லது இரண்டு சட்டங்களா என்பது ஒரு மிகப்பெரிய மர்மமாகும். முழு நாடும் நெருக்கடிக்கு மத்தியில் உள்ளது. வறுமை, வேலையின்மை, சுகாதார நெருக்கடி, கடன் நெருக்கடி. உர நெருக்கடி, நண்பர்களின் ஆதிக்கம், முதலாளித்துவம், மேலாதிக்கம், போன்ற இன்னோரன்ன நெருக்கடிகளுக்கு மத்தியில் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு மனிதாபிமானமற்ற தாக்குதல்கள் இடம் பெறுகின்றன.

இந்த அநியாயம் மற்றும் போலி கொள்கைகள் தோற்கடிக்கப்பட வேண்டும். நமது மக்களின் சுதந்திர உரிமைகளுக்கான சவால்களை முறியடிக்க வேண்டும். இதற்காக நாடாளுமன்றத்தில் ஒரு போராட்டம் உள்ளது. நீதிமன்றங்கள் முன் ஒரு போராட்டமும் உள்ளது. ஜனநாயக முறையில் மக்களுடன் நடத்தப்படவேண்டிய போராட்டமும் உள்ளது.

நமது சமூகத்தின் ஜனநாயக இருப்பு எதிர்கொண்டிருக்கும் இந்த ஆபத்துகளையும் சவால்களையும் நாம் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். இந்த நிலையைத் தோற்கடிப்பதற்காக குறுகிய நோக்கங்கள் இல்லாமல் ஜனநாயகத்தின் இருப்பைப் பாதுகாக்க அனைத்து அரசியல் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் உட்பட அனைத்து அமைப்புகளும் மக்களும் ஒன்றாக நிற்கவேண்டிய நேரம் வந்திருக்கின்றது. நாட்டின் எதிர்காலத்திற்காக நாம் ஒரு பரந்த சிந்தனைப் பார்வையோடும் பொறுப்புடனும் செயற்பட வேண்டும்.

# கத்தியால் வெட்டி நபரொருவர் கொலை

(ஜூட் சமந்த)

நபரொருவரை கத்தியால் வெட்டிக் கொலை செய்ததாக கூறப்படும் சந்தேநபரை கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக வண்ணாத்திவில்பொலிஸார் தெரிவித்தனர்.

வண்ணாத்திதுவில், மங்கலபுர பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு 9.00 மணியளவில் இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வண்ணாத்திதுவில், மஹ்கலபுர பிரதேசத்தைச் சேரந்த 36 வயதுடைய நபரொருவரே இந்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். பழைய பிரச்சினையினால் ஏற்பட்ட முரண்பாட்டினால் இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக இதுவரையில் முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவ்வாறு கத்தியால் தாக்கப்பட்டுள்ள நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டிருந்தாலும் அவர் இதுவரையில் கைதுசெய்யப்படவில்லை.

நீதிமன்ற விசாரணைகள் இடம்பெறவுள்ளதுடன் வண்ணாத்திதுவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பொருளாதார அபிவிருத்தி - சுற்றுலாத்துறை ஒத்துழைப்புகள் தொடர்பில் வியட்நாம் - இலங்கைக்கு இடையில் விசேட பேச்சு



கொழும்பிலுள்ள வியட்நாம் தூதுவர் ஹோ தி தன் ட்ரூக் நேற்று முன்தினம் பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரியவை வெளிநாட்டு அமைச்சில் வைத்து மரியாதை நிமித்தம் சந்தித்தார்.

இரு நாடுகளுக்கிடையிலான நீண்டகால இருதரப்பு உறவுகள் குறித்து மீண்டும் வலியுறுத்து கையில், பொருளாதார அபிவிருத்தி, சுற்றுலா மற்றும் தென்கிழக்காசிய பிராந்தியத்திலுள்ள நாடுகளுடன் வர்த்தக உறவுகளை உருவாக்குதல் ஆகியவற்றில் இலங்கை அரசாங்கம் முக்கிய கவனம் செலுத்துவதாக இராஜாங்க அமைச்சர் பாலசூரிய குறிப்பிட்டார்.

இரு நாடுகளுக்குமிடையிலான நெருங்கிய மத உறவுகளை கருத்திற்கொண்டு, விகாரைகளுக் கிடையிலான தொடர்புகளின் ஒத்துழைப்பை புதுப்பிப்பதன் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டிய இராஜாங்க அமைச்சர் பாலசூரிய, இரு நாடுகளுக்கும் இடையிலான மத மற்றும் கலாசார நலன்களைப் பகிர்ந்துகொள்வதற்காக வியட்நாமின் பௌத்த விகாரைகளுடன் இணைந்து கொள்வதற்கான விருப்பத்தை வெளிப்படுத்தினார்.

இந்தச் சந்திப்பில், வியட்நாமில் இயற்கை விவசாயத்தை அறிமுகப்படுத்துவதற்காக வியட்நாம் அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளை விளக்கிய தூதுவர் ட்ரூக், அந்த அனுபவங்களை இலங்கையுடன் பகிர்ந்து கொள்வதற்கான விருப்பத்தை வெளிப்படுத்தினார். இரு நாடுகளுக்குமிடையிலான விவசாய அபிவிருத்தி ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் தற்போது முழுமையான செயலாக்கத்தில் உள்ளது.

மேலும், இலங்கை மற்றும் வியட்நாமின் தகவல் தொழில்நுட்பத்துறையில் உறவுகளை மேலும் மேம்படுத்துவதற்கான சாத்தியப்பாட்டை இராஜாங்க அமைச்சர் பாலசூரிய ஆராய்ந்ததுடன், வியட்நாம் முதலீட்டாளர்கள் தகவல் தொழில் நுட்பம் மற்றும் மென்பொருள் போன்ற பகுதிகளில் முதலீடுசெய்வதற்கான சந்தர்ப்பங்களுக்கு வழிவகுக்கும் வகையில், கொழும்புத் துறைமுக நகரத்தில் தொடர் கலந்துரையாடல்களுக்கான சந்தர்ப்பங்களை வழங்குவதற்கும் ஒப்புக் கொண்டார்.

வியட்நாமிலிருந்து சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிப்பதற்கான சாத்தியப்பாட்டை விளக்கிய இராஜாங்க அமைச்சர் பாலசூரிய, வியட்நாமிலிருந்து சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்காக வியட்நாம் மொழியில் இலங்கை சுற்றுலா குறித்த திட்டங்கள் சமூக ஊடகங்களில் ஒளிபரப்பப்படுவதை எளிதாக்கலாம் என எடுத்துரைத்தார்.

இதன் பிரதிபலிப்பாக, சுற்றுலாவை ஊக்குவிப் பதற்காக இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையே நேரடி விமான இணைப்பை ஏற்படுத்து வதன் முக்கியத்துவத்தை வியட்நாம் தூதுவர் ட்ரூக் எடுத்துரைத்தார். வெளிநாட்டு அமைச்சு மற்றும் கொழும்பிலுள்ள வியட்நாம் தூதரகம் ஆகியவற்றின் அதிகாரிகள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# அரசுசார் ஊழியர்களுக்கு பாதுகாப்பளிப்பதற்காக சட்ட வரைவுகளை மேற்கொள்ள பிரதமர் ஆலோசனை





அரச மற்றும் அரசுசார் ஊழியர்களினால் கடமைகள் நிறைவேற்றப்படும்போது நேர்மையுடன் முன்னெடுக்கும் செயற்பாடு களுக்கமைய அந்த ஊழியர்களுக்கு உரிய பாதுகாப்பளிக்கும் வகையில் சட்ட வரைவுகளை மேற்கொள்ளுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

அரசியல் பழிவாங்கல்களுக்குட்பட்ட அரச மற்றும் அரசுசார் ஊழியர்களுக்கு நிவாரணம் அளிப்பது தொடர்பில் அலரி மாளிகையில் நேற்று முன்தினம் முற்பகல் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதற்கமைய தொடர்புடைய சட்ட வரைவு களை தயாரிப்பதற்கு ஆதரவளிக்கும் முகமாக சட்ட மா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் உள்ளிட்ட குழு நியமிக்கப்பட்டு அப்பரிந்துரைகளை ஒரு மாத காலப்பகுதிக்குள் வழங்குமாறு பிரதமர் பணித்தார். அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்படுத்தப்பட்ட அரச மற்றும் அரசுசார் ஊழியர்களுக்கு நிவாரணமளிப்பதன் நோக்கம் குறித்து பிரதமரின் செயலாளர் காமினி செனரத் விளக்கமளித்தார்.

கடந்த 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை தீர்மானத்திற்கமைய இதுவரை முன்னெடுக்கப் பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் சட்ட வரைஞர் தில்ருக்ஷி சமரவீர மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் விவேகா சிறிவர்தன ஆகியோர் இதன்போது தெளிவுபடுத்தினர்.

அதிகாரிகளுக்கான சட்ட கட்டமைப்பிற்கு அப்பால் நேர்மையுடன் கடமைகளைச் செய்ய அனுமதிக்கக்கூடிய வரம்புகளை அடை யாளம் கண்டு, அதற்குத் தேவையான ஏற்பாடு களை செய்ய நிறுவனத் தலைவர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கான சுற்றறிக்கையை வெளியிடுவதற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட வரைவொன்று அமைச்சரவைப் பத்திரமாக சமர்ப்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. ரத்னசிறி இதன்போது தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தினால் சட்டவிரோத செயற்பாடுகளின் மூலம் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக அரச ஊழியர்களுக்கு முகங்கொடுக்க நேரிட்ட பிரச்சினைகள் தொடர்பில் நீதி அமைச்சின் செயலாளர் எம்.எம்.பீ.கே.மாயாதுன்னே விளக்கமளித்தார்.

குறித்த கலந்துரையாடலில் பிரதமரின் செயலாளர் காமினி செனரத், பிரதமர் அலுவலக பணிக்குழாம் பிரதானி யோஷித ராஜபக்ஷ, பிரதமரின் மேலதிக செயலாளர் (சட்டம்) கணேஷ் தர்மவர்தன, மேலதிக செயலாளர் (சட்டம்) சந்திரா ஜயதிலக்க, ஜனாபதிபதி பணிப்பாளர் நாயகம் (சட்டம்) ஹரிகுப்த ரோஹனதீர உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய பஸ்ஸின் சாரதி - நடத்துநர் கைது

(அனுராதபுரம்)

தனிமைப்படுத்தல் சட்டம் மற்றும் சுகாதார வழிமுறைகளை பின்பற்றாது அதிகளவிலான பயணிகளை ஏற்றிச்சென்ற தனியார் பஸ்ஸின் சாரதியும் பஸ் நடத்துநரும் தலாவ பொலிஸாரினால் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் தலாவ நகரில் வைத்து குறித்த பஸ்ஸை பொலிஸார் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளதுடன், பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துநரை கைதுசெய்துள்ளனர்.

தமுத்தேகமவிலிருந்து அனுராதபுர நகருக்கு ஆசன எண்ணிக்கைகளுக்கு மேலதிகமாக 27இற்கும் அதிகமான பயணிகளை ஏற்றிச் சென்றுள்ள குற்றத்திற்காகவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

தனிமைப்படுத்தல் சட்டங்கள் மற்றும் சுகாதார வழிமுறைகளை பின்பற்ற தவறிய குற்றச்சாட்டின் கீழ் சாரதிக்கும் நடத்துநருக்கும் தலாவ பொலிஸார் தமுத்தேகம நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதற்கு மேலதிகமாக வடமத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையால் பஸ்ஸின் போக்குவரத்து அனுமதிப் பத்திரம் இரண்டு வாரங்களுக்கு இரத்துச் செய்யப் பட்டுள்ளதாக அதிகாரசபையின் தலைவர் நிலந்த ஏக்கநாயக்க தெரிவித்தார்.

# கல்வித்துறையினருக்கு கொரோனா தடுப்பூசி வழங்கும் செயற்றிட்டம் இரத்தினபுரியில் ஆரம்பம்!





(இரத்தினபுரி நிருபர்)

இரத்தினபுரி மாவட்டத்தில் கல்வித் துறையினருக்கு கொரோனா தடுப்பூசி வழங்கும் செயற்றிட்டத்துக்கமைய நேற்றும் தடுப்பூசிகள் வழங்கப்பட்டதுடன் இன்றும் தடுப்பூசிகள் லழங்கப்படவுள்ளன.

இரத்தினபுரி மாவட்டத்தில் 24 பாடசாலைகள் கொரோனா தடுப்பூசி வழங்கும் மத்திய நிலையமாக செயற்பட்டு வருகின்றன. மேற்படி மாவட்டத்தில் கல்வித்துறையினருக்கு தடுப்பூசி வழங்கும் மத்திய நிலையங்களுக்கு சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பெகடுவ நேற்று முன்தினம் நேரில் சென்று கண்காணித்து வருகின்றார்.

கேகாலை மாவட்டத்தில் கல்வித்துறையை சார்ந்த 15 ஆயிரத்து 705 பேருக்கு எதிர்வரும் 19ஆம் திகதி கொரோனா தடுப்பூசி வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





**நுவரெலியா பொதுச் சுகாதார பிரிவுக்குட்பட்ட நானுஓயா நாவலர் கல்லூரியில் கொரோனா தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் நேற்று இடம்பெற்றது. நானுஓயா பிரதேச பாடசாலைகளின் ஆசிரியர்கள், தோட்டப் பகுதிகளின் கள உத்தியோகத்தர்கள் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் முதற்கட்ட ஊசிகள் வழங்கப்பட்டதுடன், இரண்டாம் கட்ட தடுப்பூசிகளை செலுத்திக்கொள்ள திகதி அறிவிக்கப்பட்டவர்களுக்கும் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நுவரெலியா)**

# வெற்றுப் பூச்சாண்டிகளை புறந்தள்ளி மக்களுக்கான திட்டங்கள் தொடரும்

## - கௌதாரிமுனையில் அமைச்சர் டக்ளஸ் -



வெற்றுப் பூச்சாண்டிகளினால் மக்களுக்கு நன்மைகளை ஏற்படுத்தக்கூடிய திட்டங்களை தடுத்துநிறுத்த முடியாது என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நியாயமான கருத்துகள் இருக்குமாயின் அவை பரிசீலிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

கௌதாரிமுனையில் இலங்கை - சீன கூட்டு நிறுவனத்தினால் அமைக்கப் பட்டுள்ள கடலட்டை குஞ்சு வளர்க்கும் நிலையத்தைப் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

கடலட்டைப் பண்ணைகளை அமைப்பதன் மூலம் எமது பிரதேச மக்களுக்கு ஏராளமான வேலைவாய்ப்புகளையும் பொருளாதார நன்மைகளையும் பெற்றுக்கொள்ள முடியும் என்ற அடிப்படையில், ஆய்வு ரீதியாக பொருத்தமான இடங்களை தெரிவுசெய்து பண்ணைகளை அமைக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கடலட்டைப் பண்ணைகள் தொடர்பாக மக்களுக்கு ஏற்பட்டுள்ள புரிதல் காரணமாக ஏராளமானோர் கடலட்டைப் பண்ணைகளை அமைப்பதில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். கடந்த ஒன்றரை வருடங்களில் நூற்றுக்கணக்கான பண்ணைகள் உருவாக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்திலும் ஆயிரக்கணக்கான பண்ணைகளை உருவாக்க திட்டமிடப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறான பண்ணைகளுக்கு இலட்சக்கணக்கான கடலட்டை குஞ்சுகளை இனப்பெருக்கம் செய்து வளர்க்க வேண்டிய தேவையுள்ளது.

இந்நிலையிலேயே 2016, 2017 காலப்பகுதியில் அப்போதைய அரசாங்கத்திடம் அனுமதிகளைப் பெற்று, அரியாலையில் கடலட்டை குஞ்சு பொரிக்கும் நிலையத்தினை அமைத்த இலங்கை - சீனக் கூட்டு நிறுவனம், கடலட்டை குஞ்சு வளர்ப்பு நிலையத்தை கௌதாரிமுனையில் அமைத்துள்ளனர். இதற்குத் தேவையான சட்ட ரீதியான அனுமதிகளை இதுவரை பெற்றுக்கொள்ளவில்லை.

கடலட்டைப் பண்ணையைப் பொறுத்தவரையில் அவசியமான அனுமதிகளைப்பெற்று செயற்பாடுகளை ஆரம்பிக்கவேண்டுமாயின் நீண்டகாலம் காத்திருக்க வேண்டியேற்படும்.

எனவே, நாரா - நக்டா - கடற்றொழில் திணைக்களம் மற்றும் பிரதேச செயலகம் ஆகியவற்றின் ஆலோசனைகளைப் பெற்று மக்களுக்கு பாதிப்புகள் ஏற்படாது என்று அடையாளப்படுத்தப்படுகின்ற இடங்களில் கடலட்டைப் பண்ணைகளை அமைப்பதற்கு தழுவல் அடிப்படையிலான அனுமதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை, எமது மக்களின் பொருளாதார நலன்களையும் நாட்டுக்கான அந்நிய செலாவணியையும் பெற்றுத்தரக் கூடிய முதலீடுகளையும் தொழில்நுட்ப உதவிகளையும் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறான ஒத்துழைப்புகளை பெற்றுக் கொள்வது தொடர்பாக இநதியா, மாலைதீவு, பங்களாதேஷ், நோர்வே, அமெரிக்கா போன்ற நாடுகளுடன் கலந்துரையாடியிருக்கின்றேன்.

அண்மையில்கூட இந்தியத் தூதுவரை சந்தித்து எமது கடற்றொழிலாளர்களுக்கான வாழ்வாதார ஒத்துழைப்புகளை வழங்குமாறு கோரியிருக்கின்றேன். அதேபோன்று முதலீடுகளையும் தொழில்நுட்ப உதவிகளையும் கோரியுள்ளேன்.

இவ்வாறான நிலையில்தான், கடந்த அரசாங்கத்தினால் நாட்டினுள் செயற்பட அனுமதி அளிக்கப்பட்ட குயிலான் நிறுவனம் கடலட்டை குஞ்சு வளர்ப்பு நிலையத்தினை கௌதாரிமுனையில் அமைத்திருக்கின்றது.

இதுதொடர்பாக நேரடியாக நிலைமைகள் ஆராயப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் கௌதாரிமுனை கடற்றொழிலாளர்களுடனும் கலந்துரையாடி எமது மக்களுக்கும் நாட்டுக்கும் பாதிப்பில்லாத தீர்மானம் மேற்கொள்ளப்படும் - என்று தெரிவித்துள்ளார்.

மேலும், கௌதாரிமுனை கடலட்டை குஞ்சு வளர்ப்பு நிலையம் தொடர்பாக அரசியல் நோக்கத்தோடு மக்களைக் குழப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், இவ்வாறான சுயநலப் பூச்சாண்டிகளினால் தன்னுடைய மக்கள்நலச் செயற்பாடுகளை தடுக்க முடியாது. மக்களுக்கு தேவையானதையும் சரியானதையும் செய்வதற்கு எதிராக எத்தகைய எதிர்ப்புகள் ஏற்பட்டாலும் எதிர்கொள்ளத் தயங்கப்போவதில்லை. கடந்த காலங்களில் இவ்வாறான பல சலசலப்புகளையும் சவடால்களையும் எதிர்கொண்டு வெற்றிபெற்றமையை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள் எனவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# கிளிநொச்சியில் மருத்துவர் உட்பட 12 பேருக்கு தொற்று

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரண்டு தடுப்பூசிகளை பெற்றுக்கொண்ட மருத்துவர் ஒருவர் உட்பட 12 பேருக்கு கொவிட்-19 தொற்று

ஏற்பட்டுள்ளது என பிராந்திய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

மாவட்டத்தில் அண்மைய நாட்களில் குறைந்திருந்த கொவிட்-19 தொற்று நேற்று முன்தினம் அதிகரித்துள்ளது. மேற்படி கொவிட்-19 தொற்றாளர்கள் அனைவரும்

சமூகத்திலிருந்து தொற்றுக்குள்ளானவர்கள்.எனத் தெரிவித்துள்ள சுகாதார

பிரிவு, பொதுமக்கள் அனைவரும் முழுமையாக சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவது மிக மிக அவசியம் எனவும் தேவையற்ற நிகழ்வுகள், தேவையற்ற வெளி நடமாட்டங்கள் என்பவற்றை தவிர்க்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

கொவிட்-19 தடுப்பூசி பெற்றுக்கொண்டிருப்பினும் சுகாதார நடைமுறைகளை

கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# நெளுக்குளம் தொழில்நுட்பக் கல்லூரியில் ஒத்திவைக்கப்பட்ட பரீட்சைகள் திங்கள் ஆரம்பம்

வவுனியா நிருபர்

வவுனியா நெளுக்குளம் தொழில்நுட்பக் கல்லூரி உட்பட நாட்டிலுள்ள அனைத்து தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் NVQ Level 5/6 பரீட்சைகள் ஏப்ரல் மாதம் நடைபெறவிருந்த நிலையில், நாட்டில் ஏற்பட்ட கொரோனா தாக்கம் காரணமாக அனைத்து பரீட்சைகளும் ஒத்திவைக்கப்பட்டன.

இந்நிலையில் ஒத்திவைக்கப்பட்ட NVQ Level 5/6 பரீட்சைகள் அனைத்தும் எதிர்வரும் திங்கட்கிழமை (19ஆம் திகதி) ஆரம்பமாகவுள்ளதாக நெளுக்குளம் தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் ஆ.நற்குணேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வெளி மாவட்ட மாணவர்கள் பரீட்சைக்கு வருகைதரக்கூடிய நிலைமை ஏற்படுத்தப்பட்டிருக்கும் நிலைமையில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு ஏதேனும் சந்தேகம் ஏற்படும் பட்சத்தில் கல்லூரியின் அதிபரை அல்லது நிர்வாகத்தை (தொலைபேசி இலக்கம் 024-2223664, 024-2226720) தொடர்புகொள்ளுமாறு அதிபர் தெரிவித்துள்ளார்.

# மன்னாரில் பைஸர் 2 ஆம் கட்ட தடுப்பூசி வழங்கும் செயற்றிட்டம் முன்னெடுப்பு



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் கரையோர பிரதேசங்களில் வசிக்கும் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான பைஸர் கொரோனா தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையின்

2ஆம் கட்டம் நேற்று புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் பிரதேச செயலகம், பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனை ஆகியவை



இணைந்து மேற்கொண்டு வருகின்றன.

மன்னார் கடற்பரப்பில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகள் காரணமாக இந்திய மீனவர்கள் ஊடாக நாட்டுக்குள் கொரோனா தொற்றின் திரிபான டெல்ட்டா வைரஸ் பரவலை தடுக்கும் வகையில் மன்னார் மாவட்டத்திற்கு அண்மையில் 2ஆம் கட்டமாக 22 ஆயிரத்து 230 தடுப்பூசிகள் வழங்கப்பட்ட நிலையில் குறித்த தடுப்பூசிகளை சமூகத்திற்கு வழங்கும் செயற்பாடு மன்னார் மாவட்டத்திலுள்ள ஐந்து பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கிய கரையோர கிராமங்களில் தொடர்ச்சியாக செலுத்தப்பட்டு வருகின்றது.

அதனடிப்படையில் நேற்று புதன் கிழமை மன்னார் மாவட்டத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர்களுக்கான தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தலைமையில் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள், தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவுக்கான வைத்திய அதிகாரி, சுகாதாரத்துறையினர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் முப்படையினரின் ஒத்துழைப்புடன் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மீசாலை வாள்வெட்டு கடை உரிமையாளர் படுகாயம்

(சாவகச்சேரி நிருபர்)

தென்மராட்சி-மீசாலை ஐயா கடைப் பகுதியில் வர்த்தக நிலைய உரிமையாளர் மீது வாள்வெட்டு நடத்தப்பட்டதில் அவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியளவில் தனது வர்த்தக நிலையத்திற்கு முன்பாக நின்றவர் மீது இனந்தெரியாத குழுவொன்று வாளால் வெட்டி படுகாயப்படுத்திவிட்டு தப்பித்துச் சென்றுள்ளது.

இதில் 39 வயதான வர்த்தக நிலைய உரிமையாளர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# நெடுங்கேணியில் ஆணின் சடலம் மீட்பு

(முல்லைத்தீவு நிருபர்)

வவுனியா வடக்கு - நெடுங்கேணி, பட்டுக்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவில் இலங்கட்டிக்குளத்திற்கு அருகாமையில் ஆணொருவரின் சடலம் காணப்பட்டுள்ளது.

அதேவேளை, குறித்த சடலமானது பட்டிக்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த செல்லத்துரை நவரட்ணம் வயது - 60 என்பவருடையதென இனங்காணப்பட்டுள்ளது.

குறித்த நபர் நேற்று முன்தினம் மாலை, தனது மாடுகளைப் பார்ப்பதற்காகச் சென்ற நிலையில், இலங்கட்டிகுளத்தின் அணைக்கட்டிற்கு அருகாமையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேலும் குறித்த இறப்புச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெடுங்கேணி பொலிஸார் மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற போக்குவரத்து பஸ் திருப்பியனுப்பப்பட்டது



வவுனியா நிருபர்

வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த வவுனியா போக்குவரத்துச் சாலைக்கு சொந்தமான பஸ் ஈரப்பெரியகுளம் சோதனைச்சாவடியில் வைத்து திருப்பியனுப்பப்பட்டது.

அத்தியாவசிய தேவைகளின்றி பயணித்தவர்களை ஏற்றிச்சென்றதன் காரணமாக குறித்த பஸ் திருப்பியனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் ஊழியர்கள் மாகாணங்களுக்கிடையில் பஸ்களில் பயணிப்பதற்கு நேற்றுமுதல் மட்டுப்படுத்தப்பட்டளவில் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இதன்படி நேற்றுக் காலை வவுனியா புதிய பஸ் நிலைய பகுதியிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற அரச பஸ் ஈரப்பெரியகுளம் சோதனைச்சாவடியில் வழிமறிக்கப்பட்டு சோதனைக்குட்படுத்தப்பட்டது.

இதன்போது பேருந்தில் பயணித்தவர்களில் சிலர் அத்தியாவசிய தேவை நிமித்தம் செல்கின்றமையை உறுதிப்படுத்தத் தவறியுள்ளனர். இதனால் குறித்த பேருந்து ஈரப்பெரியகுளத்தில் வைத்து மீண்டும் வவுனியாவிற்கு திருப்பி அனுப்பப்பட்டது

# வவுனியா பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராக மங்களேஸ்வரன் பதவியேற்பு





(வவுனியா நிருபர்)

வவுனியா பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராக கலாநிதி த.மங்களேஸ்வரன் நேற்றுக் காலை 8.30 மணியளவில் பதவியேற்றுக்கொண்டார்.

இலங்கை வவுனியா பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராக யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரன் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட நிலையில், வவுனியா, பூங்கா வீதியிலிருந்து மேளதாள வாத்தியத்துடன் துணைவேந்தர் கலாநிதி த.மங்களேஸ்வரன் பூங்கா வீதியில் அமைந்துள்ள பல்கலைக்கழகத்தின் நிர்வாகப் பிரிவுக்கு அழைத்து வரப்பட்டு பதிவாளர் முன்னிலையில் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

அதன்பின் வவுனியா இறம்பாக்குளம் அந்தோனியார் ஆலயம், கந்தசாமி ஆலயம், பிரதான பள்ளிவாசல், நகரப் பன்சாலை ஆகியவற்றுக்கு சென்று மதத் தலைவர்களின் ஆசிர்வாதத்தையும், பெற்றுக்கொண்டார்.

இதன்போது அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

வவுனியா பல்கலைக்கழகமானது அடுத்துவரும் மூன்று வருட காலப்பகுதியில் பிரதேச அபிவிருத்திக்காக பாரியளவிலான பங்களிப்பை வழங்கும்.

இதுவரைகாலமும் யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகமாக செயற்பட்டுவந்த இப்பல்கலைக்கழகம் எதிர்வரும் முதலாம் திகதிமுதல் வவுனியா பல்கலைக்கழகமாக செயற்படவுள்ளது. அதற்கான அனுமதியை பெறுவதற்கு உழைத்த அனைவருக்கும் நன்றிகள். அத்துடன், வவுனியா பல்கலைக்கழகத்தின் முதலாவது பீடாதிபதியாக என்னை ஜனாதிபதி நியமித்துள்ளார். என் மேல் நம்பிக்கைகொண்டு என்னை இப்பதவிக்கு நியமித்தமைக்கு ஜனாதிபதிக்கும் நன்றி.

வவுனியா வளாகம் பல்கலைக்கழகமாக உயர்வதற்கு கடினமாக பாடுபட்டேன். என்னுடைய இலக்கு எனது இந்த மூன்று வருட காலப்பகுதியில் வவுனியா பல்கலைக்கழகத்தை மென்மேலும் தரம் உயர்த்துவதுடன், பிரதேச ரீதியான அபிவிருத்திக்கும், நாட்டின் அபிவிருத்திக்கும் பாரியளவிலான பங்களிப்பை வழங்குவோம்.

எமது பல்கலைக்கழகமானது ஓகஸ்ட் முதலாம் திகதிமுதல் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கின்றது. 11ஆம் திகதி ஜனாதிபதி உத்தியோகபூர்வமாக வருகை தந்து பல்கலைக்கழகத்தை ஆரம்பித்தும் வைக்கவுள்ளார் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, இதுவரைகாலமும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வளாகமாக இயங்கி வந்த யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாகம் எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் 'இலங்கை வவுனியா பல்கலைக்கழகம்' என செயற்படவுள்ளதுடன், எதிர்வரும் 11ஆம் திகதி ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ வருகை தந்து உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கொரோனா காலகட்டத்தில் விவசாய உற்பத்தி களஞ்சியங்கள் அவசியம் தேவை

## அங்கஜன் இராமநாதன் எம்.பி.



(சாவகச்சேரி நிருபர்)

கொரோனா காலகட்டத்தில் விவசாய உற்பத்திக் களஞ்சியங்கள் அவசியம் தேவை - என நாடாளுமன்ற உறுப்பினரும், யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று புதன்கிழமை அச்சுவேலி கைத்தொழில்பேட்டையில் விவசாய உற்பத்திகளைப் பாதுகாப்பதற்காக களஞ்சியம் அமைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்; ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவின் வழிகாட்டுதலில் விவசாய அமைச்சினால் உலக வங்கியின் உதவியுடன் நாடு முழுவதும் விவசாயக் களஞ்சியங்களுக்கான கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, வடக்கில் வடமாகாண சபை ஊடாக பத்து களஞ்சியங்களும் மேலதிகமாக கமநலசேவை திணைக்களம் ஊடாகவும் களஞ்சியங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

உணவு உற்பத்திப் பொருட்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கில் இவ்வாறான களஞ்சியங்கள் அமைக்கப்படுகின்றன. கொவிட் காலகட்டத்தில் விவசாய உற்பத்திகளைப் பாதுகாத்து வைக்கவேண்டிய தேவை உள்ளது. களஞ்சியப் பணிகளை பூர்த்திசெய்யும் பட்சத்தில் உணவு உற்பத்திகளைப் பாதுகாத்து தன்னிறைவடைய முடியும் – என்றார்.

## ஜேக்கப் ஷூமா சிறையிலடைக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு

# கலவர பூமியான தென்னாபிரிக்கா: துப்பாக்கிச்சூட்டில் 75 பேர் பலி







### வணிக வளாகங்கள் சூறை - தீ வைப்பு

தென்னாபிரிக்காவில் முன்னாள் ஜனாதிபதி ஜேக்கப் ஷூமா சிறையிலடைக்கப்பட்டதைக் கண்டித்து, நாடுமுழுவதும் 5 நாட்களாக நீடிக்கும் வன்முறை மற்றும் பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் 75 பேர் கொல்லப்பட்டனர்.

தென்னாபிரிக்காவில் கடந்த 2009ஆம் ஆண்டுமுதல் 2018ஆம் ஆண்டுவரை தொடர்ந்து 9 ஆண்டுகள் ஜனாதிபதியாக இருந்தவர் ஜேக்கப் ஷூமா. 9 ஆண்டுகால பதவிக் காலத்தில், தன்னுடைய அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி அரச சொத்துகளை கொள்ளையடித்ததாக இவர்மீது குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இதையடுத்து இராஜினாமா செய்த அவர் மீது நடத்தப்பட்ட விசாரணையில் ஜூமாவுக்கு 15 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இதையடுத்து அவரது ஆதரவாளர்கள் அவரை விடுவிக்க வலியுறுத்தி கடந்த 5 நாட்களாக கலவரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். பெரு வணிக நிறுவனங்களில் புகுந்த அவர்கள் அங்கிருந்த பொருட்களை கொள்ளையடித்துச் சென்றனர்.


டர்பனில் உள்ள லென்மன்ட் மருத்துவமனையை கலவரக்காரர்கள் தீயிட்டு எரித்தனர். இதையடுத்து அங்கிருந்த நோயாளிகள், மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் அலறியடித்து ஓட்டம் பிடித்தனர்.

ஜோகன்னஸ்பர்க்கிலுள்ள சோவெட்டோவிலுள்ள ஒரு வணிக வளாகத்தில் கொள்ளையடிக்க முயன்றபோது ஏற்பட்ட நெரிசலில் 10 பேர் கொல்லப்பட்டனர். அப்போது நெருப்பில் சிக்கிய பெண்ணொருவர் தனது குழந்தையை கீழே நின்றவர்களிடம் தூக்கி வீசினார். இறுதியில் அந்த வணிக வளாகம் வன்முறையாளர்களால் தீக்கிரையாக்கப்பட்டது.

தொடர்ந்துவரும் போராட்டங்களையும், வன்முறைகளையும் கட்டுப்படுத்த கலவரக்காரர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தினர். தென்னாபிரிக்காவில் கலவரம் தீவிரமடைந்து வருவதால் பாதுகாப்புப் பணிகளுக்காக சுமார் 75 ஆயிரம் இராணுவச் சிப்பாய்கள் நாடு முழுவதும் களமிறக்கப்பட்டுள்ளனர்.

## உலக செய்திகள்

# 18.86 கோடியை கடந்த உலக கொரோனா பாதிப்பு



உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 18.87 கோடியை கடந்துள்ளதுடன், உயிரிழந்தோரின் எண்ணிக்கை 40.68 இலட்சத்தை தாண்டியுள்ளது.

சீனாவின் வூஹான் நகரில் கடந்த 2019ஆம் ஆண்டு கண்டறியப்பட்ட கொவிட் - 19 வைரஸ் தற்போது உலகம் முழுவதுமுள்ள 222 நாடுகள் மற்றும் பெரு நகரங்களை ஆக்கிரமித்து பெரும் மனிதப் பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசிகள் கண்டு பிடிக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு கொண்டுவரப்பட்டுள்ளபோதும் நாளுக்கு நாள் கொரோனா பாதிப்பு மற்றும் உயிரிழப்புகளின எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

அந்தவகையில் உலகம் முழுவதும் கொரோனா பாதிப்பு மற்றும் உயிரிழப்பு தொகையின் அடிப்படையில் அமெரிக்கா, இந்தியா, பிரேஸில் ஆகிய நாடுகள் முன்னிலையிலுள்ளன.

இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனாவால் இதுவரை (பத்திரிகை அச்சுக்குச் செல்லும் வரை) 18,87,92,239 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 40,68,596 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, உலகம் முழுவதும் கொரோனா தொற்றுக்குள்ளானோரில் 17,25,34,635 பேர் இதுவரை குணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு கொரோனா தொற்றுக்குள்ளானோரில் 1,21,13,869 பேர் உலகம் முழுவதுமுள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருவதுடன், அவர்களில் 79,087 பேரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொரோனா தொற்று மற்றும் உயிரிழப்புகளின்படி முன்னிலையிலுள்ள அமெரிக்காவில் இதுவரை 3,48,07,813 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 6,23,435 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தியாவில் இதுவரை 3,09,46,074 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 4,11,439 பேர் உயிரிழந்துள்ளனர்.

பிரேஸிலில் இதுவரை 1,91,52,065 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 5,35,924 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மியன்மாரில் அதிகரிக்கும் கொரோனா தொற்று பாதிப்பு; ஒட்சிசன் பற்றாக்குறை

### சிலிண்டர்களுடன் மக்கள்; வீதியில் காத்திருப்பு



மியன்மாரில் கொரோனா பாதிப்பு அதிகரித்துள்ள நிலையில், யாங்கூன் நகரில் ஒட்சிசன் நிரப்புவதற்காக சிலிண்டர்களுடன் வீதியில் மக்கள் காத்திருக்கும் காட்சிகள் வெளியாகியுள்ளன.

சிலிண்டர்கள் வீதியோரமாக நீண்ட வரிசையில் வைக்கப்பட்டு, ஒட்சிசன் நிரப்பும் வாகனத்திற்காக மக்கள் காத்திருந்தனர்.

மியன்மாரில் ஒட்சிசன் தட்டுப்பாடு நிலவுவதாக பொதுமக்கள் கூறும் நிலையில், பதுக்கலை தடுப்பதற்காகவே தனிநபர்களுக்கான ஒட்சிசன் விநியோகம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அங்குள்ள இராணுவ ஆட்சி தெரிவித்துள்ளது.

மியன்மாரில் கொரோனாவால் இதுவரை 2,01,274 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 4,036 பேர் உயிரிழந்துள்ளனர். இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளானோரில் 47,471 பேர் பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.



# 104 நாடுகளை ஆக்கிரமித்த 'டெல்ட்டா'

### அதிக பாதிப்பு - உயிரிழப்புகள்; எச்சரிக்கிறது WHO



டெல்ட்டா வகை கொரோனா வைரஸ் 104 நாடுகளுக்கு பரவிவிட்டதாக உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதோனம் எச்சரித்துள்ளார்.

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் கடந்த ஒரு ஆண்டு காலத்திற்கும் மேலாக பல கோடி மக்களை தாக்கிவரும் நிலையில், பல்வேறு நாடுகளில் கொரோனா வெவ்வேறு வகையில் உருமாற்றம் அடைந்துள்ளது. அவற்றை ஆல்பா, பீட்டா, காமா, டெல்ட்டா என பெயரிட்டு ஆய்வுசெய்து வருகின்றனர். அதன்படி, உலகளவில் உருமாற்றமடைந்த கொரோனா வைரஸ்களின் இந்தியாவில் உருவான டெல்ட்டா வகை கொரோனா வைரஸ் வேகமாக பரவும் தன்மை கொண்டது.

இந்த வைரஸ் இதுவரை 104 நாடுகளில் பரவியிருப்பதாக தெரிவித்துள்ள உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதோனம், அண்மைக்காலமாக உயிரிழப்புகள் அதிகரிக்க இவ்வகை வைரஸ்தான் காரணம் என தெரிவித்துள்ளார். விரைவில் உலகம் முழுவதும் தீவிர பாதிப்பை ஏற்படுத்தும் வைரஸாக டெல்ட்டா வகை கொரோனா இருக்கும் என கணித்துள்ள அவர், கொரோனா பெருந்தொற்று இன்னும் முடியவில்லை என்பதை மனதில் கொள்ளவேண்டும் என தெரிவித்துள்ளார். தடுப்பூசி போடும் பணிகளை துரிதப்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், உலகம் முழுதும் வைரஸ் பரவல் ஒரே மாதிரியாக இல்லை. இருப்பவர்கள், இல்லாதவர்கள் என இரண்டு விதமாக பரவல் பிரிந்துள்ளது. வசதியுள்ள நாடுகள் தடுப்பூசி போடும் பணியை விரைவாக செய்து வருகின்றன. ஏழை நாடுகளில் தடுப்பூசி கிடைப்பதில்லை. அங்கு நிலைமை தற்போது மிக மோசமாகவுள்ளது.

சில நாடுகளில் சுகாதார பணியாளர்கள், முன்கள பணியாளர் களுக்கே தடுப்பூசி போடப்படாத நிலையில், மூன்றாவது, 'பூஸ்டர் டோஸ்' கேட்டு பல நாடுகள் நெருக்கடி தருகின்றன. இதுபோன்ற நிலைமை தவிர்க்கப்பட வேண்டும். தடுப்பூசியே கிடைக்காத நாடுகளுக்கு முதலில் தடுப்பூசிகள் கிடைக்க வழிசெய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கொவிட் தடுப்பூசி செலுத்தல் கட்டாயமாக்கப்படாது

### ஜேர்மன் அதிபர் ஏஞ்சலா மெர்க்கல் அறிவிப்பு



ஜேர்மனியில் கொவிட் தடுப்பூசி செலுத்திக்கொள்வது கட்டாயமாக்கப்படாது என அந்நாட்டு அதிபர் ஏஞ்சலா மெர்க்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஏஞ்சலா மெர்க்கல் மேலும் தெரிவித்துள்ளதாவது,

''ஜேர்மன் மக்கள் கொவிட் தடுப்பூசியை போட்டுக்கொள்வது உறுதிசெய்யப்படும். இருப்பினும், தடுப்பூசியை போட்டுக் கொள்வதை ஜேர்மன் கட்டாயமாக்காது. இதுபோன்ற நடவடிக்கையை மேற்கொள்வதில் விருப்பமில்லை. மாறாக சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தலை உறுதிசெய்தல், பரிசோதனை மற்றும் கண்காணிப்பை அதிகரித்தலை செய்வோம்'' என்றார்.

ஜேர்மனியில் டெல்ட்டா வைரஸால் தொற்று பரவல் அதிகரித்துவருகிறது. கொரோனாவின் 4ஆவது அலையை எதிர்நோக்கி நாடு செல்வதைத் தடுக்க, டெல்ட்டா வைரஸைக் கட்டுப்படுத்த 85 சதவீத பெரியவர்களுக்கு தடுப்பூசி செலுத்த வேண்டும் என மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

ஆனால், தடுப்பூசி கட்டாய மாக்கப்படாது என ஏஞ்சலா மெர்க்கல் தெரிவித்திருப்பது விமர்சனத்துக் குள்ளாகியுள்ளது.

### 24 ஆண்டுகள் - 20 மாகாணங்களில் தேடல்; 5 இலட்சம் கி.மீ. பயணம்:

# 2 வயதில் கடத்தப்பட்ட மகனை தேடி கண்டுபிடித்த சீன தந்தை





சீனாவைச் சேர்ந்த தந்தையொருவர், 2 வயதில் கடத்தப்பட்ட தன் மகனை 24 ஆண்டுகளாக 20 மாகாணங்களில் 5 இலட்சம் கிலோமீற்றர் பயணம் செய்து தேடிக் கண்டுபிடித்த நெகிழ்ச்சியான சம்பவம் நடந்துள்ளது.

கடந்த 1997ஆம் ஆண்டு சீனாவின் ஷாங்டாங் மாகாணத்தைச் சேர்ந்த குவோ கேங்டாங் என்பவரின் 2 வயது மகன், வீட்டுக்கு வெளியே விளையாடிக் கொண்டிருந்தபோது இரு கடத்தல்காரர்களால் கடத்தப்பட்டான். பொலிஸார் அந்த கடத்தல்காரர்களை கைதுசெய்தனர். ஆனால், குவோ கேங்டாங்கின் மகனை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. தன் மகனை தானே தேடி கண்டுபிடிக்க முடிவுசெய்த குவோ கேங்டாங், தன்னிடமிருந்த பணத்தில் பைக்கொன்றை வாங்கி, ஒவ்வொரு மாகாணமாக சென்று தேடினார். கையிலிருந்த மொத்த பணமும் தீர்ந்துபோன நிலையில் தனது பயணத்தை தொடர்வதற்காக அவர் பிச்சையும் எடுத்துள்ளார்.

இந்தப் பயணத்தின்போது பலமுறை விபத்துக்குள்ளாகி அவரது எலும்புகள் முறிந்துள்ளன. வழிப்பறிக் கொள்ளையர்களிடம் சிக்கி பணம் உள்ளிட்டவற்றையும் இழந்துள்ளார். ஆனாலும், அவர் தன் தேடலை நிறுத்தவில்லை.

தனது மகனை தேடி 24 ஆண்டுகளாக, 20 மாகாணங்களில் கிட்டத்தட்ட 5 இலட்சம் கிலோமீற்றர் பயணம் செய்துள்ளார். அவரின் இந்த அயராத முயற்சிக்கு, தற்போது பலன் கிடைத்துள்ளது. 2 வயதில் கடத்தப்பட்ட தனது மகனை அவர் தற்போது கண்டுபிடித்து விட்டார். இவர்கள் இணைந்த இந்த நெகிழ்ச்சியான சம்பவத்தின் படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன. பல்வேறு தரப்பினரும் அவருக்கு வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.



# சமூக வலைத்தளங்களில் சுதந்திரம் அவசியம்

### கூகுள் சி.இ.ஓ சுந்தர் பிச்சை

சில நாடுகளில் இணைய சுதந்திரம் மீது தாக்குதல்கள் நடத்தப்படுவதாக கூகுள் நிறுவன தலைமை செயல் அதிகாரி சுந்தர் பிச்சை கவலை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பிபிசி தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த அவர்,

''சமூக வலைத்தளங்களில் சுதந்திரம் இருக்கவேண்டியது மிகவும் அவசியம். எனினும், பல நாடுகளில் இவற்றின் மீது தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன'' எனத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க குடிமகனாக இருந்தாலும், இந்தியா தன் மனதில் வேரூன்றி இருக்கிறது. கொரோனாவால் இந்தியாவில் பல ஆயிரம் பேர் இறந்த செய்தியைக் கேட்டு கண்ணீர் விட்டு அழுததாக உருக்கம் தெரிவித்திருந்தார். நான் என்பதில் இந்தியாவின் பங்கு முக்கியமானது எனவும் சுந்தர் பிச்சை தெரிவித்தார்.

# இந்தியாவை ஆட்கொண்ட 'கப்பா': ராஜஸ்தானில் 11 பேருக்கு பாதிப்பு

ராஜஸ்தானில் இதுவரை 11 பேருக்கு கப்பா வகை உருமாறிய கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக அம்மாநில சுகாதாரத்துறை அமைச்சர் ரகு ஷர்மா தெரிவித்துள்ளார்.

ஆல்வார், ஜெய்ப்பூர் பகுதிகளில் தலா நான்கு பேருக்கும், பார்மெர் பகுதியில் இரண்டு பேருக்கும், பில்வாரா பகுதியில் ஒருவருக்கும் கப்பா வகை உருமாறிய கொரோனா தொற்று பாதித்திருப்பது தெரிய வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.



கொரோனா வைரஸிலிருந்து உருமாறிய அதிதீவிர வைரஸ்களில் டெல்ட்டா வைரஸைக் காட்டிலும் பரவும் தன்மை சற்றுக் குறைந்தது 'கப்பா' வைரஸ் என்றும் அமைச்சர் விளக்கமளித்துள்ளார்.

இந்தியாவில் 'கப்பா', 'டெல்ட்டா' வகை உருமாறிய கொரோனா வைரஸ்கள் கடந்த 2 மாதங்களில் அதிகளவில் பரவியதாக ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நாட்டிலுள்ள 10 தேசிய ஆய்வகங்கள் இணைந்து கொரோனா தொற்று பரவல் குறித்த ஆய்வை நடத்தின. அந்த ஆய்வறிக்கையில் கூறப்பட்டிருந்ததாவது, பிரிட்டனில் முதன்முதலில் கண்டறியப்பட்ட 'அல்பா' வகை உருமாறிய கொரோனா வைரஸின் (பி.1.1.7) பரவல், கடந்த ஒன்றரை மாதங்களில் இந்தியாவில் குறையத் தொடங்கியுள்ளது. இந்தியாவில் கண்டறியப்பட்ட உருமாறிய கொரோனா வைரஸ்களான கப்பா (பி.1.617.1), டெல்ட்டா (பி.1.617.2) ஆகியவற்றின் பரவல் கடந்த ஏப்ரல், மே மாதங்களில் அதிகரித்துக் காணப்பட்டது.

கப்பா, டெல்ட்டா வகை வைரஸ்கள் முதலில் மகாராஷ்டிரத்தில் மட்டுமே பரவி வந்தன. ஆனால், தற்போது மேற்கு வங்கம், ஆந்திரம், டில்லி, குஜராத், தெலுங்கானா உள்ளிட்ட மாநிலங்களில் அந்த வைரஸ்களின் பரவல் காணப்படுகிறது.

அதன் காரணமாக அதிக எண்ணிக்கையிலானோர் கொரோனா பாதிப்புக்குள்ளாகின்றனர். முக்கியமாக டெல்ட்டா வகை உருமாறிய கொரோனா வைரஸ்ன் பரவல் அதிகளவில் காணப்படுகிறது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள 10 தேசிய ஆய்வகங்களை இணைத்து 'இன்சாகாக்' என்ற குழுவை மத்திய சுகாதார அமைச்சு கடந்த ஆண்டு டிசம்பரில் அமைத்தது. அக்குழுவானது கொரோனா வைரஸின் மரபணு தொடர்பான ஆய்வுகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய செய்திகள்

# இலங்கைத் தமிழர்களுக்கு இந்திய குடியுரிமை: மத்திய அரசு பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவு



இலங்கையிலிருந்து தமிழகம் சென்றவர்கள் 2019இல் குடியுரிமை சான்று கேட்டு அளித்த விண்ணப்பங்களின் தற்போதைய நிலை குறித்து மத்திய அரசு பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருச்சி கொட்டப்பட்டு இலங்கை அகதிகள் முகாமில் தங்கியிருக்கும் ஜெகதீஸ்வரன், யோகேஸ்வரன் உள்ளிட்ட 65 பேர் தங்களை இலங்கை அகதிகளாக கருதாமல், தாயகம் திரும்பியவர்களாகக் கருதி இந்திய குடியுரிமை வழங்க மத்திய அரசுக்கு உத்தரவிடக் கோரி உயர் நீதிமன்றக் கிளையில் கடந்த 2009இல் மனு தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், மனுதாரர்கள் இந்திய குடியுரிமை கேட்டு புதிதாக அந்தந்த மாவட்ட ஆட்சியர்களிடம் விண்ணப்பிக்க வேண்டும். ஆட்சியர்கள் தாமதப்படுத்தாமல் விண்ணப்பங்களை மத்திய அரசுக்கு அனுப்பவேண்டும். மத்திய அரசு 16 வாரத்தில் உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என 2019 ஜூன் 17இல் உத்தரவிட்டது.

இந்த உத்தரவை நிறைவேற்றாததால் மத்திய வெளியுறவுத்துறை செயலாளர் ஹர்ஷ வர்தன் ஷெர்ங்ளா, உள்துறை அமைச்சர் அஜய்குமார்பல்லா, திருச்சி மாவட்ட ஆட்சியர் சிவராசு ஆகியோர் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்கக்கோரி சுப்பிரமணியம் என்பவர் உயர் நீதிமன்றக் கிளையில் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனு நீதிபதி ஜிஆர்.சுவாமிநாதன் முன்பு விசாரணைக்கு வந்தது.

தமிழக அரசு சார்பில், மனுதாரர்கள் இந்திய குடியுரிமை கேட்டு அளித்த விண்ணப்பங்கள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. மனுதாரர் சார்பில் வழக்கறிஞர்கள் ஹென்றிடிபேன், ஆர்.கருணாநிதி வாதிட்டனர்.

பின்னர் நீதிபதி, திருச்சி மாவட்ட ஆட்சியர் அனுப்பிய விண்ணப்பங்களின் தற்போதைய நிலை குறித்து மத்திய அரசு தெரிவிக்க வேண்டும். தவறினால் மத்திய அரசு அதிகாரிகளுக்கு நீதிமன்ற அவமதிப்பு நோட்டீஸ் அனுப்பப்படும் என உத்தரவிட்டு, விசாரணையை 2 வாரங்களுக்கு தள்ளிவைத்தார்.

# 22இல் நாடாளுமன்ற முற்றுகை போராட்டம்

## விவசாயிகள் அறிவிப்பு

புதிய வேளாண் சட்டங்களுக்கு எதிராக எதிர்வரும் 22ஆம் திகதி நாடாளுமன்றம் முன்பாக போராட்டம் நடத்தப்போவதாக விவசாயிகள் அறிவித்துள்ளனர்.

இந்திய மத்திய அரசு கொண்டுவந்துள்ள புதிய வேளாண் சட்டங்களுக்கு எதிராக கடந்த 8 மாதங்களாக டில்லியில் விவசாயிகள் போராட்டம் நடத்திவருகின்றனர்.

ஒன்றிய அரசுக்கும், விவசாயிகளுக்கும் இடையே நடைபெற்ற பல சுற்றுப்பேச்சு வார்த்தையில் எந்த முடிவும் எட்டப்படவில்லை. இந்நிலையில், அடுத்தகட்ட போராட்டத்திற்கான அறிவிப்பை விவசாய சங்கங்கள் வெளியிட்டுள்ளன.

பாரதிய கிசான் சங்கத் தலைவர் தெரிவிக்கையில், ''விவசாயிகள் போராட்டம் தொடரும். எதிர்வரும் 22ஆம் திகதி டில்லிக்குச் சென்று நாடாளுமன்றத்திற்கு முன்பாக அமர்ந்து போராட்டம் நடத்துவோம். தினமும் 200 பேர் போராட்டத்தில் ஈடுபடுவார்கள்''- என்றார்.

# கண்டிப்பாக அரசியலுக்கு வருவேன் கட்சி வீணாவதை பார்த்துகொண்டிருக்க மாட்டேன்!

## - சின்னம்மா சசி திட்டவட்டம் -

கட்சி வீணாவதை பார்த்துக்கொண்டு இருக்க முடியாது என்றும் கண்டிப்பாக அரசியலுக்கு வருவேன் என்றும் சசிகலா திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டசபைத் தேர்தலுக்கு முன்னர், தான் அரசியலிலிருந்து ஒதுங்கியிருக்கப் போவதாக அறிவித்த சசிகலா, தற்போது தினமும் அ.தி.மு.க. தொண்டர்களிடையே பேசி வருகிறார்.

அந்த வகையில், நேற்றுமுன்தினம் அ.தி.மு.க. ஆதரவாளர்கள் பலருடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

அதில், ''அ.தி.மு.க .தொண்டர்களின் மனக்குமுறல் அதிகமாக இருக்கிறது. அதனால் இனிமேலும் சும்மா இருக்க முடியாது. கட்சிக்கு நிச்சயம் தலைமை ஏற்பேன்'' - என்று சசிகலா தொண்டர்களிடம் தொலைபேசியில் பேசியுள்ளார்.



இந்நிலையில், சேலத்தைச் சேர்ந்த கோவிந்தராஜ் என்பவரிடம் தொலைபேசியில் சசிகலா பேசும் ஓடியோ வெளியாகியுள்ளது. அந்த ஓடியோவில் பேசிய சசிகலா,

''நிச்சயம் அரசியலுக்கு வருவேன். இனிமேலும் கட்சி வீணாவதை பார்த்துக்கொண்டு இருக்கமாட்டேன். அம்மாவோட ஆட்சியை தொடர்வதுதான் என்னுடைய எண்ணமாக இருந்தது.

ஆனால், அவர்கள் அதற்கு ஒத்துழைக்க வராமல் தனியாகவே நிற்கிறோம் என்று கூறி தேர்தலில் நின்று வெற்றிவாய்ப்பை இழந்துவிட்டனர். அ.தி.மு.க. தொண்டர்களின் கடிதங்கள் வந்தவண்ணமுள்ளன. அதில் நான் வந்து கட்சியை எடுத்தால்தான் நல்லது என்று கூறுகிறார்கள். ஆகவே நிச்சயம் அரசியலுக்கு வருவேன்'' - என்றார்.

# ''நல்லா இருக்கிற தமிழ்நாட்டை ஏன் பிரிக்கணும்? இதை கேட்டாலே தலைசுத்துது'' - வடிவேலு



''தமிழ்நாட்டிலேயே ராம்நாடு இருக்கு, ஒரத்தநாடு இருக்கு, நல்லா இருக்கிற தமிழ்நாட்டை ஏன் பிரிக்கணும். இப்படி பிரித்துக்கொண்டே போனால் என்னாவது? இதெல்லாம் கேட்டாலே தலையெல்லாம் சுத்துது'' என வைகைபுயல் வடிவேலு தெரிவித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய கொங்குநாடு குறித்த கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், சென்னை தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்த நடிகர் வடிவேலு, கொரோனா தடுப்புப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 5 இலட்சம் ரூபா நன்கொடை வழங்கியுள்ளார்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசியபோது, உலகமே உற்றுநோக்கும் வகையில் தமிழகத்தில் ஆட்சிப்பொறுப்புக்கு வந்த ஒன்றரை மாதங்களில் கொரோனாவை கட்டுப்படுத்தியதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு புகழாரம் சூட்டினார்.

கொரோனா தடுப்பூசி போடும் திட்டத்தை விரைவுபடுத்தியதோடு, தகுந்த நேரத்தில் ஊரடங்கை அமுல்படுத்தி அத்தியாவசியப் பொருட்களின் விநியோகமும் தடையின்றி கிடைக்க நடவடிக்கை எடுத்ததாக முதலமைச்சருக்கு பாராட்டு தெரிவித்த வடிவேலு, இது மக்களுக்கான பொற்கால ஆட்சி என்றார்.

கடந்த காலங்களில் தி.மு.கவுக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரம் மேற்கொண்டதால் தான் படவாய்ப்புகளை இழந்ததாக பேசப்படும் கருத்துக்கு பதிலளித்த வடிவேலு, ''இனிமேல் கண்டிப்பாக நல்லதே நடக்கும்'' என நம்பிக்கை தெரிவித்தார்.

மக்கள் கொரோனா விழிப்புணர்வுடன் செயற்படுகின்றனரா என்ற கேள்விக்கு, தான் நடித்த திரைப்படத்தில் வரும் நகைச்சுவை காட்சியை சுட்டிக்காட்டி பதிலளித்தார்.

சினிமா ஓ.டி.டி. என்ற அடுத்தகட்ட பரிணாமத்தில் சென்று கொண்டிருக்கிறது என்ற வடிவேலு, தொழில்நுட்பத்தின் வளர்ச்சிக்கும், காலத்திற்கும் தகுந்தாற்போல் நாமும் கற்றுக்கொள்ள வேண்டும் என்றார். கடைசியாக, தமிழ்நாட்டை இரண்டாக பிரிக்க வேண்டும் என எழுந்துள்ள கோரிக்கை குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதிலளித்த அவர் தனக்கே உரிய நகைச்சுவை பாணியில், தமிழ்நாட்டிலேயே ராம்நாடு இருக்கு, ஒரத்தநாடு இருக்கு, நல்லா இருக்கிற தமிழ்நாட்டை ஏன் பிரிக்கணும் என்றார். இப்படி பிரித்துக்கொண்டே போனால் என்னாவது? இதெல்லாம் கேட்டாவே தலையெல்லாம் சுத்துது - என்றார்.

# விண்வெளி வீரராவதே எனது இலட்சியம்!!

## கோவை குறும்புடன் சமூக வலைத்தளங்களை கலக்கும் 7 வயது சிறுவன் பேட்டி

செய்தியாளர்களையும் செய்தி வாசிப்பாளர்களையும் கிண்டல் செய்து கோவையைச் சேர்ந்த 7 வயது சிறுவன் ரித்விக் நடித்த யூடியூப் வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

கோவையைச் சேர்ந்த ஜோதி ராஜ் என்பவரின் மகன் ரித்விக். 2ஆம் வகுப்பு மாணவனான சிறுவன் ரித்விக் நகைச்சுவை வீடியோக்களில் நடித்து சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் வருகிறான். அண்மையில் இவர் செய்தியாளர்களையும் செய்தி வாசிப்பாளர்களையும் கிண்டல் செய்து வெளியிட்ட வீடியோ அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.




தன்னுடைய யூடியூப் வீடியோக்களை தன்னுடைய தந்தையே எழுதி இயக்குவதாகவும் எந்த உள்நோக்கமுமின்றி நகைச் சுவைக்காகவே காட்சிகள் உருவாக்கப்படுவதாகவும் சிறுவன் ரித்விக் கூறியிருக்கிறார். விண்வெளி வீரனாவதே தன்னுடைய இலட்சியம் எனக்கூறும் ரித்விக்கை தேடி தற்போது திரைப்பட வாய்ப்புகள் குவிந்து வருகின்றன. 7 வயது சிறுவன் ரித்விக் தன்னுடைய நகைச்சுவை உணர்வால் அனைவரையும் ஈர்த்து வருகிறார்.

தற்போது பத்திரிகை முகவர்களிடம் பெறலாம்




விலை ரூ 30

தொடர்புகளுக்கு : 0777 983308 - விநியோகப்பிரிவு

# ஒரே போட்டியில் இரு சாதனைகளை நிகழ்த்திய பாபர்



இங்கிலாந்து அணியுடன் நடைபெற்ற மூன்றாவதும், இறுதியுமான ஒருநாள் சர்வதேச போட்டியில் சதமடித்து அசத்திய பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அஸாம் ஒரே போட்டியில் இரு சாதனைகளுக்கு சொந்தக்காரராக மாறியுள்ளார்.

இங்கிலாந்து அணியுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் சர்வதேச போட்டியின் போது பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்டத்தில் அணியின் தலைவர் பாபர் அஸாம் 139 பந்துகளை எதிர்கொண்டு 4 சிக்ஸர்கள், 14 பவுண்டரிகள் அடங்கலாக மொத்தமாக 158 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார். இந்தப் போட்டியில் பாபர் அஸாம் சதம் கடந்ததைத் தொடர்ந்து ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் தனது 14ஆவது சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இதன்மூலம் ஒருநாள் அரங்கில் குறைந்த இன்னிங்ஸ்களில் 14 சதங்களை கடந்த வீரர் என்ற ஹஸிம் அம்லாவின் சாதனையை பாபர் அஸாம் முறியடித்தார். ஹஸிம் அம்லா 84 இன்னிங்ஸ்களில் பெற்ற 14 சதங்களை பாபர் அஸாம் 81 இன்னிங்ஸ்களில் முறியடித்துள்ளார்.

இதேவேளை ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் 150 ஓட்டங்களைக் கடந்த முதலாவது பாகிஸ்தான் அணித்தலைவர் என்ற சாதனையையும் பாபர் அஸாம் நேற்றைய போட்டியினூடாக படைத்தார்.

# வரலாற்று ஒருநாள் வெற்றியை பதிவு செய்த அயர்லாந்து

சுற்றுலா தென்னாபிரிக்க அணியுடனான இரண்டாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் அயர்லாந்து அணி 43 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தென்னாபிரிக்க அணியுடன் முதலாவது வரலாற்று ஒருநாள் சர்வதேச வெற்றியைப் பதிவு செய்தது.

டெம்பா பவுமா தலைமையிலான தென்னாபிரிக்கக் கிரிக்கெட் அணியானது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 தொடர்களில் விளையாடுவதற்காக அயர்லாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இருதரப்புச் சுற்றுப்பயணத்தின் முதல் தொடரான 3 போட்டிகள் கொண்ட ஐ.சி.சி. உலகக்கிண்ண சுப்பர் லீக் தொடரின் ஒருநாள் சர்வதேச தொடர் தற்சமயம் நடைபெற்று வருகிறது.

முதலாவது போட்டி மழை காரணமாக கைவிடப்பட்ட நிலையில், இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் டப்ளினில் நடைபெற்றது.

போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. அதன் பிரகாரம் முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 290 ஓட்டங்களைக் குவித்தது.

291 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 48.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்களையும் இழந்து 247 ஓட்டங்களை மாத்திரம் பெற, 43 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அயர்லாந்து அணி வெற்றி பெற்று வரலாற்று வெற்றியைப் பதிவு செய்தது.

போட்டியின் ஆட்டநாயகனாக சதமடித்து அசத்திய அயர்லாந்து அணியின் தலைவர் அண்டி பெல்போர்னி தெரிவானார். இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவதும், இறுதியுமான ஒருநாள் சர்வதேசப் போட்டி நாளை இதே மைதானத்தில் நடைபெறவுள்ளது.



**போட்டியின் சுருக்கம்**

***அயர்லாந்து - 290/5 (50)***

துடுப்பாட்டம் : அண்டி பெல்போர்னி 102 (117), ஹரி டொக்டர் 79 (68)

பந்துவீச்சு : அண்டில் பெஹ்லுக்வாயோ 2/73 (10), தப்ரிஸ் ஷம்ஷி 1/42 (10)

***தென்னாபிரிக்கா – 247/10 (48.3)***

துடுப்பாட்டம் : ஜெனீமன் மாலன் 84 (96), ரைஸ் வென்டர் டைஸன் 49 (70)

பந்துவீச்சு : அண்டி மெக்பிரைன் 2/34 (7), மார்க் அடியர் 2/43 (8.3), ஜொஸ் லிட்டில் 2/45 (10)

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# ஒலிம்பிக்கிலிருந்து விலகிய பெடரர்



32 ஆவது ஒலிம்பிக் போட்டிகள் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் உலகின் நட்சத்திர டென்னிஸ் வீரர்களில் ஒருவரான சுவிட்ஸர்லாந்து நாட்டைச் சேர்ந்த ரொஜர் பெடரர் ஒலிம்பிக் போட்டிகளிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள டோக்கியோ ஒலிம்பிக் 2020 இன்னும் ஒரு வாரத்தில் ஆரம்பமாகவுள்ள நிலையில் டென்னிஸ் போட்டிகளிலிருந்து நட்சத்திர வீர, வீராங்கனைகளான ரஃபேல் நடால், செரீனா வில்லியம்ஸ் உள்ளிட்ட பலர் கொரோனா வைரஸ் அச்சுறுத்தலை கருத்திற்கொண்டு அப்போட்டிகளிலிருந்து விலகுவதாக அறிவித்தனர். இந்நிலையில் மற்றுமொரு நட்சத்திர வீரரான சுவிட்ஸர்லாந்து நாட்டைச் சேர்ந்த ரொஜர் பெடரர், முழங்காலில் ஏற்பட்ட உபாதை காரணமாக ஒலிம்பிக் போட்டிகளிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். ஒலிம்பிக் போட்டிகளிலிருந்து விலகுவது தனக்கு மிகுந்த ஏமாற்றமளிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.




# இளம் வீரர்களைக் கொண்டு பாகிஸ்தானை வெள்ளையடிப்பு செய்த இங்கிலாந்து



சுற்றுலா பாகிஸ்தான் அணிக்கும், இங்கிலாந்து அணிக்குமிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரை பென் ஸ்டோக்ஸ் தலைமையிலான இங்கிலாந்து அணி 3-0 என்ற அடிப்படையில் கைப்பற்றி பாகிஸ்தான் அணியை தங்களது சொந்த மண்ணில் வைத்து வெள்ளையடிப்பு செய்துள்ளது.

பாபர் அஸாம் தலைமையிலான பாகிஸ்தான் கிரிக்கெட் அணியானது தலா 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 தொடர்களில் விளையாடுவதற்காக இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. பாகிஸ்தான் அணியுடனான தொடரில் விளையாடுவதற்காக வெளியிடப்பட்ட ஒயின் மோர்கன் தலைமையிலான இங்கிலாந்து குழாமில் இடம் பெற்றிருந்த சில வீரர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து அனைத்து வீரர்களும் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில், பென் ஸ்டோக்ஸ் தலைமையில் ஒன்பது அறிமுக வீரர்களுடன் புதிய இங்கிலாந்து குழாம் அறிவிக்கப்பட்டு பாகிஸ்தான் அணியுடன் பலப்பரீட்சை நடத்தியது.

முதலிரு போட்டிகளிலும் இங்கிலாந்து அணி வெற்றி பெற்று தொடரை தன்வசப்படுத்தியிருந்த நிலையில், மூன்றாவதும் இறுதியுமான போட்டி நேற்று பர்மிங்ஹமில் நடைபெற்றது. போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 331 ஓட்டங்களை குவித்தது. 332 என்ற கடின வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய இங்கிலாந்து அணி 48 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்த நிலையில் 332 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

இந்த வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி இளம் வீரர்களை வைத்து பாகிஸ்தான் அணியை 3-0 என்ற அடிப்படையில் வெள்ளையடிப்பு செய்திருந்தமை தற்போது மிகப்பெரிய பேசுபொருளாக மாறியிருக்கிறது.

போட்டியின் ஆட்டநாயகனாக சதமடித்து அசத்திய இங்கிலாந்து வீரர் ஜேம்ஸ் வின்ஸ் தெரிவான அதேவேளை, தொடர் ஆட்டநாயகனாக பந்துவீச்சில் அசத்திய இங்கிலாந்து வேகப்பந்துவீச்சாளர் ஷாகிப் மஹ்மூத் தெரிவானார்.

இரு அணிகளுக்குமிடையிலான அடுத்த தொடரான 3 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரின் முதல் போட்டி நாளை நொட்டிங்ஹமில் ஆரம்பமாகவுள்ளது.

**போட்டியின் சுருக்கம்**

***பாகிஸ்தான் - 331/9 (50)***

துடுப்பாட்டம் : பாபர் அஸாம் 158 (139), மொஹமட் றிஸ்வான் 74 (58)

பந்துவீச்சு : பிரைடன் கார்ஸ் 5/61 (10), ஷாகிப் மஹ்மூத் 3/60 (10)

***இங்கிலாந்து – 332/7 (48)***

துடுப்பாட்டம் : ஜேம்ஸ் வின்ஸ் 102 (95), லுவிஸ் கிரேகரி 77 (69)

பந்துவீச்சு : ஹாரிஸ் ரௌப் 4/65 (9), சதாப் கான் 2/61 (10)

# 'ஒலிம்பிக் கிராமம்' திறந்து வைப்பு

2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கவுள்ள வீர, வீராங்கனைகளைத் தங்க வைப்பதற்காக உருவாக்கப்பட்டிருந்த 'ஒலிம்பிக் கிராமம்' நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

32ஆவது டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் எதிர்வரும் 23ஆம் திகதி முதல் ஒகஸ்ட் மாதம் 8ஆம் திகதி வரை டோக்கியோ நகரின் பல்வேறு இடங்களில் நடைபெறவுள்ள நிலையில், போட்டிகளில் பங்கேற்கவுள்ள வீர, வீராங்கனைகளை பாதுகாப்பாக வைத்திருப்பதற்காக 'ஒலிம்பிக் கிராமம்' உருவாக்கப்பட்டது. 205 நாடுகளைச் சேர்ந்த 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கவுள்ளனர்.











# ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் 2021 – 2023; ஆறு அணிகளுடன் பலப்பரீட்சை நடத்தும் இலங்கை

ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இரண்டாவது பருவகாலத்திற்கான போட்டி அட்டவணை சர்வதேச கிரிக்கெட் பேரவையினால் நேற்று வெளியிடப்பட்டது. அதன்படி இலங்கை அணி சொந்த மண்ணில் மேற்கிந்திய தீவுகள், அவுஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய அணிகளுடனும், வெளிநாட்டில் பங்களாதேஷ், நியூஸிலாந்து மற்றும் இந்தியா ஆகிய அணிகளுடனும் மோதவுள்ளது.

கடந்த 2019 – 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் பங்குபற்றிய அதே 9 அணிகள்தான் 2021 – 2023 டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரிலும் பங்கேற்கவுள்ளன. டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இரண்டாவது பருவகாலத்திற்கான தொடரானது எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 4ஆம் திகதி ஆரம்பமாகும், இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருடன் ஆரம்பமாகிறது.

இதன்போது ஒரு அணிக்கு மொத்தமாக 6 தொடர்கள் காணப்படுகின்றன. இதில் சொந்த நாட்டில் மூன்று தொடர்களும், வெளிநாட்டில் மூன்று தொடர்களும் நடைபெறவுள்ளன. ஆனால், ஒவ்வொரு அணிகளுக்கிடையிலான தொடரின் போட்டிகளில் வித்தியாசம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7